# மாருதம்

சமூக, கல்வி, கலை, இலக்கிய சஞ்சிகை - 2015, 2016 இதழ் 16

ISSN 1800 - 4873

100/-



## வன்னியூர்க் கவிராயர்

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம்

# வவுனியா ப.நோ.கூ.சங்கம் (வ-து)

நுகர்ச்சிப் பொருட்கள் விற்பனைச் சேவை
கோப் சிற்றி மினி கோப் சிற்றி சேவை
ஒப்பந்த சேவைகள்
உலக உணவுத்திட்ட பொருட்கள் விநியோகம்
கிராமிய வங்கிச் சேவைகள்
பாலர் முன்பள்ளிச் சேவை.
புதிய வேலை வாய்ப்புகளை வழங்குதல்.
வாகன சேவை
கலாசார மண்டப சேவை.
அரிசிமா உற்பத்தி, நல்லெண்ணெய் உற்பத்தி.

---

**பொதிமண்டப வீதி,**
**வவுனியா.**
**தொ.பே.இல. 024 2222384, 024 2220131**

# மாருதம்

## இதழ் 16

ஆரம்பம் : மாசி முழுநிலா 1997

ஓயுதல் செய்யோம் – தலை
சாயுதல் செய்யோம்
உண்மைகள் சொல்வோம் – பல
வண்மைகள் செய்வோம்

**ஆசிரியர்கள் :**

கலாநிதி தமிழ்மணி அகளங்கன்

கலாநிதி கந்தையா ஶ்ரீகணேசன்

**உதவி :**

திரு.த.பிரதாபன்

செல்வி.து.நந்தீஸ்வரி (நந்தா)

**அச்சு:**

வாணி கணனிப் பதிப்பகம்,
இல.79, கந்தசாமி கோவில் வீதி,
வவுனியா.

024 2223658

**இலச்சினை : ப.சிவஅன்பு**

தொடர்புகட்கு:

1. கலாநிதி அகளங்கன்
   90, திருநாவற்குளம்,
   வவுனியா. 024 2221676

2. கலாநிதி.கந்தையா ஶ்ரீகணேசன்
   166 செல்வபவனம்
   சுதுமலை வடக்கு,
   மானிப்பாய். 021 2255902

**ISSN: 1800-4873**

## நண்பர்களுக்கு மட்டும்

## உள்ளே.....

| | |
|---|---|
| அட்டைப்பட அதிதி | 03 |
| அநியாயக் கல்வியிலே | 08 |
| வசந்தத்தின் பிறப்பு | 10 |
| மாணவச் சாதனையாளர் விருது | 11 |
| வைத்தியத்துறையில் | 13 |
| தாலாட்டுப் பாட | 18 |
| விநாயகர் படிமம் | 19 |
| தொட்டிலாடும் | 22 |
| தமிழிலக்கியத்தில் | 24 |
| தமிழினியன் ப.எ.அன்ரன் | 29 |
| திருமதி இமெல்டா ஜெயநாயகி | 30 |
| ஆக்கபூர்வமான | 35 |
| தழைத்திட வேண்டும் | 37 |
| திருமதி சிறி செயானந்தபவன் | 39 |
| எங்கே போகுது எதிர்காலம் | 41 |
| தீக்குஞ்சு | 43 |
| அன்னையின் தாலாட்டு | 48 |
| பழந்தமிழ்ப் பாடல்களில் | 49 |
| நல்ல நாட்கள் வருகின்றன | 54 |
| வாழ்த்துகிறோம், | 55 |
| 2015இல் வவுனியா கலை இலக்கிய | 56 |
| பாரதிதாசனும் சினிமாவும் | 60 |
| வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் | 80 |
| அமரர் சிவபாலன் | 83 |
| மானுடம் வெல்வதா | 86 |
| தீக்கோழிகள் | 87 |
| திருமண வாழ்த்து | 92 |
| சிருஷ்டி | 94 |
| வவுனியா மாவட்டத்தில் | 97 |
| போர் தின்ற ஆடை | 103 |
| பதிவுகள் வேண்டும் | 104 |

**வெளியீடு: வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம்**

பதிவிலக்கம் : வட.மா/க.அ/பண்/வவு/வவு/2013/02 தொடக்கம் : 1997 மாசி முழுநிலா

Published By: Circle of Arts and Literary Friends - Vavuniya, Sri Lanka. Estd: Feb. 1997
Editors : Dr.Agalangan & Dr.Kandiah Shriganeshan Email: kshriganeshan@yahoo.com

## மாருதம் வாசக அன்பர்களே !

மாருதம் 16, இதழில் உங்களைச் சந்திப்பதில் பெரும் மகிழ்வு கொள்கிறோம். வட்டம் ஆரம்பிக்கப்பட்டு பத்தொன்பது ஆண்டுகளைக் கடந்தநிலையில் பதினெட்டு, பத்தொன்பது ஆகிய இரண்டு ஆண்டுகளுக்கும் சேர்த்து இந்த இதழ் வெளிவருகிறது.

1997 மாசி மாத முழு நிலா நாளில் ஆரம்பிக்கப்பட்ட எமது வட்டம் மாதாந்த முழுநிலாக் கருத்தாடல்கள், ஆண்டுவிழாக்கள் ,கௌரவிப்புகள், நூல் வெளியீடுகள், சமூகம் சார்ந்த உதவிகள், முதலானவற்றோடு மாருதம் சஞ்சிகையையும் வெளியிட்டு வருகிறது.

இந்த ஆண்டில் மாணவச் சாதனையாளர் விருது அறிவிக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுகிறது.

கடந்த ஆண்டு விழாவில் வெளியிடப்பட்ட மாருதம் 15இன் அட்டைப்பட அதிதியாகக் கௌரவிக்கப்பட்ட எமது காப்பாளர்களில் ஒருவரான கலாநிதி முல்லைமணி அவர்களுக்கு சாகித்தியரத்னா விருது கிடைத்ததை நினைத்து மகிழ்கிறோம்.

செட்டிகுளத்தில் சிலை வைத்து நினைவு கூரப்பட்டிருக்கும் வன்னியூர்க் கவிராயர் இந்த இதழின் அட்டைப்பட அதிதியாக கௌரவிக்கப்படுகின்றார்.

பதினெட்டு, பத்தொன்பது ஆகிய இரண்டு ஆண்டுகளுக்கும் சேர்த்து ஒரேவிழாவாக ஆண்டுவிழா நடத்தப்படுகிறது. இவ்விழாவில் வைத்தியத் தம்பதிகள்,டாக்டர்கள் சு.சின்னத்துரை, திருமதி செந்தில் வள்ளி ஆகியோரும், ஆங்கிலக் கல்வித்துறை சார்ந்த திருமதி இமெல்டா ஜெயநாயகி சிவகுரு அவர்களும் கௌரவிக்கப் படுகிறார்கள்.

மாருதம் புதுப் பொலிவோடு பயனுள்ள ஆக்கங்களைத் தாங்கி வெளிவர உதவிய அனைத்து நண்பர்களுக்கும் எமது நன்றி. வவுனியா மாவட்டம் அனைத்துத் துறைகளிலும் வளர்ச்சியடையப் பாடுபடுவோம். பயனடைவோம். மீண்டும் அடுத்த இதழில் சந்திப்போம்.

நன்றி.

வணக்கம்.

ஆசிரியர்கள்

# வன்னிப் பண்பாட்டை எழுத்தில் வடித்த வன்னியூர்க்கவிராயர்



கலாநிதி.கந்தையா ஸ்ரீகணேசன்

**"தாய் வயிற்றில் தவ நிலையிலிருந்து துள்ளித்
தான் குதிக்க ஏந்தித் தாலாட்டும் மண்ணே
சேயாகிச் சிரித்து விளையாடித் தின்ற
அமுத மண்ணே இனித்த மண்ணே"**

என தமது மண்ணை ஏற்றிப் போற்றிய இனிய கவிஞர் எஸ்.எல். சவுந்தர நாயகம் என்னும் இயற்பெயர் கொண்ட வன்னியூர்க் கவிராயர் வவுனியா மாவட்டத்தின் வெங்கலசெட்டிக்குளம் உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இயற்கை வளம் கூட்டிய இலுப்பைக்குளம் கிழக்கில் 04.04.1921 இல் பிறந்தவர்.

குளங்களும் வயல்களும் நிறைந்த மருத நிலச்சூழல் ஒரு புறமும் அடர்ந்த காடுகள் சூழ்ந்த முல்லை நிலச்சூழல் மறுபுறமுமாக அமைந்த வன்னி நிலப்பரப்பு கடற்கரையோரங்களில் நெய்தல் நிலப்பரப்பாக பரந்து விரிந்த அழகிய இயற்கை வனப்போடு கூடிய பிரதேசம் ஆகும். இயற்கையோடு ஒட்டிய வாழ்வும், அதன் கஷ்ட நஷ்டங்களை எதிர்த்துப் போராடி வாழ்வை எதிர்கொள்ளும் மனோதிடமும் கொண்ட மனிதர்களைப் பெற்ற வன்னி மண்ணின் மனிதவளமும் மங்காப் புகழ்பெற்றவை.

பூர்வீகமாக வாழ்ந்து வரும் மக்களின் குடியிருப்புகளோடு தமிழ் நாட்டில் இருந்து வந்த படைகளின் வன்னிமைகளின் குடியேற்றத்துடன் வன்னிவளநாடு எனப்பெயர் பெற்ற இப்பூமி தேனும் பாலும், செந்நெல்லும், கிழங்கும் தானியங்களும் என வளம் பொருந்திய பிரதேசமாக பண்டாரவன்னியன் எனும் பெயர் பெற்ற வன்னிவள நாட்டின் பெருமையைக் கட்டிக்காத்த மறவனின் வீரத்துடன் வீரம் செறிந்த நிலமாக பல பெருமைகளை சிறப்புக்களை கொண்டதிந்தப்பூமி. காலனித்துவ ஆட்சிக்குப் பின் இலங்கை சுதந்திரமடைந்ததோடு புதிய குடியேற்றத்திட்டங்கள் வன்னிப் பிரதேசத்தை புதிய அபிவிருத்திப் போக்கில் இட்டுச் சென்றது. அத்தகைய சிறப்புக்களுடன் கூடிய இம்மண்ணின் புகழ் பாடும் கவிஞர்களாக எழுத்தாளர்களாக

மூன்று முக்கிய கனவான்கள் சிறப்புப் பெறுகிறார்கள். அவர்களில் முன்னோடியாக திகழ்பவர் அமரர் எஸ்.எல்.சவுந்தரநாயகம். மற்றைய இருவர் பண்டார வன்னியன் நாடகத்தை எழுதி பெயர் பெற்ற முல்லைமணி எனும் வே.சுப்பிரமணியம். மற்றையவர் பம்பைமடுவில் பிறந்து வன்னியின் புகழ் பாடும் கவிஞர் அகளங்கன் ஆகியோர்.

மன்னார் கூத்துப்பரம்பரையிலிருந்து சிறப்புப் பெற்ற இவரின் தந்தையார் சந்தியோகுப்பிள்ளை இலுப்பைக்கடவை நேரியகுளம் பிரதேசத்தில் மணமுடித்து வாழ்வை வரித்துக்கொண்டமையினால் வன்னியூர்க் கவிராயரின் பூர்வீகம் என இப்பிரதேசம் சிறப்புப் பெறுகிறது.

பரம்பரைத் தொழிலான சித்த வைத்தியத்துறையில் நாட்டம் கொண்டதோடு தமிழ் இலக்கிய இலக்கண நூல்களை கற்றுத் தேறினார் கவிஞர். யாப்பிலக்கணம் கற்றார். மன்னார் நல்லாயன் பாடசாலையில் பெற்றுக்கொண்ட தமிழ் அறிவும், கிறீஸ்தவ பண்பாட்டுச் சிறப்பும் நல்வழியில் கவிராயரை இட்டுச் சென்றன.

மரபுக்கவிதைகளை இயற்றி புகழ் பெற்ற கவிஞர் மிகவும் சிக்கலான கவி வடிவங்களான நாகபந்தம், சக்கரபந்தம், தேர்ப்பந்தம், நீரோட்டம் ஆகிய சித்திரக்கவிதைகளை அநாயாசமாக எழுதும் திறன் பெற்றவர். கவிதைகள் பல அறுபதுகளில் ஈழநாடு, சுதந்திரன், சிந்தாமணி, வீரகேசரி, தினகரன் ஆகிய நாளிதழ்களிலும் கலைச்செல்வி, விவேகி ஆகிய சஞ்சிகைகளிலும் வெளிவந்தன.

1953 இல் எழுத்துலகில் பிரவேசித்த சவுந்தரநாயகம், வன்னியூர்நாயகம், மனோகரி, எஸ்.எல்.எஸ், பாவேந்தர், வன்னியூர்க்கவிராயர் எனப் பல புனை பெயர்களிலும் சிறுகதை, கவிதை, உருவகக் கதை, கட்டுரை என்பனவற்றை எழுதிப் புகழ்பெற்றார். வவுனியா நகரில் இருந்து 30 - 50 கிலோமீற்றர் தூரத்தில் பிரதான பாதையிலிருந்தும் மாட்டுவண்டி மூலமே பயணம் பண்ணிய அந்த 50 - 70 காலங்களில் நாடளாவிய ரீதியில் வெளிவரும் பத்திரிகைகளில் எழுதியதோடு மட்டுமல்லாமல் பல்வேறு கவி அரங்குகளிலும் மேடை ஏறிப் பாடியுள்ளார்.

அது மட்டுமல்லாமல் 70 களில் பெயர் பெற்று விளங்கிய எழுத்தாளர்கள் பலருடனும் தொடர்புகளைப் பேணியுள்ளார். டானியல், செங்கை ஆழியான் போன்றவர்கள் குறிப்பிடத் தகுந்தவர்கள்.

1953இல் எழுதத் தொடங்கிய கவிராயர் 1973இல் தாம் எழுதிய 15 சிறுகதைகளை **ஈழத்து காவியதீபகம்** எனும் பெயரில் தொகுத்து திருச்செல்வி அச்சகத்தில் அச்சிட்டு வெளியிட்டார். எழுத்தாளர் டானியல் மற்றும் திரு.பொ நல்லையா ஆகியோர் உதவி பெரிதும் கவிராயரால் பாராட்டப்பட்டது. கிளிநொச்சி இலக்கிய அன்பர் திரு.க.இரத்தினசிங்கம் அவர்கள் கவிராயரின் இலக்கியப் பணிபற்றி சிலாகித்துக்கூறுவார். இவர்களோடு முல்லைமணி வே.சுப்பிரமணியம், பூந்தோட்டம் மு.சிவலிங்கம், சுவடித் திணைக்கள அலுவலர் திரு.க.நவசோதி ஆகியோரும் கவிராஜரின் கவிதைகள், கதைகள் பற்றி விமர்சனக்கட்டுரைகள் எழுதியுள்ளார்கள். கவிராஜரின் கவிதைகள், சிறுகதைகள் கொண்ட தொகுப்பு அவர் விரும்பிய தலைப்பான 'அமுதகங்கை' எனும் பெயரில் 2004ம் ஆண்டில் வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தினரால் வெளியிடப்பட்டது. சுவடித் திணைக்களத்துக்குச் சென்று பழைய பத்திரிகைகளைப் புரட்டித் தேடி எடுத்த 20 கவிதைகளும் ஈழத்து காவிய தீபகம் தந்த 15 சிறுகதைகளின் மறுபிரசுரம் மற்றும் திரு.நவசோதி, திரு.மு.சிவலிங்கம், திரு முல்லைமணி ஆகியோர் எழுதிய விமர்சன கட்டுரைகளுடன் அந்த நூல் சிறப்புற எதிர்கால ஆயாவாளர்களுக்காக கந்தையா ஸ்ரீகணேசன் மற்றும் தமிழ்மணி அகளங்கன் ஆகியோரால் தொகுக்கப்பட்டு வெளியிடப்பட்டது.

பின்னர் 2015 இல் நேரியகுளத்தில் கவிராயருக்கு அவர்தம் இலக்கிய வாரிசுகள், நண்பர்கள், ஊரவர்களால் சிலைவைக்கப்பட்ட வேளையில், வவுனியா தேசிய கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர் திருமதி நெலோமி குருஸ் அவர்கள் தொகுப்பில் வன்னியூர்க்கவிராயர் கவிதைகள் வெளியிடப்பட்டது. அத்தோடு ஈழத்துக்காவிய தீபம் மற்றும் சிலை திறப்புவிழா மலர் என்பன வெளியிடப்பட்டு வடக்கு மாகாண முதலமைச்சர் திரு.சி.வி.விக்னேஸ்வரன் அவர்களால் சிலையும் திறந்து வைக்கப்பட்டு கவிஞர் அவர்கள் போற்றப்பட்டமை கவியுலகுக்கு கிடைத்த வெற்றியாகும்.

**"எல்லோரும் ஓர் குலம் எல்லோரும் ஓர் இனம்**
**எல்லோரும் இந்நாட்டு மன்னர்கள் என்று**
**எல்லோரும் இன்றும் என்றும் வாழ்ந்திட**
**'நான்' - நாம் ஆகச் செய் சிந்தனையை"**

எனப்பரந்த உள்ளம் கொண்ட கவிஞரின் சிந்தனைகள்

கவிதையில் எதிரொலித்தன. ஒரு கிறிஸ்தவராக இருந்தாலும் சமய சமரசம் கொள்வதில் சிறப்புக் கொண்ட கவிராயர் பாரதிபோல பலவற்றைக் கேட்டும் அவற்றில் உச்ச நிலையாக தமிழன் வாழ்வுபற்றி கோரிக்கை விடுக்கின்றார்.

**"என்கவிதை நீடூழி வாழவேண்டும்**
**எனது புகழ் மலை விளக்காய் இலங்க வேண்டும்**
**பொன்வேண்டும், பொருள்வேண்டும், பூமி வேண்டும்**
**பூவை தெய்வானை - வள்ளி சகிதம் நின்னை**
**கண்கள் சிந்தை பூரிக்கக் காணவேண்டும்**
**காயத்திற் பிணி மூப்புச் சாக்காடற்ற**
**குன்றாத எழிலிளமை வேண்டும் - இந்தக்**
**குவலயத்தில் பிறப்புடனே முத்தி வேண்டும்**
**இன்னவைகள் கேட்கின்றேன், சம்பிரதாயம்**
**இவைகளை நீ தந்தாலும் தராவிட்டாலும்**
**உன்னிடத்தில் யான் கேட்பதொன்றேயொன்று**
**உடல் பொருள் ஆவி ஆத்மாவில் மேலாம் - என்**
**அன்னைமொழி இனியமொழி தமிழ் ஈழத்தில்**
**அரியணையில் அனவரதம் வாழ வேண்டும்**
**நன்நயமார் இவ்வரத்தைத் தரத்தான் வேண்டும்**
**நானிலத்தோர் போற்று கதிர்காமக் கந்தா!**

அவரது சிறுகதைகளின் தலைப்புக்களே கவித்துவமானவை. வன்னி, யாழ்ப்பாணம், மட்டக்களப்பு, மலையகம் என பரந்து விரிந்த களங்களில் அவ்வப் பிரதேச மொழி வழக்கில் சாதாரண வாழ்வின் ஏழ்மையும் வாழ்வின் ஏற்ற இறக்கங்கள், ஏக்கங்கள், இறுக்கங்கள் என பல்வகைத் தன்மையதான கருப்பொருட்களுடன் எழுதப்பட்டவை. 'வெள்ளிதிசை', 'பொங்கல் பரிசு', 'விளைநிலம்', 'கர்வத்தின்முடிவு', 'தகரவிளக்கு', 'ஓட்டப்பந்தயம்' என தலைப்புகள் அமைந்துள்ளன.

இரசிகமணி கனகசெந்திநாதன் 1964 இல் கவிராயர் பற்றி பின்வருமாறு பதிவுசெய்துள்ளனர்.

"வன்னியூர்க் கவிராயர் வன்னிநாட்டுக்குப் புகழ் தேடித் தந்த கவிஞராவர். அடங்காப்பற்றில் வாழ்ந்தாலும் பல கவியரங்குகளிலே அடக்கமான பாடல்களை அரங்கேற்றியுள்ளார். வன்னி நாட்டிலே இலக்கிய

மறுமலர்ச்சியைத் தோற்றுவிக்க வேண்டும் என்று உழைத்துவரும் அவர் ஒரு சுதேச வைத்தியராவர். எஸ்.எல்.சவுந்தரநாயகம் என்னும் தமது சொந்தப் பெயரில் சிறுகதைகளும் எழுதி வருகிறார்."

1988இல் 'வவுனியாவும் இலக்கிய வளர்ச்சியும்' எனும் நூலை எழுதி வவுனியா முத்தமிழ் கலாமன்றம் சார்பில் வெளியிட்ட ஓ.கே. குணநாதன் கவிராயர் பற்றி கூறுவதாவது:

"குன்றாத் நாட்டுப்பற்றும் மொழிப்பற்றும் கொண்ட கவிராயர் இலக்கியப் பணியோடு மாத்திரம் நின்று விடாமல் அரசியலிலும் குறிப்பிட்டளவு பணியாற்றியுள்ளார். சின்னச் செட்டிகுளம் கிழக்கு, இலுப்பைக்குளம் வேப்பங்குள வட்டார உறுப்பினராகவும் கிராம சபையின் துணைத் தலைவராகவும் போட்டியின்றி 1966இல் தெரிவு செய்யப்பட்டார்".

29.01.1978 இல் இவ்வுலக வாழ்வை நீத்து சென்ற கவிராயர் 24.01.1978இல் கிளிநொச்சியில் நிகழ்ந்த பொங்கல் விழா கவி அரங்குக்கு தலைமை தாங்கிப் பாடிய பாடல்கள்களே இறுதி இலக்கிய நிகழ்வாக பதிவு செய்யப்பட்டுள்ளது. இதற்கு முன்னதாக 1973இல் வவுனியா திறந்தவெளி அரங்கிலே நண்பர் முத்து சிவலிங்கம், பூநகர் மரியதாஸ், சரவணையூர் சுகந்தன் ஆகியோருடன் இணைந்து கவியரங்கு நிகழ்வுக்கு தலைமை தாங்கியமையும் பதிவு செய்யப்பட்டுள்ளது. சர்வமத நோக்கும் சர்வதேசக் கண்ணோட்டமும் கொண்ட கவிஞர் காதற்கவிதை மட்டுமல்லாமல் அரசியல் கவிதைகளும் எழுதியுள்ளார். சிறுவர் இலக்கியப்படைப்பாக பத்திரிகைகளின் மாணவர் பகுதிக்கு எழுதிய குயில் அறிவினைத்தேடு, தியாகியே என்பன இயற்கை வனப்பை பாடுவதும் அறிவூட்டும் கருத்துக்களைக் கொண்டதாகவும் அமைந்துள்ளன. புல தலைமுறைகளைத் தாண்டி நிலைகொள்ளும் கவிஞரின் வாழ்வு எமது தலைமுறையினருக்கு ஒரு முன்னுதாரணம் ஆகும் என்பதை வவுனியா கலை இலக்கிய நண்பர் வட்டம் அவரது சிலை திறப்பு விழா வருடத்தை ஒட்டி அட்டைப்பட நாயகராக வன்னியூர்க்கவிராயரைச் சிறப்புச் செய்து மகிழ்கிறது.

# அநியாயக் கல்வியிலே அறிவிழந்தோம்

## கவிஞர் அகளங்கன்

ஒருநெல்லில் ஒருநூறு நெல்லுண்டாக்க
ஒருமரத்தில் இன்னொன்றை ஒட்டிவைக்க
இருதயத்தை எடுத்துவிட்டு இன்னொன்றைத்தான்
இலகுவிலே பொருத்திஅதை இயங்கச்செய்ய
கருமுகிலை மழைபொழியச் செய்யச், சூரியக்
கதிரினொளி வீழாத நாட்டிலெல்லாம்
அருமையாய்க் கண்ணாடி ஆகாயத்தில்
அமைத்தங்கு ஒளிவெள்ளம் பரவச்செய்ய


கருவறையில் இல்லாமல் குழந்தைதன்னைக்
கருவாக்கி உருவாக்க மட்டும்அன்றிப்
பெருமையாய் இறந்தவரின் கலத்தைக்கொண்டு
பிள்ளைகளைப் பிறப்பிக்க, கண்காணாத
ஒருநாட்டில் இருந்தபடி நேரில்தோன்றி
ஒருநூறு கதைபேசக் கற்றுக்கொண்டோம்.
எருமைகளும் ஒற்றுமையாய் வாழும்ஆனால்
ஏன்கல்வி ஒற்றுமையைத் தரவேஇல்லை.

அணுக்குண்டை நாம்படைத்தோம், ஆகாயத்தில்
அலைகின்ற போர்விமானம் அனைத்தும்இன்று
கணக்குவழக் கின்றிநாம் செய்துவிட்டோம்
கனரகமாம் வாகனங்கள், ஆயுதங்கள்
பிணக்குகளைத் தீர்ப்பதற்காய் செய்துவைத்துப்
பெருஞ்சண்டை பிடிக்கின்றோம், உலகேயுத்தம்
உணக்கிடந்த உணவாக மாறிப்போக
உழைத்தோமே உருப்படவா இவற்றைச்செய்தோம்.

(வேறு )

உடைஉடுக்க உயிர்படைக்க உதிரம் மாற்ற
ஊரூராய்ச் செய்திகளை ஒளிபரப்ப
நடைநடந்து களைக்காது விமானம் ஏறி
நாடெல்லாம் சுற்றிவர , ஆகாயத்தில்
படைநடத்தப், பல்லாயிரம் மைல்கள் தாண்டிப்
பறந்துசென்று சந்திரனில் கால்பதிக்க
விடைகாணா வினாக்களுக்கு விடையும் காண
விரைந்தின்று கல்விதனைக் கற்றுக்கொண்டோம்.

தடையின்றி மனிதகுலச் சமாதா னத்தை
சஞ்சலமில் லாதமனச் சந்தோசத்தை
அடைவதற்கு ஒருகல்வி கற்றோ மில்லை
அநியாயக் கல்வியிலே அறிவிழந்தோம்.
உடையின்றி வாழ்ந்தாலும் மனித வாழ்வு
ஒற்றுமையாய் வாழ்ந்தாலே நிறைவைக்காணும்.
கடைவைத்துக் கல்விதனை விலைக்குவிற்றுக்
காணாமல் செய்துவிட்டோம் கடையரானோம்



## வசந்தத்தின் பிறப்பு

நீ வசந்தத்தின் நம்பிக்கைக்குரியவர்
நீ ஓர் அப்பாவிக் குழந்தை
நீ எந்த நிழற்பகுதியிலிருந்து வந்தாயென்று
எனக்குத் தெரியவில்லை
எல்லையற்ற நேசத்துடன்
உன்னை எனது வளவில்
நாட்டியிருந்தேன்
கௌரவப்படுத்தியிருந்தேன்
வருடங்கள் ஓடிவிடும்
பட்டிதழ்களாலான இசையில்
உன் பாடலில்
நீ தந்த இசையில் கரைந்தபடியே
ஆத்மாவின் படிகத்திலே
வாசனையைப் பதிப்பாய்
அழகின் பெருமை
இளமையின் நினைவுகள்
எல்லாமே ஒரே தன்மையாய்
ஒருவரின் பிரதிபலிப்பில்
எல்லா வர்ணங்களும் மங்கிப் போகின்றன
வசந்தம் இங்கு இருக்கும்போது
நான் எங்கிருப்பேன் என்று எனக்குத் தெரியாது!
குழப்பத்தின் இலக்குகள் பாதைகளை உருவமைக்கின்றன
எனது தொடுகையை
எனது கனவுகளை
நீ மறந்திடுவாய்
ஆனால் நான் உன்னை நினைவில் கொள்வேன்
ஏனெனில் இயற்கை என்னுள்
ஒரு தாயைப் படைத்துள்ளது.

உருது மொழியிலிருந்து *Ada Jaffery*
ஆங்கில மொழியில் ராமிக் கன்வார்
**தமிழில் கந்தையா ஸ்ரீகணேசன்**

# மாணவச் சாதனையாளர் விருது – 2016

**வ**வுனியா மாவட்டத்தின் கல்வி, கலை, இலக்கிய சமூக முன்னேற்றத்திற்காக உழைத்து வருபவர்களை ஆண்டு தோறும் நடைபெறும் ஆண்டுவிழாக்களில் நாம் கௌரவித்துவருவது யாவரும் அறிந்ததே.

பாடசாலை மாணவர்களின் தமிழ் அறிவை வளர்க்கவும், அவர்களது கலை இலக்கிய ஈடுபாடுகளை அதிகரிக்கவும் மாணவச் சாதனையாளர் விருதை எமது வட்டம் இந்த ஆண்டிலிருந்து அறிமுகப் படுத்துகிறது.

அடுத்த தலைமுறையை உற்சாகப் படுத்தவும், ஊக்கப்படுத்தவும், மட்டுமன்றி தமிழ் அறிவோடும், தமிழ் உணர்வோடும், தமிழ்ப் பண்பாட்டோடும் வாழக்கூடிய தமிழர்களை உருவாக்கவும் இந்தத் திட்டம் வழி வகுக்கும் என நம்புகிறோம்.

வவுனியா மாவட்டப் பாடசாலை ஒன்றில் கல்வி கற்பவராயும், 2016 இல் க.பொ.த. உயார்தரப் பரீட்சைக்கு முதல் தடவை தோற்றுபவராயுமுள்ள மாணவர்களுக்கு மட்டுமே இப்போட்டி நடத்தப் பட்டது.

மாணவர்கள் தமது பாடசாலைக் காலத்தில் தமிழியல் சார்ந்த போட்டிகளில் பெற்ற சான்றிதழ்களை உரிய முறைப்படி அனுப்பியிருந்தார்கள். பாடசாலை அதிபர்களுக்கு எமது நன்றி.

எமது புள்ளித் திட்டப்படி தகுந்த நடுவர் குழுவினால் நான்கு மாணவர்கள் தேர்ந்தெடுக்கப் பட்டார்கள்.

**வவுனியா பண்டாரிகுளத்தில்** சிறப்போடு வாழ்ந்து அமரத்துவம் எய்திய, **ஓய்வுபெற்ற நீதிமன்ற முதலியார் அமரர் சபாரட்ணம் .தியாகராஜா** அவர்களின் நினைவாக அவரது மகனும், எனது மாணவனும், வவுனியா மாவட்டத்தின் கல்வி, கலை, இலக்கிய, சமூக வளர்ச்சியில் பெரிதும் அக்கறை கொண்டவரும், கவிஞருமாகிய **பொறியியலாளர் திரு.தி. மகேஸ்வரராஜா** அவர்கள் தனது தந்தையார் நினைவுப் பரிசாக இத்திட்டத்தை நடாத்த உதவுவதற்கு முன்வந்தார். அவருக்கு எமது மனமார்ந்த நன்றி.

**முதலியார் ச.தியாகராஜா** நினைவு மாணவச் சாதனையாளர் விருதைப் பெறுவோர் விபரம்

**செல்வி.கிறிஸ்ரினா இராமசாமி.** புதுக்குளம் மகாவித்தியாலயம். (தரணிக்குளம், சாஸ்திரி கூழாங்குளம்)

**செல்வி பவதாரணி சிவபாலராஜா.** இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயம்(வெளிக்குளம், வவுனியா)

**செல்வன் சிவாகரன் மிதுர்சன் .** வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் (கோவிற்புதுக்குளம், வவுனியா)

**செல்வி ஆரதி தசாவதாரன் சர்மா.** இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயம்(கோவிற்புதுக்குளம் வவுனியா).

இவர்களுக்கு எமது பாராட்டுக்கள். வாழ்த்துக்கள். இவர்களுக்கு பத்தாயிரம் ரூபா பணப் பரிசும், சான்றிதழும், நினைவுப் பரிசும் வழங்கப்படுகிறது.

ஆசிரியர்கள்



வட்டத்தின் 17 ஆண்டு நிறைவு விழாவில் நிருத்திய நிகேதன நுண்கலைக்கல்லூரி மாணவிகளின் வரவேற்பு நடனம்



வட்டத்தின் 17 ஆண்டு நிறைவு விழாவில் வ/சைவப்பிரகாச மகளிர் கல்லூரி மாணவிகளின் தீயவை செய்து தீயவை தேடாதே வில்லுப்பாட்டு

# வட்டத்தின் சான்றோர் விருது பெறும்

## வைத்தியத் துறையில் பொன்விழாவை நோக்கியிருக்கும் வைத்தியத் தம்பதி.

## டாக்டர் சுப்பிரமணியம்.சின்னத்துரை,
## டாக்டர் திருமதி செந்தில்வள்ளி சின்னத்துரை

வைத்தியத் தம்பதிகள் டாக்டர் சு.சின்னத்துரை, திருமதி டாக்டர் செந்தில்வள்ளி சின்னத்துரை ஆகியோரைக் கௌரவிப்பதில் வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் பெருமகிழ்ச்சியும் பெருமிதமும் கொள்கிறது.

வவுனியா குடியிருப்பு கித்துல் வீதியில் 10-06-1968 இல் அன்றைய வவுனியா பாராளுமன்ற உறுப்பினரின் கையினால் சிறந்த சுபவேளையில் திறந்துவைக்கப்பட்டு, வவுனியா கொற வப்பொதானை வீதியில் 23.02.1974இல் தற்போதிருக்கும் இடத்தில் அமைந்த வைத்திய சாலையில் இருந்து பணி யாற்றும் இவ் வைத்தியத் தம்பதியின் மருத்துவ, சமூக, சைவ சமயப் பணிகள் நாற்பத் தெட்டு ஆண்டுகளாகத் தொடர்கின்றன.



வவுனியாவில் சிறந்த தனியார் வைத்திய சாலைகள் இல்லாதிருந்த அக் காலத்தில் இவ் வைத்தியத் தம்பதிகளின் வைத்திய சேவை வவுனியா மாவட்ட மக்களுக்கு ஒரு வரப்பிரசாதமாகவே அமைந்தது. அதிலும் நான் அறிந்தவரையில் அக்காலத்தில் தனியார் வைத்திய சாலையில் பெண் வைத்தியராக வைத்தியம் செய்தது **வைத்தியகலாநிதி திருமதி.செந்தில்வள்ளி சின்னத்துரை** அம்மையார் ஒருவர் மாத்திரமே.

ஆண் வைத்தியர்கள் எவரும் தமது கையைப் பிடித்து நாடிபார்த்து அல்லது தொட்டு வைத்தியம் செய்ய அனுமதிக்காத அன்றைய பெண்கள் பலருக்கு அம்மா அவர்களே ஒரே ஒரு அமிர்த சஞ்சீவியாகத் திகழ்ந்தார்.

இளம் வயதில் கணவனை இழந்து கைம்மை நோன்பு நோற்ற சிலரும், கன்னிப்பெண்கள் பலரும், திருமணமான பெண்களும்

கூட ஆண் வைத்தியர்கள் தங்களைத் தொடுவதை அனுமதிக்காத அக்காலத்தில், ஆண்களும்கூட தமது மனைவியரை ஆண்வைத்தியர்கள் தொட்டுப் பரிசோதிப்பதை விரும்பாத அக்காலத்தில் . பிள்ளைப் பேற்றுப் பிரசவங்கள் கிராமத்து மருத்துவிச்சிகளால் பார்க்கப்பட்ட அக்காலத்தில் வேற்று ஆண்கள் எவரதும் கைபடாமல் வாழ்ந்து வந்த வவுனியா மாவட்டப் பெண்களுக்கு இந்த அம்மையாரே தெய்வம்போல வந்தார். பல சுகப்பிரசவங்களுக்கு கஷ்ட காலங்களில் உதவினார்.

**சஹஸ்ராபிஷேக வைத்தியசூரி வைத்திய கலாநிதி, வைத்தியசிரோமணி சுப்பிரமணியம் சின்னத்துரை D.I.M.S (இலங்கை) ச.நீ.**

யாழ்ப்பாண மாவட்டம், கைதடி, வேலுப்பிள்ளை சுப்பிரமணியம், வள்ளிப் பிள்ளை தம்பதிகளின் மகனாக 05-01-1940 இல் பிறந்த இவர் கைதடி வடக்கு குருசாமி வித்தியாலயத்தில் ஆரம்பக் கல்வியைக் கற்று, (1-4), கைதடி C.M.S. ஆங்கிலப் பாடசாலையில் பத்தாம் ஆண்டுவரை (S.S.C) கற்று, கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரியில் பதினோராம் பன்னிரண்டாம் வகுப்புக்கள் (H.S.C) கற்றுத் தேறி கொழும்பு அரசினர் ஆயுர்வேத வைத்தியக் கல்லூரியில் (1961-1966) கற்று D.I.M.S. பட்டம் பெற்று வைத்திய கலாநிதியானார்.

1967 இல் தன்னோடு படித்த யாழ்ப்பாணம் புன்னாலை க்கட்டுவன் தெற்கைச் சேர்ந்த தலைமை ஆசிரியர் பொன்னம்பலம் பரமேஸ்வரி தம்பதிகளின் புதல்வி செந்தில்வள்ளி அவர்களைத் திருமணம் செய்து 1968 இல் வவுனியாவிற்குக் குடும்பமாக வந்தார். தனியார் வைத்திய சாலையை அமைத்து அதே ஆண்டில் தமது வைத்திய சேவையை வவுனியாவில் தொடங்கினார்.

வவுனியாவின் அப்போதைய பிரமுகர்களின் நட்பு இவருக்கு பெரும் துணை யாகியது. குறிப்பாக சேர்மன் என்று எல்லோராலும் அழைக்கப்பட்ட(வேலு சேர்மன்) வவுனியா பட்டண சபைத் தலைவராக பதவி வகித்த அமரர்.ச.சுப்பிரமணியம். மற்றும் வவுனியா பாராளுமன்ற உறுப்பினர் அமரர் தா.சிவசிதம்பரம் ஆகியோரின் நட்பு இவருக்குக் கைகொடுத்தது. இவரது வைத்திய சாலையை வவுனியா பாராளுமன்ற உறுப்பினர் அமரர் தா.சிவசிதம்பரம் அவர்கள் (10-06-1968) திறந்துவைத்தார்கள்.

இன்று நெடிது வளர்ந்து நிழல் பரப்பி நிற்கும் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க ஸ்தாபகர்களில் இவரும் ஒருவர். இன்றைய இடத்தில் ஒரு கட்டடத்தை அமைப்பதற்காக கொடிதினம்

ஏற்பாடு செய்யப்பட்டு பணம் சே கரிக்கப்பட்டபோது இவரும் முக்கிய பங்காற்றினார்.

அன்றைய 1970 ஆம் ஆண்டுக்காலத்தில் இவர் நீர்ப்பாசனத் திணைக்களப் பிரதம பொறியியலாளர் திரு.ஆறுமுகம், டாக்டர். சக்திவேல், திரு.த. நல்லதம்பி, வவுனியா பிரதம புகையிரத நிலைய அதிபர் திரு.சோமசுந்தரம், திரு சின்னையா பிள்ளை, திரு.V.T. சுப்பிர மணியம் ஆகியோரோடு நிர்வாகசபையின் உறுப்பினராகப் பதவி வகித்தார்.

1977 இல் இனக்கலவரம் ஏற்பட்டபோது வவுனியாவிலிருந்து பலர் இடம் பெயர்ந்தார்கள். இவர் வவுனியாவிலேயே குடும்பமாகத் தங்கியிருந்தது மட்டுமல்லாது இலங்கையின் பல பாகங்களிலுமிருந்து வவுனியாவுக்கு வந்துசேர்ந்தவர்கள், கொண்டுவரப்பட்டவர்கள் சைவப்பிரகாச வித்தியாலயத்தில் தங்கவைக்கப்பட்டபோது இவர் குடும்பமாக நின்று வைத்திய உதவிகளையும், உணவு முதலான ஏனைய உதவிகளையும் செய்வதில் முன்னின்று உழைத்தார்.

1990 ஆனி மாதத்தில் வவுனியாவில் அரச படைக்கும்,விடுதலைப் புலிகளுக்கும் போர் தொடங்கியபோது பலர் வவுனியாவை விட்டு இடம்பெயரவும் இவர்கள் வவுனியாவை விட்டுச் செல்லாது இறம்பைக் குளத்தில் தங்கியிருந்தனர். அப்போது வவுனியா மாவட்ட வைத்திய சாலையும் இயங்காதகாலம். இவர்கள் மட்டுமே வைத்தியர்களாக இங்கிருந்து நோயாளிகளுக்கு இலவசமாக வைத்தியம் செய்தனர்.

காயமடைந்த மக்கள் இறம்பைக்குளம் தேவாலயத்தில் தங்க வைக்கப்பட்ட போது அங்கிருந்த பங்குத்தந்தை வண.பிதா.குருஸ் அவர்களின் அழைப்பை ஏற்று அங்கு சென்று பகல் இரவு பாராது வைத்திய சேவையினை ஆற்றினார்கள். கர்ப்பிணித் தாய்மார்கள் பலர் சுகப்பிரசவம் செய்ய உதவினார்கள். இக்காலத்தில் அரச தனியார் வைத்திய சாலைகள் எவையும் இயங்கவில்லை குழந்தைகளுக்கும் தாய் மார்களுக்கும் இவர்களே கடவுளுக்கு அடுத்த துணையாக இருந்தார்கள். வைத்திய சேவை மட்டுமன்றி உணவு, உடை முதலான பல உதவிகளையும் செய்தார்கள்.

1991 ஆம் ஆண்டில் அப்போதைய வவுனியா அரசாங்க அதிபர் திரு.சி.தில்லைநடராஜா அவர்களின் வேண்டுதலின் பேரில் வவுனியா மாவட்ட வைத்திய சாலை நலன்புரிச் சங்கத்தின் தலைவராக இரண்டு ஆண்டுகள் சிறந்த பணியினை ஆற்றினார்.

வவுனியா பகவான் சாயி சமித்தியின் வளர்ச்சியில் முக்கிய பங்காளியாக விளங்கும் இவர் பகவான் ஸ்ரீ சத்திய சாய் சேவா நிலையத்தினூடாக பல சமூக சேவைகளைச்செய்து வருகிறார்.1996 ஆம் ஆண்டு முதல் 2006 ஆம் ஆண்டுவரை பொன்னாவரசன்குளம் என்ற ஒருகுக் கிராமத்திற்கு ஒன்றுவிட்ட ஒரு சனிக்கிழமைகளில் சென்று இலவச வைத்திய சேவையை வழங்கி வந்தார்.

சாயி சமித்தி மூலம் கூமாங்குளத்தில் நடாத்தப்படும் சாயி சிறுவர் இல்லப் பணிகளிலும் இவருக்கு முக்கிய பங்கு உண்டு. சாயி சமித்திமூலம் நடாத்தப் பெறுகின்ற இலவச வைத்திய சேவைகள், நடமாடும் வைத்திய சேவைகள் என்பவற்றில் இவருக்கு முக்கிய பங்கு உண்டு. இன்னும் இவரது வைத்திய, சமூகப் பணிகள் பல.

**வைத்திய கலாநிதி திருமதி.செந்தில் வள்ளி சின்னத்துரை**
**D.I.M.S (இலங்கை )**

யாழ்ப்பாணம் புன்னாலைக் கட்டுவன் தெற்கு, தலைமை ஆசிரியர் பொன்னம்பலம், பரமேஸ்வரி தம்பதிகளின் புதல்வியாக 26-04-1943 இல் பிறந்த இவர் புன்னாலைக் கட்டுவன் தமிழ் வித்தியாலயத்தில் ஆரம்பக்கல்வியைக் கற்று புத்தூர் சோமஸ்கந்தாக் கல்லூரியில் உயர்தரம் கற்று கொழும்பு அரசினர் ஆயுர்வேத வைத்தியக் கல்லூரியில் (1961-1966 ) கற்று மருத்துவப் பட்டம் பெற்றவர் (D.I.M.S).

திருமணமாகி வவுனியாவிற்கு கணவனோடு வந்து கணவனோடு சேர்ந்து வைத்திய சேவையை ஆற்றிக்கொண்டிருப்பவர். கணவனின் அனைத்துப் பணிகளுக்கும் தன்னையும் அர்ப்பணித்து வருபவர்.

ஆண்வைத்தியர்களிடம் வைத்தியம் செய்ய விரும்பாமல் நோயோடுபோராடிய பலருக்கு இவரே தாய் போலவும் தெய்வம்போலவும் கைகொடுத்தார்.

வவுனியாவின் பெண் வைத்தியத்துறையின் முன்னோடியாக விளங்கும் இவர் கிராமத்துப் பெண் நோயாளிகளின், சகோதரியாக அன்போடு மதிக்கப் படுபவர். நோய் மாறியபின்னும் நோய்க்காக அல்லாமல் உறவினராக மதித்து இவரிடம் வந்து அளவளாவிச் செல்லும் கிராமத்துப் பெண்களை இன்றும் காணலாம். கிராமத்துப் பெண்கள் பலரின் நோய்தீர்த்த இவரை இவரது பணிக்காகப் பாராட்டுவது எமது சமூகக் கடமையாகும்.

நிறைவாக

தமிழ் பேசும் மக்கள் மட்டுமல்லாது சிங்கள நோயாளிகளும்

இவர்களிடம் வந்து வைத்திய சேவையைப் பெற்றுச் செல்கின்றனர்.

இவர்களுக்கு இரண்டு பெண் பிள்ளைகள் உள்ளனர். ஒருவர் வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய ஆங்கிலப் பாட ஆசிரியை திருமதி குகப்பிரியா ஞானசீலன். மற்றவர் வைத்திய கலாநிதி திருமதி குகாயினி யோகானந்தம் (கனடா) திரு.ம.ஞானசீலன் வவுனியா கச்சேரியில் முகாமைத்துவ உதவியாளராக பணியாற்றுகிறார். வைத்திய கலாநிதி.கு.யோகானந்தன், வைத்தியகலாநிதி குகாகியினி குடும்பம் கனடாவில் வாழ்கின்றது.

குறைந்த பணத்தில் நிறைந்த சேவையை ஆற்றிவரும் இந்த வைத்தியத் தம்பதிகளை வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் **சான்றோர்** விருது வழங்கி, வாழ்த்தி கௌரவப் படுத்தி மகிழ்கிறது. இவர்கள் இன்னும் பல்லாண்டுகள் சிறப்போடு வாழ்ந்து தமது பணிகளைச் செவ்வனே செய்து நிறை வாழ்வு வாழ இறைவனைப் பிரார்த்திக்கிறோம். நன்றி.

\- அகளங்கன்



வட்டத்தின் 17 ஆண்டு நிறைவு விழாவில் கௌரவிக்கப்பட்டோர்.

1. செல்வி.மேரி அன்ரோனியா ஸ்ரனிஸ்லாஸ்,
2. கலாபூஷணம் பண்டிதை செல்வி.யோகலட்சுமி சோமசுந்தரம்,
3. நிருத்தியவாணி திருமதி.சூரியயாழினி வீரசிங்கம்

# தாலாட்டு பாட

இயற்றியவர் - த.பிரதாபன்
இசை - கந்தப்பு ஜெயந்தன்

தாலாட்டுப் பாட தாய் இங்கு இல்லை,
தனியாகத் தவிக்கின்ற சேய் நானம்மா.
செல்வங்கள் கோடி வந்தாலும் கூட,
அம்மா உன் அன்புக்கு ஈடாகுமா?

மடிமீது தாலாட்டி மார்பூட்டி வளர்த்தாள்,
தோள்மீது எனைத் தூக்கி சுமைதாங்கி நடந்தாள்.
உலகத்தின் சொந்தம் நீதானே அம்மா,
உனையின்றி எனக்கிங்கு யாருண்டு அம்மா?
(தாலாட்டுப் பாட .)



கருவில் நீ சுமந்தாய் கண் தூங்க மறந்தாய்,
எனை அள்ளி தோளில் தினம் தூக்கி நடந்தாய்.
இரவை நீ மறந்தாய் இன்பங்கள் துறந்தாய்.
நிலவை நீ காட்டி சோறூட்டி வளர்த்தாய்.

அம்மா உன் அன்புக்கு ஈடாகுமா?
உனைப்போல தெய்வங்கள் நிகராகுமா?
உலகத்தின் சொந்தம் நீதானே அம்மா,
உனையின்றி எனக்கிங்கு யாருண்டு அம்மா?
(தாலாட்டுப் பாட.)

உதிரத்தைப் பாலாய் ஊட்டி வளர்த்தாய்,
உன் தோளில் சாய வரம் ஒன்று தந்தாய்.
உலகத்தைக் காட்டி உன்னோடு அணைத்தாய்,
உள்ளத்தின் பாசம் உயிர்க் கூட்டில் வளர்த்தாய்.

தாயே நான் உனைக்காணத் துடிக்கின்றேனே,
தனியாகத் திசை மாறி தவிக்கின்றேனே.
இதயத்தில் வாழும் நீயே என் பந்தம்,
உனையின்றி எனக்கிங்கு யாருண்டு சொந்தம்?

# விநாயகர் படிமம் – ஒரு விளக்கம்

அருட்கலைவாரிதி கலாபூஷணம்
**ஸ்தபதி.சு.சண்முகவடிவேல்**

எங்கும் வியாபித்துள்ள வழிபடும் படிமங்களில் விநாயகர் படிமம் முதன்மையானது; மிக முக்கியமானது. ஓம் என்ற ஓங்கார தத்துவத்தின் கலை வடிவமாகும்.

ஓம் என்ற ஒலியில் அ, உ, ம மற்றும் மெய் ஒன்றும் சேர்ந்து பிரணவமாய் ஒலிக்கிறது. ஓங்காரத்திலிருந்தே அனைத்தும் தோன்றுகின்றன; நின்று நிலை பெறுகின்றன; ஒடுங்குகின்றன.

அ என்னும் அகரம் தோற்றத்தையும், உ என்னும் உகரம் நிலைபெறுதலையும், ம என்னும் மகரம் ஒடுக்கத்தையும் குறிக்கின்றன. இவைகள் முறையே பிரம்மா, விஷ்ணு, உருத்திரன் என்ற மும்மூர்த்திகளையும், காற்று, தீ, சூரியன் ஆகிய மூன்று பொருள்களையும், கடந்தகாலம், நிகழ்காலம், வருங்காலம் என்னும் முக்காலங்களையும் குறிக்கின்றன.

ஓம் என்ற வரி வடிவத்துக்கு மிகப்பொருத்தமானது யானை முகமே என ஆராய்ந்தறிந்த சிற்பக்கலைஞன் ஓம் என்பதை தலையாக்கி அதற்குரிய குட்டையான உருவமைப்பையும் கொடுத்து விநாயகர் படிமமாக ஓங்கார மூர்த்தியாக தந்துள்ளான்.விநாயகர் ஞானத்திருவுரு, வேதங்களின் சாரம்.

**வலம்புரி விநாயகர்**

பிரணவத்தின் முழு வடிவமே வலம்புரி விநாயகர் ஆகும். இவரையே பிரணவ மூர்த்தி என்றும் ஓங்கார மூர்த்தி என்றும் அழைப்பர். மேல் வலது கையில் அங்குசமும், இடது கையில் பாசமும் தரித்து, கீழ் வலது கையில் தந்தம், இடது கை வரத முத்திரையுடன், தும்பிக்கையில் மோதகம் தாங்கி பத்மாசனத்தில் இருக்கையில் வீற்றிருப்பார். இவ்வடிவ விநாயகர் படைத்தல், காத்தல், அழித்தல் ஆகிய முத்தொழில் புரியும் சிவனாகவே கருதப்படுகிறார்.இவ்விநாயகரின் முக்கண்களும், பிறையும், கங்கையையும் இதையே வலியுறுத்துகின்றன.

**இடம்புரி விநாயகர்**

உலக வாழ்வுக்குரிய இன்பங்களையும், பேறுகளையும் வேண்டி, உலக மக்களால் பெருமளவில் வழிபடும் படிமம் இவ்விநாயகராகும்.இவரையே சித்தி விநாயகர் என அழைப்பர். மேற்கைகளில் அங்குசம், பாசம் தாங்கி, கீழ்க்கைகளில் தந்தம், மோதகத்துடன், துதிக்கையை இடம் திருப்பி மோதகத்தைத் தொட்ட பாவனையில் இருக்கையில் வீற்றிருப்பார். இப் படிமமே கோவில்களில் பெருமளவில் பிரதிஷ்டை செய்யப்படுகிறது. இவ்வடிவ விநாயகர் உ என்னும் உகர அமைதியில் அமைந்துள்ளதால் காத்தல் தொழில் செய்யும் விஷ்னு மூர்த்தியாகவும் கருதப்படுகிறார்.

**விநாயகர் படிமம்**

யானை முகமும், மூன்று கண்களும், நான்கு கரங்களும், பானை வயிறும், கட்டைக்கால்களும் கொண்டதே விநாயகர் படிமம். வெண்மையான மேனியும், பச்சைப் பட்டாடை அல்லது வெண்பட்டாடை அணிந்து, தலையில் ஜடா மகுடம் அல்லது கிரீட மகுடம் தாங்கி பூணூல் பூண்டு, பல்வேறு அணிகலன்களை அணிந்து கோலத்திற்கேற்றவாறு பல ஆயுதங்களைத் தாங்கியிருப்பார். நின்ற கோலத்தில், அமரந்த கோலத்தில், நடன கோலத்தில் விநாயகர் படிமம் செதுக்கப்படுகிறது.

கோவில்களில் பிரதிஷ்டை செய்யப்படுவதற்கு அமர்ந்த கோலப் படிமமே ஏற்றதாகும்.

உற்சவ படிமங்கள் நின்ற கோலத்தில் அமைக்கலாம். உற்சவப் படிமங்கள் ஐம்பொன்னினால் செய்யப்படுவன.இவற்றைத்தவிர இடத்துக்கேற்றபடி தேவைக்கேற்ப மண்ணினால், சாணத்தினால், மஞ்சள் தூளினால், சந்தனத்தினால், அறுகம்புல்லினால் விநாயகராகப் பிடித்து வழிபடலாம். இவைகள் விநாயகர் வழிபாட்டை இலகுவாக்குகின்றன. மேலும் “சோடச கணபதி” என பதினாறு வகையில் படிமங்கள் உண்டு.

ஒரு தந்தம் உடையவராதலின் ஏகதந்தன் எனவும், பூத கணங்களுக்கு தலைவராதலின் கணபதி எனவும், விக்கினங்களைத் தீர்ப்பவராதலின் விக்கினேஸ்வரன் எனவும், தனக்கு மேலான தலைவர் இல்லாமையால் விநாயகர் எனவும் பல பெயர்களில் அழைக்கப்படுகிறார்.

மிகத்தொன்மையான வழிபாடுகளில் விநாயகர் வழிபாடும்

ஒன்றாகும். உலகம் முழுவதும் இவ்வழிபாடு பரவியிருக்கிறது. இந்தியாவிலுள்ள மஹாராஸ்டிர மாநிலத்தில் மிகச் சிறப்பான இடத்தை விநாயக வழிபாடு பிடித்துள்ளது. வட மாநிலத்தில் நாராயண மூர்த்தியின் அம்சமாகக் கருதி விநாயகரை வழிபடுகிறார்கள்.இலங்கையில் சிங்கள மக்கள் மத்தியிலும் இவ்வழிபாடு சிறப்பிடத்தைப் பெற்றுள்ளது. இலங்கையிலுள்ள பௌத்த விகாரைகளிலும் விநாயகர் படிமம் வழிபாட்டிற்காக வைக்கப்பட்டுள்ளன.

இத்தகைய சிறப்பு வாய்ந்த விநாயகருக்குரிய விரதங்கள் மூன்றாகும். அவையாவன: வைகாசி மாதத்தில் வரும் வெள்ளிக்கிழமைகளில் அநுஷ்டிப்பது சுக்கிரவார விரதம்.ஆவணி மாதத்தில் அநுஷ்டிப்பது விநாயகர் சதுர்த்தி விரதம். கார்த்திகை மாதத்தில் அநுஷ்டிப்பது விநாயக சஷ்டி விரதமாகும்.



வட்டத்தின் 17 ஆண்டு நிறைவு விழாவில் மாருதம் இதழ் 15 இனை வடமாகாண சபை உறுப்பினர் திரு.ஜி.ரி. லிங்கநாதன் அவர்கள் வெளியிட்டு வைக்க அருட்கலைவாருதி ஸ்தபதி சு.சண்முகவடிவேல் அவர்கள் முதற்பிரதி பெறுகிறார்.



வட்டத்தின் 17 ஆண்டு நிறைவு விழாவின் நினைவாக...

# தொட்டியிலாடும் தொட்டில்கள்

## மைதிலி தயாபரன்

நாலு பக்கம் அடைப்பை வைத்து நாக்காய்ப் போட்டுவிட்டு
பாலும் குடித்தபின் பிள்ளை பரவசமாய் ஆடும் என்று
காலுடனும் தலையைஆட்டி கச்சிதமாய்ச் செயற்படவும்
வாலும்காட்டி வரும் பிள்ளை வசந்தமாக ஆடிவர

மூன்றாவது பிறைநாளில் மூத்தோரின் ஆசிபெற்று
சான்றோனாய் வளர்கவெனச் சாற்றியுமே போற்றி நிற்க
கன்றொன்றைக் கண்ட பசு களிப்புடனே ஆடுவதும்
கண்மலர்ந்திடவும் ஒரு தூளிகட்டிப் போட்டுவிட்டார்

தொட்டில்போலும் இருப்பதனால் தொட்டியையே தேர்ந்தெடுத்து
தோட்டிபோல் வளர்கவென தூக்கியந்தோ போட்டுவிட்டார்
காட்டிடவும் உலகிற்குக் குப்பையாக அவன் பிறப்பு
போட்டிடவும் துணிந்தனரோ பாவியவனைப் பெற்றவரே

பலரின் கரம்வருடிப் பதுமைபோல கவர்ச்சிகொண்டு
கவரும் உருவத்தைக் கண்டு நின்று பார்த்திடினும்
சிலரின் கரம்தானும் சிரத்தைகொண்டு நீவிடாது
துரத்தும் கரம்கொண்டு தூரத்தே விரட்டிவிட்டார்

அன்னையின் முகம் பார்க்க அரைமூன்று மாதத்தில்
கண்ணினில் ஒளியேற்றிக் கருத்துடன் சிரிக்கவுமென்(று)
பன்மையைத் தேடிநின்றார் பல்திசையும் பார்த்துநின்றார்
அன்னையோ அவளங்கே யாருக்கோ ஒளிக்கின்றாள்


எழுந்து அமர்ந்துவிட இதுவும்துணை ஆவதென
தெளிந்து நின்றதாலோ தேடி இவ்விடம்வந்தாய்
பழுத்து விழுந்தவரும் பாரினிலே சலித்தவரும்
களைத்தவரும் வந்திட்டால் இதற்கருகே வருவாரோ !


அழகான பொம்மைகளை ஆங்காங்கே வீசிடவும்
பழகாதவர் நினைத்துத்தான் பழகவென இதைவைத்தார்
வீசும் பொருளெல்லாம் வீழ்ந்துவிடும் தொட்டியிலே
காசுப் பெறுமதியில்லா குழந்தையையும் போட்டாரோ !

அடம்பிடிக்க லாகுமென அனைவருமே சொல்லியதால்
தடம்பிடித்து வரவேண்டா என்றவனைத் தடுத்தாரோ
படம்பிடிக்க பார்ப்பவர்கள் முகம்சிரித்து நிற்கவுமோர்
வடம்பிடித்து வருவதுபோல் வாஞ்சையின்றிப் பார்த்திருப்பர்

மற்றவர்க்குக் குப்பையென்றால் மற்று அவர்க்குத் தூளியன்றோ
பற்றற்றுப் பலவும்சொல பகுத்தறிவு தடையிடுமோ
மட்டமாக தானெழுந்து மருட்சியுடன் நோக்குவதோ
தொட்டிழுத்த தூளியை தான் கீழோனாய் மறப்பதுவோ

தொடர்ந்தும்அவன் செல்லுகின்றான் தொட்டியைப் பார்த்து வர
கடந்துவிட்ட காலத்தைக் கண்களிலே நிறைத்திடாது
மடமைகொண்ட தன்பெற்றோர் மாற்றமாக வரக்கூடும்
கடமைக்காய்ப் பெற்றெடுத்த இளவலையும் கையிற் கொண்டு







வட்டத்தின் 17 ஆண்டு நிறைவு விழாவில் ஞானம் சஞ்சிகை இதழ் 175 ஈழத்து புலம்பெயர் இலக்கிய நூலினை வவுனியா பிரதேச செயலாளர் திரு. கா.உதயராஜா அவர்களிடமிருந்து மைதிலி தயாபரன் முதற்பிரதி பெறுகிறார்

# தமிழ் இலக்கியத்தில் ஐங்குறுநூறும் ஹைக்கூவும்

ந.பார்த்திபன்

சங்ககாலத்து நூல்களுள் ஒன்று ஐங்குறுநூறு. இது எட்டுத்தொகை நூல்களுள் அடங்குகின்றது. சிற்றெல்லை மூன்றடிகளாகவும் பேரெல்லை ஆறு அடிகளாகவும் கொண்ட பாடல்களைக் கொண்டது. ஏனைய சங்க நூல்களின் செய்யுள் அடிகளுடன் ஒப்பிடும்போது குறுகியதாக உள்ளதால் இது. குறுநூறு எனப்பட்டது. ஐந்திணை ஒழுகலாறுகளை நூறு நூறாக (100 பாடல்கள்) பாடியிருப்பதால் ஐங்குறுநூறு எனப் பெயரிடப்பட்டுள்ளது.

இந்நூலின் மருதத்திணையை ஓரம் போகியாரும், நெய்தல் திணையை அம்மூவனாரும், குறிஞ்சியைக் கபிலரும், பாலையை ஓதலாந்தையாரும், முல்லையைப் பேயனாரும் இயற்றினர் எனக் கூறப்படுகின்றது. இதனைக் காட்டும் பழஞ்செய்யுள் பின்வருமாறு,

**"மருதமோ ரம்போகி நெய்தலம் மூவன்**
**கருதுங் குறிஞ்சிக் கபிலன் - கருதிய**
**பாலையோ தலாந்தை பனிமுல்லை பேயனே**
**நூலையோ தைங்குறு நூறு"**

இந்நூலின் கடவுள் வாழ்த்து மூன்று அடிகளைக் கொண்டதாகவே அமைந்திருக்கிறது.

**"நீல மேனி வாலிழை பாகத்து**
**ஒருவன் இருதாள் நிழற் கீழ்**
**மூவகை உலகும் முகிழ்த்தன, முறையே."**

இக்கடவுள் வாழ்த்தை பாரதம் பாடிய பெருந்தேவனார் பாடியுள்ளார். இதுவும் மூன்றடியிலமைந்துள்ளது.

சங்க இலக்கியப் பாடல்கள் எவ்வளவு கருத்தாழம்மிக்கன என்பதற்கு இக்கடவுள் வாழ்த்துப் பாடலையே பார்க்கலாம். நீல நிறமான திருமேனியையும் தூய அணிகலன்களையும் உடைய உமாதேவியாரைத் தன் உடலின் ஒரு கூறாகக் கொண்ட சிவபெருமானுடைய இரண்டாகிய திருவடியின் நிழலின் கீழ் மூவகை உலகங்களும் முறையே தோன்றி நிலைபெற்றன. யாம் பணிந்து ஏத்தி உய்வோம் என்பது இதன் பொருள்.

இங்கு, மூவகை உலகும் முகிழ்த்தன முறையே என்பதனை எடுத்து நோக்கின் பரம்பொருளிலிருந்து வானும் வானிலிருந்து காற்றும்

காற்றிலிருந்து தீயும் தீயிலிருந்து நீரும் நீரிலிருந்து மண்ணும் என முறை படத் தோன்றின எனக் கருத்துரைக்கப்படுகின்றது.

“நீராகி நிலம் படைத்தனை, நெருப்பாகி நீர் பயந்தனை, ஊரொழுவிற் காற்றொழுவினை, ஒளிகாட்டு வெளிக்காட்டினை எனத் தொல்காப்பியத்துக்கு உரையெழுதிய பேராசிரியர் குறிப்பிடுவது போல மேற்கூறிய ஐங்குறுநூற்றுக் கடவுள் வாழ்த்து அமைந்துள்ளது.

மேலும், நீலமேனி வாலிழை என்பது உமாதேவியாரைக் குறிக்கிறது. அவரின் நிறம் ஆழ்ந்த கருமை என்பதாகவும் வால் - தூய்மையும் வெண்மையும் கொண்டது. எனவே வாலிழை என்பது முத்துமாலையைக் குறிக்கிறது. பாகம் என்பது இடப்பாகத்தையும் ஒருவன் என்பது தனக்கு நிகர் தானே ஆனது என்பதையும் குறித்து நிற்கின்றது. இறைவன் திருவடி அனைத்துயிரும் இன்புறுவதற்கு ஏற்ற இடம் ஆதலால் நிழல் என்று பாடப்பட்டுள்ளது.

சுருங்கச் சொல்லி பெருந்தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளன மூன்றடிகளைக் கொண்ட ஐங்குறுநூற்றுப் பாடல்கள் என்பதற்கு கடவுள் வாழ்த்தே நல்ல எடுத்துக்காட்டு.

ஐங்குறுநூற்றுப் பாடல்களுள் ஐம்பது பாடல்கள் மூன்று அடிகளைக் கொண்டனவாகக் காணப்படுகின்றன. அவை கிழவற்கு உரைத்த பத்து, பாணற்கு உரைத்த பத்து, ஞாழற் பத்து, இளவேனிற் பத்து, புறவு அணிப்பத்து ஆகிய ஐந்திலுள்ள பத்துப்பத்து (100) பாடல்களாகும்.

ஐங்குறுநூற்றுப் பாடல்கள் தொடர்பாக கருத்துரைப்பவர்கள் பிறவற்றில் காணமுடியாத மிகப் பல புதிய சொற்கள் இடம்பெறுகின்றன என்றும், பிறதொகை நூல்களில் காணமுடியாத புதிய சொற்களையும் பண்பாட்டுக் கூறுகளையும் கொண்டிருத்தல் ஆகிய புதுமைகள் இந் நூலைப் பிறவற்றிலிருந்தும் பிரித்துக் காட்டுகின்றன என்கின்றனர்.

பிற அகத்தொகை நூல்களிற் காணமுடியாத புதுமைகள் பல. அவற்றுள் சில என்று பின்வரும் விடயங்களை முனைவர் அ.தெட்சணாமூர்த்தி குறிப்பிடுகின்றார்.

- ✶ பசு என்ற சொல் ஆ, ஆன் என்ற பொருளில் முதன் முதலாக சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.
- ✶ இந்திர விழா முதன் முதலில் ஐங்குறுநூறில் தான் உள்ளது.
- ✶ குருவி என்ற வடிவம் முதன் முதலில் இடம்பெற்றுள்ளது.
- ✶ இதற்கு முன் குரீஇ என்றே பிறதொகை நூல்களில் வழங்கப்பட்டிருந்தது.

✶ சேரநாடு புத்திலக்கிய வடிவங்களை அறிமுகப்படுத்தியது எனக் கூறுதல்

✶ பெண் மகவு வேண்டித் தவம் செய்வதற்கு முதல் சான்று இதிலுள்ளது.

✶ உடன்போன தலைவி இடைச்சுரத்தில் (இடைவழியில்) கண்டவரிடம் யான் போகின்ற போக்கில் என் தாய்க்கு நீர் கூற வேண்டுமெனச் சொல்லியது புதுக்கூறு. உடன் போக்கில் தலைவன் தேர் ஊர்ந்து செல்வது புதுமை எனல்.

✶ கார் காலத்தில் தலைவன் பிரிவதாகப் பாடல் புது மரபு.

பொதுவாக மூன்று அடிகளில் பாடப்பட்ட பாடல்கள் "சிந்தியல்" வடிவம் எனக் கூறப்பட்டுள்ளன. சங்ககாலத்து ஐங்குறுநூறு பாடல்களுக்குப் பின் இவ்வாறான மூன்றடிக் கவிதைகள் பெரும்பாலும் எழுதப்படவில்லை. இந்நிலையில் இவ்வடிவம் அருகிப் போய்விட்டது.

ஆயினும் மீண்டும் அண்மைக்காலப் புதுக்கவிதைகள் பல மூன்றடிகளில் எழுதும் பண்பு காணப்படுகிறது. அவற்றை "ஹைக்கூ" என்ற யப்பானியச் சொல்லின் மூலம் குறிப்பிடுவதையும் பார்க்கிறோம். யப்பானில் பிரபலமான இந்த மூன்றடி வடிவம் தமிழ்மொழியிலும் பிரபல்யமாகிக் கொண்டு வருவதைப் பார்க்கிறோம்.

"ஆழமான சிந்தனையைத் தூண்டி அழுத்தமான ஒரு கேள்விக் கணையைத் தொடுத்து ஆணித்தரமான பதிலைத் தரும் கவித்துவம்" என்று இந்த "ஹைக்கூ" கவிதைகளைப் பற்றிக் குறிப்பிடுகின்றனர்.

"வாமன வடிவமென்ற காரணமும் பொருள் நிலையில் விரிந்த வடிவமும் சிறப்பான செல்வாக்குக்குக் காரணம்" என இதற்கான காரணம் முன்வைக்கப்படுகிறது. யப்பானிய கைக்கூக் கவிதை ஒன்று

"பனி சென்றதே
ஆற்றில் குதித்திடுமே
நீரின் ஒலிதான்"

இக் ஹைக்கூ கவிதையில் ஒரு பருவ காலத்தின் கழிவு பேசப்படுகிறது. இயற்கை நிலையில் உறைந்து கிடக்கும் பனிக் காலப் பாறைகள் காலம் வெம்மையாய் மாற உருகி ஆற்றிலே நீராக வந்து விழும் துன்பம் தந்த காலம் மாறிவிட்டது. இனிமேல் மகிழ்வாய் வாழும் காலம் வந்துவிட்டது என்பதை இக்கவிதை நயமாய் உணர்த்துகின்றது.

இதேபோல் ஐங்குறுநூற்றுப் பா ஒன்று

**"நன்றே பாறை கொண்கனது நட்பே**
**தில்லை வேலி இவ்வூர்க்**
**கௌவை எழாக்காலே"**

இவ் ஐங்குறுநூறுப் பாடலில் ஒரு மகிழ்வான உணர்வு பேசப்படுகிறது. பாணனே! சேர்ப்பன் நம்மிடத்து வைத்திருக்கும் உறவு தில்லை மரங்களாலான வேலி பொருந்திய இவ்வூரிடத்துக் கல்லென்னும் ஒலியோடு பழிமொழி எழாதவிடத்து இனிமையானதே. தன்னுடைய உணர்வு நிலையைக் கூறும் போது தலைவனின் பரத்தமையைப் பற்றி நாகரிகமாக எடுத்துக் கூறப்படுகிறது.

மேலே காட்டிய இரண்டிலும் ஒரு செய்தியை உணர்த்தும் குறும்பா நிலையில் ஓர் ஒற்றுமை காட்டப்படுகிறது. ஆயினும் ஐங்குறு நூற்றுப் பாடல்களில் அசை நிலையான ஒற்றுமையைக் காணமுடியாது. ஹைக்கூவில் இந்நிலை காணப்படுகிறது.

கவிக்கோ அப்துல்ர∴மான் கூறுவது போல் "எல்லாவற்றையும் வெளிப்படையாகச் சொல்லிக் கொண்டிருப்பது கவிதையின் வேலை இல்லை. அது கட்டுரையின் வேலை. நம்மில் பலருக்கு ஹைக்கூவின் கவித்துவம் புரிவதில்லை".

"ஒரு காட்சியைக் காட்டுவதோடு ஹைக்கூவின் வேலை முடிந்துவிடும். அதிலுள்ள அர்த்தங்களைத் தோண்டி இணைத்துக் கொள்வது வாசகனின் பொறுப்பு. இந்தவகையில் வாசகனும் கவிதையில் ஒரு கூட்டுப்படைப்பாளி" என்பது அப்துல் ர∴மானின் வாதம்.

ஒரு காட்சியில் வாழ்க்கையின் அற்புதமான தரிசனத்தை தத்துவ உண்மையின் மின்னல் வீச்சை ஏற்படுத்துகின்ற வல்லமை ஒவ்வொரு ஹைக்கூ கவிதைக்கும் உண்டு.

செ.ஆடலரசன் **"இலையை எங்கே போட**
**எதிர் எதிராய் எதிர்பார்ப்புடன்**
**நாயும் மனிதனும்".**

அறிவுமதி **"விதைத்த வயலில்**
**இரைதேடும்**
**காக்கைகள்"**

தமிழன்பன் **"ஓட்டுப் போட்டு விட்டுத்**
**திரும்பி வந்த பிணம் திடுக்கிட்டுவிட்டது**
**தனது கல்லறையில் வேறொரு பிணம்"**

மு.முருகேஷ் **"கவர் நிறையக் கடன்**

வாடகைப் புன்னகை
முதல் தேதி"

நீலமணி

"உழைத்தால் உயரலாம்
அதுசரி
யார் உழைத்தால் யார் உயரலாம்"

இவ்வாறு அதிக ஹைக்கூ கவிதைகள் எழுதப்பட்டுக் கொண்டிருக்கின்றன. ஆனால் முதல் அடியில் 5 அசைகள், இரண்டாம் அடியில் 7 அசைகள், மூன்றாம் அடியில் (இறுதி) 5 அசைகள் என்ற ஹைக்கூவின் வரையறை கவனத்தில் கொள்ளப்படுவதில்லை பெரும்பாலான ஹைக்கூ கவிதைகளில்.

ஹைக்கூ என்ற கவிதை வடிவம் முதல் இரு வரிகளுக்கும் பொருத்தமில்லாது, முற்றிலும் வேறுபட்ட அடியினூடாக வாசகரைச் சிந்திக்கத் தூண்டும். உதாரணமாக

"குட்டையில்
சிறுநீர் கழிக்கும் சிறுவன்
வானத்தை அசைக்கிறான்"

இன்று இக்கவிதை வடிவம் எந்தவித விதிகளையும் வரையறைகளையும் மீறி விரும்பிய விதமாய் வருகின்றது. ஆனால் மூன்று அடிகளை மட்டும் கவனத்தில் கொள்கின்றன.

புதிய சிந்தனை, வித்தியாசமான எடுத்துரைப்பு, உணர்ச்சி வெளிப்பாடு என்பவற்றால் வரவேற்கப்படுகின்றன. காலத்தின் தேவை கருதி வரவேற்பது வாசகர்களின் பொறுப்பு. அது ஐங்குறுநூறாயிருந்தாலென்ன, ஹைக்கூவாக இருந்தாலென்ன. வளரட்டும் கவிதைத் துறை.









## தமிழினியன் ப.எ.அன்ரன்

## கவிதைகள்

### மனம்

மனிதர்களின்
மனம்
மோசமான மயான பூமி
எத்துணை எண்ணங்கள்
ஞாபகக் கல்லறையில்
துயில்கின்றன.
மனம் ஒருவழிப்பாதை.
நினைக்கத் தெரியும்
மனத்திற்கு மறக்கத்
தெரிவதில்லை.
மனம்
மனித மாளிகையில்
மைய மண்டபம்
எதை எண்ணுகிறாயோ
அதாகவே ஆவாய்
என்பது
ஆன்மீக வாசகம்
இன்பமும் துன்பமும்
இணைந்தே வாழ்க்கை
அன்பைச் சுமக்கும்
மனம்
துன்பமும் சுமக்கும்
ஆழ்மனதில் அழுக்கு
வெளிமனதில்
புனிதம் காட்டும்.

### நாவடக்கம்

ஆறடி மனிதனுக்கு
அறிவு வளர்ச்சிக்கும்
வீழ்ச்சிக்கும்
நாலங்குல நாக்கே
காரணம்.
பாத்திரத்து ஓட்டை
ஓசையில் தெரியும்.
ஒரு மனிதன்
முட்டாளா? ஞானியா?
என்பது
அவன் வார்த்தையில்
புரியும்.
பேச்சு வெள்ளி எனில்
மௌனம் தங்கம்.

### புத்தகம்

எழுது கோல்
தெய்வம்...
இந்த எழுத்தும்
தெய்வம்
இயம்பியவன் பாரதி.
இவன் பாதையில்
இலட்சிய வேட்கைமிகு
படைப்பாளிகள்
பல்கிப் பெருகின்
சமுதாயச்சல்வை
சரியாகும்.
புத்தகத்தின் பெருமை
நம்மை உருவாக்கும்
உந்துதலில் இருக்கிறது.



# வட்டத்தின் சான்றோர் விருது பெறும் திருமதி.இமெல்டா ஜெயநாயகி சிவகுரு



**"கணிதம் பன்னிரண்டு ஆண்டு பயிலுவார், பின்**
**கார்கொள் வானில் ஓர் மீன்நிலை தேர்கிலார்"**
**"வணிகமும் பொருள் நூலும் பிதற்றுவார்**
**வாழும் நாட்டில் பொருள் கெடல் கேட்டிலார்"**

மகாகவி பாரதியார் தனது சுய சரிதையில் இந்திய நாட்டின் அன்றைய கல்விநிலை பற்றிக் கூறிய கருத்துக்களைக் கொண்ட பாடலின் சில அடிகளே மேலே காட்டப்பட்டுள்ளன.

பன்னிரண்டு ஆண்டுகள் கணிதம் கற்றாலும் ஒரு நட்சத்திரத்தின் நிலையை அறிய முடியாதவர்களாக அன்றைய கணிதம் கற்றவர்கள் இருந்தார்கள் என்று அன்றைய கணித பாடக் கல்வியை ஏளனம் செய்கிறான் பாரதி.

வணிகமும் (Commerce), பொருள் நூலும் (Economics) படித்தார்கள் என்று சொல்லாமல் பிதற்றினார்கள் என்று மிகவும் கோபத்தோடு சொல்லுகிறான் பாரதி. காரணம் அவர்கள் படித்த அந்த நூலால் அந்த நாட்டுக்கு எந்த நன்மையும் விளையவில்லை.

தாங்கள் வாழும் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்

திருப்பதை யாரும் கேள்விப்படவுமில்லை. நூலைப் பற்றிப் பிதற்றி னார்களே தவிர அந்த நூலைக்கொண்டு அந்த நாட்டின் பொருளாதாரத்தை யாரும் மேம்படுத்த முன்வரவில்லை. என்பதுதான் பாரதியின் கடுங்கோபத்திற்குக் காரணம்.

முடிவாக, **"அல்லல் உற்றிடு மண் படுகல்வி"** என்று ஆவேசமாக, கோபமாக அன்றைய கல்வியை ஏசுகிறான் பாரதி. வெறும் ஏட்டுக் கல்வியாக, நடைமுறைப் பயனற்ற கல்வியாக அன்றைய கல்வி இருந்தது என்பதே பாரதியாரின் ஆத்திரத்திற்கான முக்கிய காரணம் எனலாம்.

ஆங்கிலம் இலங்கையில் ஒரு அத்தியாவசிய பாடம் என்பதை யாவரும் உணருகிறார்கள். அது சர்வதேச ரீதியாக முக்கியத்துவம் பெற்ற ஒரு மொழி என்பதை மறுப்பதற்கில்லை.

பாடசாலைகளில் முதலாம் ஆண்டு தொடக்கம், (பாலர் பாடசாலை தொடக்கம் என்றே சொல்லலாம்) பதின் மூன்றாம் ஆண்டுவரை ஆங்கிலம் கற்பிக்கப் படுகின்றது. ஆனால் மாணவர்களின் ஆங்கில மொழி அறிவு மிகவும் மோசமானதாகவே இருக்கிறது.

மாணவர்கள் தமது ஆங்கில மொழி அறிவை மேம்படுத்தவும் பரீட்சைகளில் உயர் பெறுபேறுகள் பெறவும் தனியார் கல்வி நிறுவனங்களை நாட வேண்டிய கட்டாயத்துக்குள்ளாகியிருக்கிறார்கள் என்பது வேதனைக்குரிய கசப்பான உண்மையாகும்.

பாரதியின் பண்ணிரண்டாண்டுக்குமேல் ஒருஆண்டு சேர்ந்தும் பயனில்லை. ஆங்கில மொழியைச் சரியாக எழுத, வாசிக்க, பேசத் தெரியாத பட்டதாரிகளே அதிகம் எனலாம். பல்கலைக்கழகத்திலும் கலைப் பட்டம் படிப்பவர்களுக்கு ஓராண்டு ஆங்கிலம் கற்பிக்கப் படுகிறது. ஆக அவர்கள் பதின்நான்கு ஆண்டுகள் ஆங்கிலம் கற்றும் ஆனது ஒன்றுமில்லை.

ஆங்கிலேயர்போல ஆங்கிலத்தில் கைஎழுத்திட்டுப் பெருமை கொள்வதும், தேவையற்ற விதத்தில் ஆங்கிலச் சொற்களைக் கலந்து தமிங்கிலம் பேசி தமிழ் மொழியைச் சீரழிப்பதும்தான் அவர்களின் வேலையாக இருக்கிறது.

சிறு பிள்ளைப் பருவத்திலிருந்தே ஆங்கில அறிவை வளர்க்கவும், பிள்ளைகளை ஆங்கிலத்தில் உரையாடப் பழக்கவும், ஒரு நல்ல ஆசிரியர்

முன்வர மாட்டாரா என்று பலரும் ஏங்கிய காலத்தில் வாடிய பயிருக்கு வான்மழைபோல் வந்தவர்தான் **திருமதி.இமெல்டா ஜெயநாயகி சிவகுரு** (.E.J.Sivaguru).

இவர் ஆசிரியப் பணியிலிருந்துகொண்டு இப்பணியை ஆற்றவில்லை. தனது ஆங்கில அறிவின் மூலமும் தனக்கிருந்த நல் உணர்வின் மூலமும் இப்பணியை ஆற்றத்தொடங்கினர். இன்று முப்பது ஆண்டுகளை வெற்றிகரமாக இப்பணியில் முடித்துத் தொடர்கிறார். இவரிடம் பாலர் வகுப்பிலே வந்து ஆங்கிலம் பயின்ற பலர் இப்போது டாக்டர்களாக, பொறியியலாளர்களாக,, சட்டத்தரணிகளாக, இன்னும் பல்துறைப் பட்டதாரிகளாக உருவாகிவிட்டார்கள். ஆங்கில அறிவில் மேம்பட்டவர்களாகப் பலர் உருவாகியிருக்கிறார்கள்.

முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த வேலுப்பிள்ளை தேவநாயகம், வவுனியா இறம்பைக்குளம் கனகமணி தம்பதிகளின் மகளாக 05-12-1942 இல் இறம்பைக்குளத்தில் பிறந்த இவர் ஆரம்பக்கல்வியை குருணாகலிலும் இடைநிலைக் கல்வியை யாழ்ப்பாணம் புனித திருக்குடும்பக் கன்னியர்மடப் பாடசாலையிலும் (Holy Family Convent ) பெற்றார்.

மன்னார் தபாற் கந்தோரில் பெண்கள் தொலைத்தொடர்பு உத்தியோகத்தராக அரச பணியைத்தொடங்கி வவுனியாவில் பணியாற்றி, பதவி உயர்வு பெற்று ஹட்டனில் பெண்கள் பகுதிப் பொறுப்பாளராக (Superinten'dent) பணியாற்றி வவுனியாவிற்குத் திரும்பவும் வந்து சேவையாற்றி ஒய்வு பெற்றவர்.

மன்னாரில் கடமையாற்றிய காலத்தில் வவுனியாவின் பிரபலமான மதிப்புக்குரிய குடும்பத்தைச் சேர்ந்த, கூட்டுறவு இலாகா தலைமைப் பீட பரிசோதகராக (Head Quarters Inspector.) கடமை புரிந்த அமரர் தாமோதரம் பிள்ளை, நாகமணி உடையார் மகள் கண்மணி தம்பதிகளின் மகனும், மன்னாரில் இலங்கைப் போக்குவரத்துச் சபையில் களஞ்சியப் பொறுப்பாளராகப் (Store keeppar ) பதவி வகித்துக் கொண்டிருந்தவருமான திரு சிவகுரு அவர்களைத் திருமணம் செய்தார்.

இவர்களுக்கு சிவானி மனோ பிரசாந், என்னும் பெண் பிள்ளையும், கொழும்பு, யாழ்ப்பாணம் வவுனியா ஆகிய இடங்களில்

பல் வைத்திய சாலைகளை நடாத்திவரும் பிரபல பல் வைத்திய நிபுணர் டாக்டர் சஜீவன் என்னும் ஆண்பிள்ளையும் உள்ளனர்.

1985 ஆம் ஆண்டில் புனித அந்தோனியார் ஆங்கிலப் பாடசாலையை (St Antony's English Institute ) இறம்பைக்குளத்தில் ஆரம்பித்தார். அப்போது இவர் வவுனியாவில் பணிபுரிந்து கொண்டிருந்தார். மூன்று வயதுப் பிள்ளைகள் முதல் பல்வேறுபட்ட வயதுடையவர்களுக்கும் அவரவர்களுக்குரிய ஆங்கிலக் கல்வியை வழங்கி வருகிறார்.

பிள்ளைகளுக்கு தன்னம்பிக்கையூட்டவும், உற்சாகப் படுத்தி ஊக்கம் அளிக்கவும், தரத்தை மேம்படுத்தவுமென கொழும்பிலுள்ள சில ஆங்கிலப் பாடசாலைகளோடு தொடர்பை ஏற்படுத்தி பரீட்சைகளைவைத்து சான்றிதழ்களை வழங்கி பரிசளிப்பு விழாக்களை நடாத்தி வவுனியாவில் ஆங்கிலக் கல்வி வளர்ச்சிக்கு பெரிதும் பாடுபட்டு வருகிறார்.

International Institute of Music Speech and Drama, Mystical Rose International Institute Pvt Ltd ஆகிய நிறுவனங்களுடன் இணைந்ததாக பரீட்சைகளை நடாத்தி வருகிறார்.

இவரிடம் கல்வி கற்றவர்கள் ஆங்கிலம் சார்பான பல்வேறுவகையான போட்டிகளிலும், மாவட்ட, மாகாண, தேசிய மட்டத்திலும் வெற்றியீட்டி இந்த மாவட்டத்துக்குப் பெருமை சேர்த்து வருகிறார்கள். தேசிய மட்டப் போட்டிகளில் மட்டுமன்றி வெளிநாட்டுப் பரீட்சைகளிலும் சிறப்பான பெறுபேறுகளைப் பெற்று வருகிறார்கள்.

ஆசிரியர்களுக்கான விஷேட பயிற்சிகளில் சிங்கப்பூர், சீனா, தாய்லாந்து முதலான பல வெளி நாடுகளுக்கு நான்கு தடைவைகள் சென்று விஷேட பயிற்சி பெற்ற இவர் தனியாகவும், மாணவர்களுடனும், பெற்றோருடனும் வெளிநாடுகளுக்குச் சென்று பயிற்சி வகுப்புக்களில் பங்கு பற்றியமை குறிப்பிடத்தக்கது.

அதில் அகில இலங்கை ரீதியாக தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுடன், வவுனியாவைச் சேர்ந்த இவரின் பதினைந்து மாணவர்களும் இவருடன் சென்று கடல் மார்க்கமாக (Cruce) சிங்கப்பூரிலிருந்து மேலைத்தேய நாடுகளுக்குச் சென்றதையும்,

பத்து நாட்கள் பிள்ளைகளுக்கு விஷேட பயிற்சியை அளித்ததையும் மகிழ்ச்சியோடு நினைவு கூருகிறார்.

வருடாந்தம் பரிசளிப்பு விழாக்களை பெற்றோர் சார்பில் நடாத்தி மாணவர்களை உற்சாகப் படுத்தி ஊக்குவித்து வரும் இவர் வவுனியா மாவட்டத்தின் ஆங்கிலக் கல்வி வளர்ச்சியில் கணிசமான பங்களிப்பை செய்தவர் என்பது மறுக்க முடியாதது.

ஒரேஒரு ஆங்கில மொழிக்கல்விக்காகத்தான் இன்று பலர் சர்வதேசப் பாட சாலைகளை நாடுகிறார்கள். பெரும்பொருட் செலவில் பிள்ளைகளைக் கற்பிக்கிறார்கள்.

இவரைப் போல குறைந்த பணம் பெற்று நிறைந்த சேவையை ஆற்ற மற்றவர்களும் முன்வந்தால் ஆங்கிலம் ஒரு கஷ்டமான மொழியாக இருக்காது. அத்தோடு பாடசாலைகளில் மாணவர்களுக்கு ஆங்கிலத்தைப் பேசப் பழக்கிவிட்டால் பலரும் ஆங்கிலத்துறையில் முன்னேறி விடுவார்கள். இவரது கற்பித்தல் அனுபவத்தை பாடசாலை ஆசிரியர்கள் பெறுவது சாலச் சிறந்தது.

இவரது ஆங்கில மொழிக் கற்பித்தற் பணிக்காக இவரை வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் **சான்றோர்** விருது வழங்கி கௌரவித்துப் பெருமைகொண்டு மகிழ்கின்றது. இவரது கற்பித்தற் பணி தொடரவும், இவரது வாழ்வு சிறக்கவும் வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் வாழ்த்தி மகிழ்கிறது. எல்லாம் வல்ல இறைவன் இவருக்கு எல்லா நலன்களையும் எல்லா வளங்களையும் கொடுக்கப் பிரார்த்திக்கிறோம்.

நன்றி.

அகளங்கன்



## "ஆக்கபூர்வமான மனிதர்களை உருவாக்கும் இலக்கியமும் கலையும்"

## நல்லாட்சி மலர்ந்திட விரும்புகின்றோம்

**வை.சு.தனபாலசிங்கம் J.P**

கால மறிந்து கடமைகள் ஆற்றிடும்
வேக நடைமுறை பற்றிடு வீர்
நேரமிகு தியில் செல்வம் வரும்வகை
சாரும் முறைகளைக் கற்றிடு வீர்

சின்னஞ் சிறிசுகள் அஞ்சி மடிந்திடும்
துஷ்பிர யோகங்கள் அற்ற அயல்
தன்னந் தனியே கருமங்கள் ஆற்றிட
திட்டங்கள் தீட்டி வகுத் திடுவீர்

டெங்கு நுளம்புகள் எங்கும் பரவித்
தங்கும் நிலைகளை மாற்றிடு வீர்
பொங்கும் அவலம் அழிவுகள் நீக்கித்
தங்க உயிர்களைக் காத்திடு வீர்

சாலை விபத்துக்கள் செல்வழி பொங்கும்
வேளை தவறாது பெருகு திங்கே
யாரைக் குறை கண்டு என்னபயன்
போன உயிர் மீண்டும் வந்திடுமோ

வீதி விதிமுறை போற்றி நடந்திட
ஏது விபத்தும் உணர்ந் திடு வீர்
பீதி யுமற்ற போக்கு வரத்துகள்
சாதனை யாகிட உதவிடு வீர்

போதை மதுவகை யுண்டு இளசுகள்
பேதை நிலைகொண் டலைகின் றார்

வாதைவருத்தும் கருத்தை உரைத் தவர்
தீதைத் திருத்த வகைசெய் வீர்
கல்வியில் நாட்டம் போற்றும் நெறியது
கற்றுயர்ந்தே வளம் பெற்றிடு வீர்
காதல் களியாட்டம் வாழ்வைக் கரியாக்கும்
பெற்றோர் வழிநின்று உய்ந்தி டுவீர்

கொள்ளை திருட்டுக்கள் எங்கும் மலிந்து
நள்ளிரவும் பகல் வேளை யிலும்
கள்ளர் அழிந்து நிம்மதி தங்கிடக்
காவலர் உதவிட வேண்டுகின் றோம்

நல்ல தலைமுறை நாட்டில் உருவாக
உங்கள் செயல்முறை வேண்டு மன்றோ
தொல்லை அகன்று தெருவில் நடந்திட
வல்ல விதிமுறை செய்திடு வீர்

நிம்மதி தந்திடும் வாழ்க்கை நெறிதனில்
நல்லாட்சி மலர்ந்திட விரும்புகின் றோம்
இம்மதம் அம்மதம் சிறியவர் பெரியவர்
சொல்லற்ற சமுதாயம் வேண்டுகின் றோம்

**குறிப்பு** : வவுனியா பிரதேச செயலாளர் பிரிவு பிரதேச மட்டத்திலான கலை, இலக்கியப் போட்டியில், திறந்த பிரிவு பாடலாக்கப் போட்டியில் மூன்றாம் இடம் பெற்ற பாடல் - 2015

இல.37, பார்க்குழி லேன்,
தோணிக்கல், வவுனியா

## 6ம் ஆண்டு நினைவஞ்சலி - 20.12.2016

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்ட பொருளாளர் ஆக கடமையாற்றி அமரத்துவம் அடைந்த அமரர் கனகசபாபதி ரணேஷ் (மல்ரிவிஷன் அச்சுக் கலையக நிர்வாக பணிப்பாளரும் பாடாசலை அதிபரும்) அர்களுக்கு வட்டத்தின் அஞ்சலிகளைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

# தழைத்திட வேண்டும் ஆண்மானம்

சிவநெறிப்புரவலர் சி.ஏ.இராமஸ்வாமி

காத்திர மான கவிதைஒன்றைக்
கண்டிட வேமனம் நினைக்கையிலே
ஆத்திரம் வந்தது ஆண்களிலே
அக்கறை இல்லாத தன்மைகண்டே
பாத்திரம் வகிக்கிறார் பெண்களெல்லாம்
பதவிகள் எல்லாமும் அவரிடத்தே
சீத்தன மாகப் பணம்பறிக்கும்
சிறியோர் தானோ ஆண்கள்என்போர்

இந்நிலை என்றும் தொடருமென்றால்
இழிநிலை அன்றோ ஆண்களுக்கு
முந்நிலை வகித்திட வேண்டுமென்ற
முயற்சியில் நாமும் முயன்றிடுவோம்
தன்னிலை உணரா திருப்போர்கள்
தாழ்வுறு வார்கள் தம்வாழ்வில்
அந்நிய ராகப் போவதுவோ
ஆண்மகன் என்பதை உணர்ந்திடுவார்.

நாளும் நண்பர்கள் உடன்திரிந்து
நடைப்பிண மாகப் போகாமல்
தோளும் உயர்த்தத் துணிந்திடுவோம்
தோல்வி என்பது இல்லையென்றே
வாழும் நாளை வளம்ஆக்க
வடிவாய்த் திட்டம் தீட்டிடுவோம்
கோளும் குறியும் என்செய்யும்
கொள்கையில் உறுதி கொண்டிருந்தால்

ஆணினை ஆங்கிலம் "மேல்"என்னும்
ஆராய்ந்து பார்த்தால் உண்மையுண்டு
வீணிலே நேரத்தைக் கழிக்காமல்
வேட்கை கொள்ளுவோம் வெற்றியிலே

நீணில மதனில் நாங்களெலாம்
நிலமதி ரும்படி நடந்தவராம்
தூண்என நிமிர்ந்து நின்றிடுவோம்
துணைஎனத் துணிவைக் கொண்டிடுவோம்

உழைப்புக்கு உயர்வு உண்டுஎன்ற
உண்மையை நன்கு அறிந்துகொண்டால்
களைப்புக்கு எங்கே இடம்இருக்கும்
காளையின் குருதியில் திளைத்திடலாம்
அழைப்புக்குக் காத்திட வேண்டாமே
அணைத்திட அவைஎமைக் காத்துநிற்கும்
தழைத்திட வேண்டும் ஆண்மானம்
தகுதியைக் கொண்டுநாம் சாதிப்போம்



இரசாயன உரங்கள், கிருமி நாசினிகள்
விற்பனையாளர்.

# திருமதி.சிறிசெயானந்தபவன் – அகிலத்திருநாயகி

## கலாபூஷணம் திருமதி.புவனநாயகி ஐயம்பிள்ளை



இலங்கையின் வன்னிப் பிரதேசத்து முல்லைத்தீவு மாவட்டத்திலுள்ளது முள்ளியவளையெனும் எழிலார்ந்த கிராமம். இக்கிராமம் கரைதுறைப்பற்றுப் பிரதேசத்தின் ஒரு பகுதியாகும். திருமதி அகிலத்திருநாயகியின் பிறந்து வளர்ந்த, வாழ்ந்த இடம் முள்ளியவளை எனும் திருப்பதியாகும்.

முள்ளியவளையின் பழையில் வைரவர் கோவில் பூசகர் பரம்பரையினராகவும், முல்லைத்தீவு வட்டுவாகல் சப்தகன்னிமார் ஆலய பூசகர் பரம்பரையினராகவும், சிவசீலர்களாகவும் வாழ்ந்து தற்போது வவுனியாவில் இறம்பைக்குளம் பகுதியில் இராணிமில் வீதியில் வாழ்ந்து வரும் திருமதி.அகிலத்திருநாயகி, ஆரம்பக்கல்வியை முள்ளியவளை சைவப் பாடசாலையிலும், இடை நிலைக் கல்வியை முள்ளியவளை வித்தியானந்தாக் கல்லூரியிலும் கற்று க.பொ.த பரீட்சையில் சித்தி பெற்று சிறைச்சாலைப் பொறுப்பாளராக முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம் முதலிய மாவட்டங்களில் கடமையாற்றி இளைப்பாறிய சிறந்த சேவகியாவார்.

ஆரம்பப் பாடசாலை மாணவியாகப் பயிலும் போதும், இடைநிலைக் கல்வியை பாடசாலை மாணவியாக பயிலும் போதும். அவரின் நாட்டம் விளையாட்டுத் துறையிலேயே மிகவும் ஈடுபாடாக இருந்தது. காலப்போக்கில் அவரின் விளையாட்டுத்திறமை இலங்கையில் மட்டுமல்லாது கடல் கடந்த நாடுகளிலும் பொறிக்கப்பட்டு சிறந்த வீராங்கனையாக நாடு திரும்பினார்.

தாய் நாடு இவரின் சாதனைக்கு வளமூட்டுவது போல சிறைச் சாலைகளுக் கிடையிலான விளையாட்டுப் போட்டிகளில் சிறந்த வீராங்கனையாகத் தெரிவு செய்தது. இச் சாதனையை அவர் தனது 48

வது வயதில் 1999ம் ஆண்டு நிலைநாட்டினர்.

இச் சாதனை மூலம் அகிலத்திருநாயகியவர்கள் **தாய்லாந்து, யப்பான், சிங்கப்பூர், மலேசியா** போன்ற நாடுகளுக்குச் சென்று மேலும் பற்பல சாதனைகளைப் படைத்து வெற்றி வீராங்கனையானது மட்டுமல்லாது விளையாட்டுத்துறையில் **யப்பானில் டிப்ளோமா சாற்றிதழையும்** பெற்றுக் கொண்டார்.

2008ம் ஆண்டு **வெலிக்கடை, கண்டி போகம்பறை, கேகாலை** முதலிய சிறைச்சாலைகளின் விளையாட்டுச் சாதனையாளர் பட்டத்தையும் வெற்றிக் கிண்ணங்களையும் தட்டிக் கொண்டார்.

2009ம் ஆண்டு புதுவருட விளையாட்டுப் போட்டியில் 5000 மீற்றர் ஓட்டப் போட்டியில் 1ம் இடத்தைப் பெற்றுக் கொண்டார். அவ்வருடம் துவிச்சக்கர வண்டி ஓட்டப் போட்டியிலும் முதலாம் இடம் பெற்றுள்ளார்.

**2010ம் ஆண்டு இவருக்கு இலங்கையின் சிறந்த சாதனையாளர் விருது** யாழ்ப்பாணம் வீரசிங்கம் மண்டபத்தில் வழங்கி கௌரவிக்கப்பட்டது. **கொழும்பில்** நடைபெற்ற **கலஸ் நைற்றில் "ஏ" பிளேயர் சான்றிதழையும்** பெற்றுள்ளார்.

2014ம் ஆண்டில் இரு தடவைகள் **சிங்கப்பூர்** சென்று தங்கப் பதக்கங்களைப் பெற்றுவந்துள்ளார். அதே ஆண்டு **கண்டி மாவட்டத்தில்** சிறந்த வீராங்கனையாக தெரிவு செய்யப்பட்டு சான்றிதழையும் வெற்றிக் கிண்ணத்தையும் பெற்றுக் கொண்ட பெருமை இவரையே சாரும்.

2015ம் ஆண்டு மாசிமாதம் 6ம், 7ம் திகதியும் 28ம் திகதியும் பங்குனி மாதம் 1ம் திகதியும் நடைபெற்ற விளையாட்டுக்களிலும், 2015ம் ஆண்டு வைகாசிமாதம் 7ம், 8ம் திகதிகளில் நடைபெற்ற விளையாட்டுக்களிலும் தங்கப்பதக்கங்களைப் பெற்று சிறந்த வீராங்கனைக்கான வெற்றிக்கிண்ணத்தைப் பெற்றுக்கொண்டார்.

கம்பகா மாவட்டத்தில் சிறந்த வீராங்கனையாக் தெரிவு செய்யப்பட்டு வெற்றிக் கிண்ணமும் வழங்கப்பட்டது. இவரின் சாதனை வன்னி மண்ணுக்கு மட்டுமல்லாது இலங்கைத் திருநாட்டிற்கும் உரித்தாகும்.

இவரை இலக்கிய வட்டம் பாராட்டி வாழ்த்துகின்றது.

## எங்கே போகுது எதிர்காலம்

கவிஞர் குரும்பையூர் த.ஐங்கரன்

எங்கே போகுதுஎம் எதிர்காலம்
எல்லாம் பூமியில் படு மோசம்
தங்கம் என்று நினைத்ததெல்லாம்
தகரம் ஆகிப் போன துவே
எங்கும் போலி வாழ்க்கைதான்
எமது சுயங்கள் தொலைந்தனவே!
பங்கம் வந்து சேர்கையிலே
பதைக்கு தெங்கள் நெஞ்சமது

இலக்குகள் இழந்தன இலக்கியங்கள்
இலட்சியம் இழந்தனர் இளைஞர்காள்
வழக்குகள் தொலைத்தன வருங்காலம்
வாழ்ந்து கொள்ளுமா வரும்காலம்
பழக்கத்தைக் கூட மாற்றிவிட்டார்
பழையது என்று ஒதுக்கிவிட்டார்
வழக்கத்தை மாற்றி வாழ்ந்துகொண்டால்
வாழ்க்கை இழந்து போய்விடுவோம்

காற்று புயலாய் மாறிவிட்டால்
கடும்வெப்பம் வந்து புவியைச்சுட்டால்
ஆற்று நீரும் பெருக்கெடுத்தால்
ஆடிநிலம் நடுங்கிக் கொண்டால்
சீற்றம் கொண்டு வான்உடைந்தால்
சிதைந்து போகும் சீர்த்தன்மை
மாற்றம் என்பதை மனப்போக்கில்
மாற்றிக் கொள்ள நினைக்காதீர்

எண்ணங்களில் மாற்றம் வந்தால்
எண்ணுவ தெல்லாம் ஏற்றம்பெறும்
வண்ணங்களில் மயங்கி கொண்டால்
வசந்தம் வாழ்வை விட்டுப்போகும்

கிண்ணங்களில் மது அருந்தி
கிடக்கும் வாழ்வில் என்ன சுகம்
திண்ணம் கொண்டு வாழ்க்கையினை
திருத்தி நாங்கள் முன்செல்வோம்

வீதியில் நின்று பழகிவிட்டு
விதியை நொந்து என்னபலன்
சாதிக்கும் வயதினை தொலைத்துவிட்டு
சந்தியில் புலம்பி என்னநலன்
போதிக்கும் போது புரியவில்லை
போனபின் அழுது பலனுமில்லை
பாதிக்கு மேல்தான் பலருமிங்கு
பக்குவம் பெறுகிறார் வாழ்க்கையிலே

மேடையில் பேசி ஒன்றுமில்லை
மேன்மை இருக்கணும் வாழ்வதிலே
ஆடையில் தூய்மை மட்டுமில்லை
அகத்திலும் அதுவே வேண்டுவமே!
பாடையில் போகும் வயதுகளில்
பாரதம் படித்து என்னபயன்
கோடையில் தேவை நிழல்மரங்கள்
கொள்கை யோடு வாழ்ந்திடுவோம்

காலம் போனால் மீண்டுகொள்ளாது
காகித கப்பல் கரை சேராது
ஏலம் போகுது எம் கலை பண்பாடு
எல்லோருக்கும் இது பெரும்பாடு
பாலம் போல இருந்து எல்லோரும்
பண்பு வளர்க்க பாடுபடுவோம்
ஞாலம் எங்கும் நன்மை விளையும்
நாங்கள் சேர்ந்தால் நல்லதே அமையும்

# தீக்குஞ்சு

## மேழிக்குமரன்

"அண்ணை இந்தப் பேப்பரைப் பார்த்தியளே. இதிலை இருக்கிற படம் என்ற மனுசியும், என்ர மகள் துவாரகாவும்."

ஓட்டோ ஸ்ராண்டில் நின்ற எல்லாருக்கும் அருள் காட்டிக் கொண்டிருந்தான்.

அதில் ஒருவன் கேட்டான். "என்ன அருள் உன்ர மகளோ?"

அருள் கூனிக்குறுகிப் போனான்.

பத்திரிகையை வாங்கிய ஆர்த்தி வேகமாக சயிக்கிளை உழக்கியவாறு வீட்டுக்கு வந்தாள். வீட்டுக்கு முன்னால் வேறு பத்திரிகையாளர்கள் நின்றிருந்தனர். அவளுக்கு கண்ணெல்லாம் கண்ணீர். அது ஆனந்தக் கண்ணீரா கவலைக் கண்ணீரா என்பது ஆர்த்திக்குப் புரியவில்லை.

அருள் நினைவில் வந்து போனான். அருள் வீட்டை விட்டுப் போன காட்சி அவளுக்கு முன்னால் விரிந்தது.

அவன் ஆணாதிக்கத்தின் மொத்த உருவமாக தென்பட்டான்.

ஆர்த்தி அவனது நிலை கண்டு நிலைகுலைந்து போனாள்.

"நான் அப்படித்தாண்டி இருப்பேன். குடிப்பேன், கூத்தியா வீட்டுக்குப் போவேன். கூத்தடிப்பேன். உன்னாலை என்னடி செய்ய முடியும்."

குடிபோதையில் அருள் உளறிக் கொண்டிருந்தான்.

"எல்லாம் சரிதான் எங்கட பிள்ளையை ஒரு நிமிடம் யோசிச்சுப் பாருங்கோ."

"என்ன சொல்லுறாய், எங்கட பிள்ளையோ."

அருவருக்கத்தக்க வார்த்தைகளால் தனது பிள்ளை இல்லை என்று திட்டினான்.

ஆர்த்தி காதுகளைப் பொத்திக் கொண்டாள்.

ஆர்த்தியால் நம்ப முடியவில்லை. தன்னைச் சுற்றிச் சுற்றி வந்து காதலித்து, நீதான் உலகம். நீயில்லாமல் நானில்லை என்று சினிமா வசனம் பேசியவன். இன்று இப்படி மாறிப் போய்விட்டானே.

ஆட்டோ ஓடிக்கொண்டிருந்த அருள் கூடாத கூட்டங்கள் கூடி அழிந்துபோனான்.

வழக்கமாக குடித்து விட்டு வருபவன். நாட்செல்ல வீட்டுக்குள் நண்பர்களைக் கூட்டிவந்து குடிக்கத் தொடங்கினான்.

அதற்கு ஆர்த்தி எதிர்ப்புத் தெரிவித்த போது வீட்டுக்கு வருவதையே குறைத்துக் கொண்டான். எப்போதாவது வந்தால் நிறைவெறியில் வந்து ஆர்த்திக்கு அடிப்பதுவும், தகாத வார்த்தைகளால் பேசுவதும் வழக்கமாகி விட்டது.

இன்றைக்குப் புதிதாக துவாரகாவின் பிறப்பிலேயே சந்தேகப்பட்டு பேசியபோது ஆர்த்தியால் தாங்கிக் கொள்ள முடியவில்லை.

அவளையும் அறியாமல் "போடா வெளியே" என்று கத்தினாள்.

அருள் இதனைச் சற்றும் எதிர்பார்க்கவில்லை. போதை இறங்கியது போல் இருந்தது.

வேகமாக உள்ளே போன ஆர்த்தி கத்தியுடன் வெளியே வந்தாள்.

"டேய் என்னால் உனக்கு பத்தினி என்றெல்லாம் சேர்டிவிக்கற் தரமுடியாது. மனச்சாட்சிதான்ரா கடவுள். இவ்வளவு கீழ்த்தரமாக உனது மனசு போன பின் இனிமேல் என்னால் உன்னோட வாழமுடியாது. போடா இல்லையெண்டால் என்ன செய்வனென்று எனக்கே தெரியாது."

காளிபோல தலைவிரிகோலமாய் கத்திய ஓங்கியபடியே நின்றிருந்த ஆர்த்தியைப் பார்த்து பயந்துபோன அருள் என்ற அருள்நேசன் விழுந்தெழும்பி ஓடினான்.

எங்கேயோ ஒரு மூலையில் நடுங்கியபடி நின்றவாறு இதனைப் பார்த்துக் கொண்டிருந்த துவாரகா பயந்துபோய் அம்மா என்று கத்தியவாறு ஓடிவந்து ஆர்த்தியைக் கட்டிப்பிடித்துக் கொண்டு அழுதாள்.

துவாரகா அழுவதைக் கண்ட ஆர்த்தி கத்தியை நழுவவிட்டுவிட்டு தனது மகளைக் கட்டிப்பிடித்தவாறு ஓவென்று அழுதாள். கோபம் துக்கமாக மாறி அணை உடைந்து ஓடியது.

நாட்கள் நகர்ந்தன. அருளை ஆர்த்தியுடன் சேர்ப்பதற்கு பல தூதுவர்கள் வந்து போயினர். எதற்கும் ஆர்த்தி மசிந்து கொடுக்கவில்லை.

"அருள் சொன்னது சரிதான். இவள் யாரையோ வச்சிருக்கிறாள் போல அதுதான் அருளை அண்டிறாள் இல்லை" என்று நாக்கை வளைத்துப் போட்டு அவரவர் அவரவர்க்குத் தகுந்தமாதிரி பேசிக்கொண்டனர்.

ஆர்த்தி அலட்டிக் கொள்ளவேயில்லை. "இராமன் சந்தேகப்பட்ட சீதையல்ல நான் தீக்குளித்து என்னை நிரூபிப்பதற்கு. நான் வாழ்ந்து காட்டுவேன்" என்று தனக்குள் தீ வளர்த்துக் கொண்டாள்.

அடுத்த வேளைச் சோற்றுக்கு என்ன செய்வது என்ற கேள்வி வந்தபோது அவள் ஆடிப்போனாள். முக்கியமாக துவாரகா இது ஐந்தாம் ஆண்டு புலமைப்பரிசில் பரீட்சை வேறு. எப்படியாவது அவளைச் சித்தியடையப் பண்ணிவிட வேண்டும்.

அவளுடன் கூட இருந்த அவளது தாய் சொன்ன யோசனை சரியாகப்பட்டது. கலங்காது சாப்பாட்டுக் கடைகள் எல்லாம் ஏறி இறங்கினாள்.

"அண்ணை புட்டு அவிச்சுத்தாறன், இடியப்பம் அவிச்சுத்தாறன். சின்ன ஓடர் எண்டாலும் தாங்கோ அண்ணை, நீங்கள் மனசு வைச்சால் என்ரை வீட்டிலை அடுப்பெரியும்" என்று கெஞ்சினாள்.

இல்லையென்றவர் பலர். அவளின் வயசுக்கும், பருவத்துக்கும் பார்வையை வீசியவர் பலர். மொத்தத்தில் வெறுங்கையுடன் வீடு திரும்பினாள்.

தனது வீட்டிலிருந்து ஐந்து கிலோமீற்றர் சயிக்கிள் உழக்கி ரவுணுக்கு வந்து சலிக்காமல் மீண்டும் மீண்டும் சாப்பாட்டுக் கடைகள் ஏறி இறங்கினாள். பலன் கிட்டவில்லை.

ஆனாலும் ஆர்த்தி சலிக்கவில்லை. எப்படியாவது ஒரு ஓடர் எடுத்துவிட்டால் தன்னால் நின்றுபிடிக்க முடியும் என்று நம்பினாள். தான் வாழ்ந்து காட்ட வேண்டும் என்ற வேகம் அவளுக்குள் தீயாக எரிந்தது. அவளது நாடி நரம்பு முதல் நினைவுகள் எங்கும் துவாரகாவின் புலமைப்பரிசில் பரீட்சையே ஓடிக்கொண்டிருந்தது. எப்படியும் அவளைச் சித்தியடைய வைக்க வேண்டும்.

அலைந்ததுதான் மிச்சம். ஒரு பிரயோசனமும் இல்லை. தனக்கு தெரிந்தவர்கள் எல்லோரிடமும் ஏதாவது ஓடர் பிடித்துத் தரும்படி சொல்லி வைத்திருந்தாள். ஒன்றுமே நடந்தபாடில்லை.

கடைகள் ஏறி இறங்கிக் களைச்சுப் போய் ஒரு கடையில் தண்ணீர் கேட்டு வாங்கிக் குடித்துக் கொண்டிருக்கும் போது, அவளது கைபேசி மணி அடித்தது.

“ஹலோ யார் பேசிறது.”

“ஆர்த்தி நான் கல்யாணி பேசுறன். எனது அலுவலகத்தில் ஒரு பார்ட்டி. அதற்கு 100 றோல் வேணும் செய்து தருவீரோ.”

ஆர்த்தி தன்னைக் கிள்ளிப் பார்த்துக் கொண்டாள். நிஜமா என்று நம்ப முடியவில்லை. வானில் பறப்பது போல இருந்தது.

“என்ன ஆர்த்தி பதிலைக் காணம். உம்மாலை செய்து தரமுடியுமா.”

தன்னைச் சுதாரித்துக் கொண்ட ஆர்த்தி

“ஓம் மடம் ஓம். நான் இப்பவே உங்கட ஒவ்விசுக்கு வாறன். நேரிலை பேசுவம்.”

ஆர்த்திக்கு அந்த ஓடர் கிடைத்தது. ஆனால் நூறு றோல் செய்யப் பணம் வேண்டுமே. காதிலை கிடக்கிற கம்மலை அடைவு வைப்பம். பிறகு மீட்கலாம் என்று யோசித்தவாறு கம்மலைக் கழட்ட காதிலை கைவைத்த போது ராணி அம்மா நினைவுக்கு வந்தா.

ராணி அம்மாவின் வீட்டுக்கு உதவிக்கு ஒரு ஆள் தேவைப்பட்ட போது ஆர்த்தி உதவினாள். அதனால் தொடர்ந்த நட்பு

“என்ன உதவி எப்ப வேண்டுமென்றாலும் தயங்காது வந்து கேள்” என்று சொல்லியிருந்தா.

நேராக ராணி அம்மாவிடம் போய் விசயத்தைச் சொன்னாள் ஆர்த்தி. மறுபேச்சின்றி ராணி அம்மா பணம் உதவி செய்தா.

அந்த 100 றோல் ஓடர் ஆர்த்தியின் வாழ்கையையே புரட்டிப் போட்டது. அந்தப் பார்ட்டிக்கு வந்திருந்த ஒரு அன்பர் அந்த றோலை சாப்பிட்டுவிட்டு

“நல்லாயிருக்கே எந்தக் கடையில் வாங்கினீர்கள்” என்று கல்யாணி மடத்திடம் கேட்டார்.

"இது கடையில வாங்கியது அல்ல. ஆர்த்தி என்ற பெண்தான் செய்தவ."

அந்த அன்பர் ஒரு சாப்பாட்டுக் கடைக்காரர்.

அவர் ஆர்த்தியிடம் தொடர்பு கொண்டு கடைக்கு றோல் வாங்கினார். அது நாளாவட்டத்தில் புட்டு, இடியப்பம் என்று விரிந்தது. அந்த முதலாளி வேறு சில கடை நண்பர்களிடமும் ஆர்த்தியை சிபார்சு செய்தார்.

கல்யாணி மட்டும் தங்கள் அலுவலகத்தில் எந்தப் பார்ட்டியோ, விழாவோ பலகாரம் செய்வதை ஆர்த்தியிடமே கொடுத்தார். அதன் மூலம் அந்த நகரத்தில் இருந்த பல அலுவலங்களின் ஓடர்கள் ஆர்த்திக்கு கிடைத்தன.

இத்தனைக்கும் ஆர்த்தியை அம்மாவின் கைப்பக்குவமும், ராணி அம்மா செய்யும் பண உதவியுமே ஆர்த்தி பிரபல்யம் ஆவதற்கு காரணமாய் இருந்தது.

ஆர்த்தி ஓய்வின்றி உழைத்தாள். காலையில் நாலு மணிக்கெல்லாம் எழுந்து அடுப்பு மூட்டி விடுவாள். இரவு எட்டுமணி, ஒன்பது மணிவரை ஆர்த்தியும், அம்மாவும் பலகாரங்களுடன் வெந்தனர்.

துவாரகாவின் ரீச்சர் ஆர்த்தியை அழைத்திருந்தார். ஆர்த்தி என்னவோ ஏதோ என்று பயந்தவாறு போனாள்.

"ஆர்த்தி நல்ல கெட்டிக்காரி. அவளுக்கு ரியூசன் ஒழுங்கு பண்ணினால் அவள் நல்ல ரிசல்ட் எடுப்பாள்" என்ற அபிப்பிராயத்தை ரீச்சர் சொன்னா.

ஆர்த்தி என்ன யோசனை என்றாலும் ராணி அம்மாவுடன் கலந்தாலோசிப்பதுண்டு. அவ எப்போதும் நல்லதையே சொல்லுவா என்ற நம்பிக்கை ஆர்த்திக்கு உண்டு.

"இந்தா பார் ஆர்த்தி கடை ஓடர் வரும்வரைக்கும் பிள்ளையின்ரை ரியூசனை பின்னுக்குப் போடாத. நான் அவளின்ர காசைக் கட்டுறன். நீ ஓடர் வந்தாப் பிறகு தா."

ஆர்த்தியின் கண்களில் கண்ணீர். இப்படியும் மனிதர்கள் இருக்கிறார்கள்.

துவாரகா ரியூசனுக்கு போகத் தொடங்கினாள்.

"துவாரகாக்குட்டி புலமைப் பரிசிலிலை நல்ல மார்க் எடுத்தா குட்டிக்கு பள்ளிக்கூடம் போகப் புதுச் சயிக்கிள் வாங்கித் தருவன்."

"உண்மையாவோ"

"கட்டாயம் வாங்கித் தருவன்"

"நீ பொய் சொல்லுறாய்"

"இல்லையடா. உண்மையாய் வாங்கித் தருவன்."

ஆர்த்தியின் பதிலால், துவாரகா புதுச்சயிக்கிளை மனதில் கொண்டு எந்நேரமும் படிப்பதும், பாடமாக்குவதுமாய் இருந்தாள்.

அம்மாவுக்கு பலகாரம் செய்வதில் ஏதாவது உதவி செய்ய

வந்தால் ஆர்த்தி விடுவதில்லை. வேண்டாம் அம்மா நீ போய் படி என்பாள்.

ஆர்த்தி புட்டுக் குழைத்துக் கொண்டிருக்கும் போது அவளின் முதுகில் சாய்ந்தவாறு துவாரகா படித்தபடியே இருப்பாள். சிலவேளை அப்படியே தூங்கிப் போய்விடுவாய். ஆர்த்தி தூக்கிக் கொண்டுபோய் வளர்த்திவிடுவாள்.

அதிகாலை நான்கு மணிக்கு ஆர்த்தி எழும்பும் போது துவாரகா தானாகவே எழும்பி கண்ணைத் துடைத்தவாறு படிக்கத் தொடங்கி விடுவாள்.

ஆர்த்தி புத்தகக் கடைகளைக் கண்டால் நின்றுவிடுவாள். ஏதாவது புலமைப்பரிசில் பயிற்சிப் புத்தகங்களைக் கண்டால் வாங்கிக் கொண்டு பொய் துவாரகாவிடம் கொடுத்துச் செய்யச் சொல்லிவிடுவாள்.

புலமைப்பரிசில் பரீட்சை வந்தது. ஆர்த்திக்கு இருப்புக் கொள்ளவில்லை. பக்கத்துப் பிள்ளையாருக்கு நேர்த்திக்கடன் வைத்தாள்.

தானே சயிக்கிளில் கூட்டிக்கொண்டு போய் விட்டு "நன்றாக எழுது" என்று சொல்லி துவாரகாவுக்கு முத்தம் கொடுத்தாள்.

ஆர்த்தியின் கண்ணீர் துவாரகாவின் கன்னத்தை நனைத்தது.

"ஏனம்மா அழுகிறாய் நான் நல்லா எழுதுவன்"

"ஆர்த்தி, துவாரகாவைக் கட்டிப்பிடித்துக் கொண்டாள்.

தான்பட்ட கஷ்டங்களையும், அருள் தன்னை அவமானப் படுத்தியதையும் நினைத்தே ஆர்த்தி அழுதாள் என்பதை அறிய துவாரகாவுக்கு வயது போதாது.

துவாரகா அலட்டாமல் போய் பரீட்சை எழுதிவிட்டு வந்தாள்.

எப்ப பதில் வரும் என்று காத்திருந்து காத்திருந்து ஆர்த்தி அதை வேலைக்கஷ்டங்களில் மறந்தே போனாள்.

ஒருநாள் துவாரகா படிக்கும் பாடசாலை அதிபரிடமிருந்து கைபேசி அழைப்பு

"ஓம் சொல்லுங்கோ மடம்"

"ஆர்த்தி உம்முடைய மகளுக்கு பெயர் துவாரகா அருள்நேசன்தானே."

"ஓம் மடம் ஏன் கேக்கிறீங்க"

"வாழ்த்துக்கள் ஆர்த்தி. உம்முடைய மகள் புலமைப்பரிசில் பரீட்சையில் அதிக புள்ளிகள் வாங்கி வடமாகாணத்தில் முதலாவது மாணவியாக வந்திருக்கிறாள். துவாரகாவால் எங்கள் பாடசாலைக்கு பெருமை..."

ஆர்த்திக்கு அதற்குப் பின்னால் எதுவும் கேட்கவில்லை.

சயிக்கிளை உழக்கியவாறு வீட்டுக்கு ஓடினாள். அங்கே பத்திரிகையாளர்கள் காத்திருந்தனர்.

## அன்னையின் தாலாட்டு

விண்ணையும் ஆளப் பிறந்தபிள்ளாய்
என் வேரறுந்த வாழ்வை
வேதனை பொங்க சொல்கிறேன்
கேளாயோ என் கண்ணே
காலம் பன்னிரண்டாய் ஆனதுதான்
கவலைகள் சொல்லத் தோணுதுதான்
பஞ்சம் கொண்ட ஊரிலே
பசிதீர்க்க பச்சைத் தண்ணியில்லை
உடுத்திடவும் உடையுமில்லை
ஒட்டுக்கள்போட்ட கிழிந்த சேலைதான்
எனைக்காத்த ஆடைகண்ணே
நீ உறங்கும் தொட்டிலடா.

விட்டுவிட்டு துடிக்குதடா நெஞ்சு
சுட்டுவிட்டு போனதால் அன்பு
விதிதான் என்றெண்ணி
ஏமாந்த என் கதையை
கேளாயோ என் கண்ணே
வாழ்வு வேண்டு மென்றோ
உந்தன் அம்மா
உறவை வெறுத்து வந்தேன்
வேண்டுமென்ற எதுவோ என்னை
வேண்டாம் என்றே போனதுபார்
சரிந்துவிட்ட என் ஆசைகள்
வெறுப்போடு.......
இருந்தும் சாய்மரம் தேடவில்லை
நீஉயர ஏணியாகி விட்டேன்.
ஏற்றம் ஒன்றுதான் உன்னிடம்
எதிர் பார்க்கிறேன் கண்ணே

காலத்தின் கட்டளைக்கு ஆட்பட்டோ
அவலங்கள் கண்டேன்
அத்தனையும் மறந்தேனடா

உன்சிறு இதழ் மலர்வில்
அவனியில் நீயும் ஓர்நிலை
கண்டிடுவாய் என் பிள்ளாய்
உன் இனியகாலம் வரை
அத்திவாரம் நான் இடுவேன்
கண்ணே உறங்கிடடா
உத்தமன் நீஎன்று
உணர்த்திடுவாள் உன் அன்னை.

பாவங்களிடையே புண்ணியமாய்
நீபிறந்தாயடா
அரவணைத்து மகிழ்ந்திடுவேன்
கண்ணே கலங்கிடாதே
என் ஊண் உறக்கம் நீங்கிடிலும்
உன்னைக் காப்பேன் கண்ணே
உயிரைக் கொடுத்தாயினும்
உயர்த்திடுவேன் உன்னை
கண்ணேஉறங்கிடு—என்
கண்ணேஉறங்கிடு

தென்றல் உனைத் தாலாட்டும்
வெள்ளி நிலா ஒளிவலை வீசும்
விண்மீன்கள் கண்சிமிட்டி
விளையாட உனை அழைக்கும்
வேதனைகள் ஓடிவிடும்
சித்திரமே கலங்காமல் உறங்கிடுவாய்.

**ஆர். விக்னேஸ்வரி.**



# பழந்தமிழ்ப் பாடல்களில் கணிதம்

## சமரபாகு சீனா உதயகுமார்

**அறிமுகம்:**

'கல்தோன்றா மன்தோன்றாக் காலத்தே வாளோடு முன் தோன்றிய மூத்தகுடி' என்று தமிழ்ப் பரம்பரைக்கு ஒரு பெருமை உண்டு.

இங்கே கல் என்பதன் அர்த்தம் கல்வியினைக் குறிக்கிறது. அதாவது, அறிவினைக் குறிக்கிறது. மன் என்பது மன்னராட்சி என்பதைக் குறிக்கிறது. வாளோடு என்பது வீரத்தோடு எனும் பொருளைக் குறிக்கிறது.

அதாவது, கல்தோன்றா என்றால் அறிவு தோன்ற முன்னர் என்று அர்த்தமாகும். மன்தோன்றாக் காலத்தே என்றால் மன்னராட்சி தோன்றுவதற்கு முன்னராகவே என்று பொருளாகும். வாளோடு முன்தோன்றி மூத்த குடி என்பது வீரத்தோடு தோன்றிய முதல் குடி என்பதாகும்.

ஆனால், இன்று இதற்கான பொருள் மாறியிருப்பதுதான் விந்தையானது. அதாவது, கல் தோன்றா மண் தோன்றாக் காலத்தே வாளோடு முன் தோன்றிய மூத்தகுடி என்று கூறி வருகிறார்கள். இப்படிக் கூறுவது தவறானதாகும். ஏனென்றால், கல்லும் மண்ணும் தோன்றாத காலத்திலேயே அதாவது பூமி உருவாகுவதற்கு முன்பே தமிழினம் உருவாகி விட்டதாக அர்த்தம் கூறி வருகிறார்கள். இது எப்படிச் சாத்தியமாகும்?

**தமிழும் தமிழரும்:**

எந்தவொரு வரலாற்றையும் அறிவதற்கு கல்வெட்டுகள், சிற்பங்கள், இலக்கியங்கள், ஓவியங்கள் என்பற்றை ஆதாரமாகக் கொள்கிறோம். எகிப்திலே உள்ள பிரமிடு உலக அதிசயங்களில் ஒன்றாகக் கருதப்படுகிறது. இந்த பிரமிடு என்பதற்குப் பின்னால் மறைந்திருக்கிற தமிழும், தமிழர் பற்றியும் சின்னதாகச் சொல்கிறேன் கேளுங்கள்.

தமிழிலே இடுதல் என்றால் புதைத்தல் என்று பொருளாகும். இறந்தவர்களைப் புதைப்பதால் அந்த இடத்தினை இடுகாடு என்று அழைத்தார்கள்.

சாதாரண மக்கள் இறந்தால் சிறுகுழியில் இட்டு அந்த இடத்தில் சிறுமேடு ஒன்றினை அமைத்து விடுவர். இதனைச் சிறு இடு என்று அழைத்தனர். இதேபோல், மன்னர்கள், படைத்தளபதிகள், புலவர்கள் யாராவது இறந்தால் **பெரும்இடு** அமைத்தனர். இந்தப் **பெரும்இடு** பெரும்பாலும் கூம்பக வடிவுள்ளதாக இருக்கும்.

**பெரும்இடு** என்பதன் புணர்ச்சி வடிவமே **பெருமிடு** ஆகும். **பெருமிடு** என்ற தமிழ்ச் சொல்லே காலப்போக்கில் பிரமிடு என்று

எகிப்தில் அழைத்து வந்தனர். இதுவே, பிற்காலத்தில் Pyramid என்று ஆங்கிலச் சொல்லாக மாற்றம் பெற்றிருக்கிறது. இன்று Pyramid என்பதற்கு கூம்பகம் என்று மொழிபெயர்த்திருக்கிறார்கள்.

கிரேக்கம், இலத்தீன், ஜெர்மன் மொழிகளின் கலவையே ஆங்கிலமொழி என்று சொல்லும் அறிஞர்கள், இந்த கிரேக்கம், இலத்தீன், ஜெர்மன் மொழிகளில் 50% அளவு தமிழ் பரம்பல் இருப்பதாகவும் சொல்கிறார்கள். ஆங்கிலத்தில் உள்ள சில சொற்களே அதற்குச் சான்றாகும்.

உதாரணமாக, தமிழிலே கரைதல் என்றால் கத்துதல் என்றுதானே பொருள். இதிலிருந்து பிறந்ததே Cry எனும் ஆங்கிலச் சொல்லாகும். அதனால்தான் காகம் கரைகிறது என்கிறோம். Kill என்ற ஆங்கிலச்சொல்லுக்குக் கொல் என்று சொல்கிறோம். Button என்பதற்கு பொத்தான் என்கிறோம். (இப்படி இன்னும்....)

பேசு, பஞ்சு, மெது, பரவி, உடன், நாகம் எனும் தமிழ் சொற்களோடு முன்னொட்டாக S இணையும்போது தோன்றிய ஆங்கிலச் சொல்லின் அதிசயத்தைப் பாருங்கள். அவை அவ்வாறு இணைந்து உருவான அந்த ஆங்கிலச் சொல்லுக்கான தமிழ்ப்பதமும் சமமாகவே இருக்கின்றது.

i. S+பேசு = Speach (S+Peachu)
ii. S+பஞ்சு + Sponge (S+panghu)
iii. S+மெது = Smooth (S+methu)
iv. S+பரவி = Spray (S+paravy)
v. S+உடன் = Sudden (S+udden)
vi. S+நாகம் = Snake. (S+nakem)

இவை உதாரணத்திற்காக எடுத்துக்கொள்ளப்பட்ட சில சொற்கள் ஆகும்.

**செம்பக்கம் காணல்**

**ஓடும் நீளம் தனை ஒரே எட்டுக்**
**கூறு ஆக்கி கூறிலே ஒன்றைத்**
**தள்ளி குன்றத்தில் பாதியச் சேர்த்தால்**
**வருவது கர்ணம் தானே. -புலவர் போதனார்**

இக்கணித முறையைக் கொண்டுதான், அக்காலத்தில் குன்றுகளின் உயரம் மற்றும் உயரமான இடத்தை அடைய தாம் நடந்து செல்ல வேண்டிய தூர அளவு போன்றவற்றைக் கணக்கிட்டுள்ளனர் அந்தக்கால மனிதர்கள்.

புலவர் போதனார் தேற்றத்தின் சிறப்பம்சம் என்னவென்றால், வர்க்கமூலம் இல்லாமலேயே, இக்கணித முறையை யாரும் பயன்படுத்த முடியும் என்பதாகும்.

இங்கே ஓடும் நீளம் என்பது தரப்பட்ட இரண்டு பெறுமானங்களில் நீளம் கூடியதாகும். குன்றம் என்பது தரப்பட்ட இரண்டு பெறுமானங்களில் நீளம் குறுகியதாகும்.

உதாரணமாக 3, 4 என்பவற்றை நோக்குவோம்.

ஓடும் நீளம் என்பது நீளம் கூடியது என்று பொருளாகும். குன்றம் என்பது நீளம் குறைந்தது என்று பொருளாகும். ஆகவே, இந்த இரண்டு பெறுமானங்களில் நீளம் கூடியது 4 ஆகும். நீளம் குறைந்தது 3 ஆகும். கர்ணம் என்பதன் ஒத்தசொல் செம்பக்கம்.

ஓடும் நீளம்தனை ஒரே எட்டுக்கூறாக்குதல் $= 4/8 = 1/2$

கூறிலே ஒன்றைத் தள்ளுதல் $= 4 - 1/2 = 3^1/_2 = 7/2$

குன்றத்தில் பாதி சேர்த்தல் $= 7/2 + 3/2 = 10/2 = 5$

வருவது கர்ணம் = வருவது செம்பக்கம். அதாவது, செம்பக்க நீளம் 5 அலகாகும்.

இன்னுமொரு உதாரணத்திற்கு 5, 12 என்பவற்றை நோக்குவோம்.

ஓடும் நீளம்தனை ஒரே எட்டுக்கூறாக்குதல் $= 12/8 = 3/2$

கூறிலே ஒன்றைத் தள்ளுதல் $= 12 - 12/8 = 12 - 3/2 = 12 - 1½$

$= 10½$

குன்றத்தில் பாதி சேர்த்தல் $= 21/2 + 5/2 = 26/2 = 13$

வருவது கர்ணம் = வருவது செம்பக்கம். அதாவது, செம்பக்க நீளம் 13 அலகாகும்.

**வட்டமொன்றின் சுற்றளவு**

இன்று நாம் அனைவரும் வட்டத்தின் சுற்றளவை கணிப்பதற்கு $2\pi r$ அல்லது $\pi d$ எனும் சூத்திரங்களை பாவிக்கிறோம். இச் சூத்திரம் பற்றிய உண்மை பழந்தமிழ் இலக்கியப் பாடல் ஒன்றிலே காணப்படுகிறது என்று சொன்னால் உங்களால் நம்ப முடியுமா?

வட்டத்தின் சுற்றளவை கணிப்பதற்கு காக்கைபாடினியத்தில் ஒரு சூத்திரம் பாடலாக இருக்கிறது. காக்கைபாடினியத்தைப் பாடியவர் காக்கைபாடினியார் ஆவார். இந்த நூல் தோன்றிய காலமாக கி.பி. ஆறாம் நூற்றாண்டு என அறிஞர்கள் கூறுகின்றனர்.

காக்கை பாடினியம் செய்யுள் இலக்கணம் கூறும் ஓர் தமிழ் இலக்கண நூலாகும். இந்த நூல் முழுமையான அளவில் தற்காலத்தில் கிடைக்கவில்லை. இலக்கண நூல்களுக்கு உரை எழுதிய ஆசிரியர்கள் இந்த நூலின் நூற்பாக்களை தம் கருத்துக்கு வலிமை சேர்க்கும் வகையில் மேற்கோள்களாகக் காட்டியுள்ளனர். இந்த நூற்பாக்களையெல்லாம் தொகுத்து இதனை ஒரு தனி நூலாக அண்மையில் உருவாக்கியுள்ளனர். இதில் 89 நூற்பாக்கள் உள்ளன. இனி பாடலையும் பாடலின் உட்பொருள் விளக்கத்தையும் பார்ப்போம்.

**விட்டமோர் ஏழு செய்து**
**திகைவர நான்கு சேர்த்து**
**சட்டென இரட்டி செயின்**
**திகைப்பன சுற்றுத்தானே** -காக்கைபாடினியார்

பரிதி – c எனவும், விட்டம் d எனவும், ஆரை r எனவும் எடுத்துக்கொள்வோம்.

கணிதத்திற்கு என்று சில மொழிகள் உண்டு. அதாவது, சில சொற்களுக்கு குறியீடுகள் அல்லது அடையாளங்களைப் பயன்படுத்துவது வழமை ஆகும். கூட, கூட்டுத்தொகை, விஞ்சுகிறது, மொத்தத்தொகை போன்ற சொற்பதங்கள் வரும் இடங்களில் + அடையத்தைப் பயன்படுத்துகிறோம். வித்தியாசம், குறைய, கழிக்க போன்ற சொற்கள் வரும் இடங்களில் - எனும் அடையாளத்தைப் பயன்படுத்துகிறோம். மடங்கு, பெருக்க போன்ற சொற்கள் வரும் இடங்களில் X எனும் அடையாத்தைப் பயன்படுத்துகிறோம். வருவது, தருவது, பெறுவது, சமன் போன்ற சொற்கள் வரும் இடங்களில் = அடையாளத்தைப் பயன்படுத்திக்கொள்கிறோம்.

உதாரணமாக, ஓர் எண்ணினை 5 ஆல் பெருக்கி 7 ஐக் கூட்டி 2 இனைக் கழித்தால் வருவது 16 ஆகும்.

இங்கே, அந்த எண்ணினை a என எடுத்துக்கொள்வோம். 'பெருக்கி' எனும் சொல்லுக்கு X எனும் அடையாளமும், 'கூட்டி' எனும் சொல்லுக்கு + எனும் அடையாளமும் 'கழிக்க' எனும் சொல்லுக்கு – எனும் அடையாளமும் 'வருவது' எனும் சொல்லுக்கு = எனும் அடையாளமும் இட்டுப் பாருங்கள், குறித்த சமன்பாட்டை நாம் இலகுவில் பெற்றுவிடலாம். அதாவது, $5a + 7 - 2 = 16$ என்பது பெறப்பட்டு விடும்.

இவை போலவே, 'இன்' என்ற சொல்லுக்கு X எனும் அடையாளம் இடுவது போல 'ஓர்' என்ற சொல்லுக்கு 'வகுத்தல்' அடையாளத்தை இட்டுக் கொள்கிறோம்.

விட்டமோர் ஏழு செய்து = $d/7$ (விட்டத்தை 7 ஆல் வகுத்தல் என்று பொருள்)

திகைவர நான்கு சேர்த்து = $d + 4d/7$

$= 11d/7$ (7 ஆல் வகுத்து வந்த பெறுமானத்தின் 4 மடங்கினை விட்டத்தோடு கூட்டு என்று பொருள்)

சட்டென இரட்டி செயின் = $2 \times 11d/7$ (மேலுள்ள பெறுமானத 2 ஆல் பெருக்கு என்று பொருள்)

$= 22d/7$

$= \pi d$

திகைப்பன சுற்றுத்தானே = கிடைப்பது பரிதி ஆகும்.

தற்காலத்தில் $22/7 = \pi$ எனப் பிரதியிட்டுக் கொள்கின்றோம்.

மேலும் விட்டம் என்பது ஆரையின் இரண்டு மடங்காகும். அதாவது $d=2r$ எனப் பிரதியிடும்போது சுற்றளவு $= 2\pi r$ எனும் சூத்திரம் கிடைத்து விடுகிறது. ஆக இன்று வட்டத்தின் சுற்றளவு காண பயன்படுத்தப்படும் சூத்திரங்களை தமிழன் $\pi$ இனைப் பயன்படுத்தாமலே கணித்துள்ளான் என்பதே தமிழராகிய நமக்கெல்லாம் பெருமை ஆகும்.

**வட்டமொன்றின் பரப்பளவு**

**வட்டத் தரை கொண்டு**
**விட்டத் தரை காண**
**சட்டென்று தோன்றும் குழி** -காக்கைபாடினியார்.

சரி பாடலின் விளக்கம் பார்ப்போம்.

வட்டத் தரை = சுற்றளவில் பாதி, கொண்டு = அந்த அளவைக் கொண்டு, விட்டத்து அரை = ஆரை காண = பெருக்கு, சட்டென்று தோன்றும் குழி = குழியின் அளவு என்பது பரப்பளவைக் குறிக்கிறது.

அதாவது, பரிதியின் அரைவாசியை விட்டத்தின் அரைவாசியால் பெருக்க வருவது பரப்பளவு என்பதே மேற்படி பாடலின் உண்மை விளக்கமாகும்.

பரிதி $= c$ எனவும் விட்டம் $= d$ எனவும் பரப்பளவு $= A$ எனவும் எடுத்துக்கொள்வோம்.

அதாவது, $c/2 \times d/2 = A$ ஆகும். ------------------------------ (1)

ஆனால், $c = 2\pi r$, $d = 2r$ ஆகும். இவற்றினை முதலாம் சமன்பாட்டில் பிரதியிட,

$$2\pi r/2 \times 2r/2 = A$$

$$\pi r^2 = A$$

இதுவே தற்காலத்தில் வட்டமொன்றின் பரப்பளவு கணிப்பதற்குப் பயன்படுத்தப்படும் சூத்திரமாகும்.

மரக்குற்றிகள், தூண்கள் இவற்றின் குறுக்குவெட்டு முகப் பரப்பினைக் கணிப்பதற்கு அதன் வட்ட அளவின் அரைவாசியோடு விட்டத்தின் அரைவாசியால் பெருக்கிக் கணித்திருக்கிறார்கள்.

இன்றுவரை பரம்பரைத் தொழிலாகத் தச்சுத்தொழில் செய்யும் தொழிலாளர்கள் மரக்குற்றிகளை அரிவதற்கு முன், அதன் கனவளவைக் கணிக்கிறார்கள். அப்படிக் கணித்தால்தான் என்ன அளவில் எத்தனை பலகை அரிந்து கொள்ளலாம் என்பதைக் கணித்துக் கொள்ளலாம். மேற்படி சமன்பாடு (1) இல் உள்ளவாறு அதன் குறுக்கு வெட்டுமுகத்தினைக் கணித்து அந்தக் குற்றியின் நீளத்தினால் பெருக்கி அதன் கனவளைக் கணிப்பதை அவதானித்திருக்கிறோம்.

ஆகவே சமன்பாடு (1) இன் மூலமாக $\pi$ என்ற அளவைப் பயன்படுத்தாமலேயே வட்டத்தின் பரப்பளவை நம் முன்னோர் கணக்கிட்டுள்ளனர். இது தமிழர்களாகிய நமக்கெல்லம் பெருமைதான்.

# நல்ல நாட்கள் வருகின்றன.

ஒவ்வொன்றும் மாறுகின்றது
சட்டத்தின் சக்கரம்
ஒரு தரிப்பம் இன்றி திரும்புகிறது
மழையின் பின் நல்லதொரு காலநிலை
கண்ணிமைக்கும் நேரத்துள்
அகிலம் தனது சேற்று ஆடைகளை
சுழற்றி எறிகிறது.
ஆயிரக்கணக்கான மைல்களில்
அந்தப் பரவெளி ஒரு தங்க ஆடை போலப்
பரந்திருக்கின்றது.

மென்மையான சூரியப் பிரகாசம்,
இதமான தென்றல்;
மின்னும் இலைகளிடையே
மரங்களில் தொங்குகின்றன
புன்னகை பூக்கும் மலர்கள்

எல்லாப் பறவைகளும்
தீடீரென்று பாடுகின்றன
மனிதர்களும் மிருகங்களும்
மீள் பிறப்பெடுத்து எழுகின்றனர்
துயரத்தின் பின் மகிழ்வு வரும் என்பதை விட
வேறென்ன இயல்பாய் இருக்க முடியும்.

கோசிமின் சிறைக் குறிப்புகள் -
ஆங்கிலத்தில்-ஸ்ரீவ்பிராட்பெர்க்(*Steve Bradburg)*
தமிழில் - **கந்தையா ஸ்ரீகணேசன்**

## வாழ்த்துகிறோம்

மாருதம் இதழ் 15 இல் அட்டைப்பட அதிதியாக நாம் கௌரவித்த வன்னியின் மூத்த படைப்பாளி **கலாபூஷணம், தமிழ்மணி, கலாநிதி முல்லைமணி (வே.சுப்பிரமணியம்)** அவர்களுக்கு கலாசார அமைச்சு கடந்த ஆண்டுக்கான கலை இலக்கியம் சார்ந்த அதி உயர் விருதான **சாகித்ய ரத்னா** விருதை வழங்கிக் கௌரவித்தது. எமது வட்டத்தின் காப்பாளர்களில் ஒருவரான கலாநிதி முல்லைமணி அவர்களுக்கு இவ்விருது கிடைத்ததையிட்டு மகிழ்கிறோம். பாராட்டுகிறோம். வாழ்த்துகிறோம்.

## வாழ்த்துகிறோம்

2015 இல் **குட்டி முயலும் வேட்டைநாயும்** என்ற சிறுவர் நாடக நூலுக்காக தேசிய சாகித்திய விருது பெற்ற எமது வட்ட உறுப்பினர் **திரு. கந்தையா ஸ்ரீ கந்தவேள்** அவர்களையும்

இதே ஆண்டில் **வன்னிப்பிரதேச வயற் பண்பாடு** என்ற ஆய்வு நூலுக்காக வடமாகாண சிறந்த நூற்பரிசையும், **முற்றத்துக்கரடி சிறுகதை தொகுப்பு** நூலிற்காக **தமிழ்நாடு திருப்பூர் இலக்கிய விருதையையும்** பெற்ற வட்டத்தின் தலைவர் **அகளங்கன்** அவர்களையும், சிறுவர் இலக்கியத்திற்கு **கூடிக் குதிப்போம்** என்ற நூலுக்காக இதேபரிசு பெற்ற **திருமதி நெலோமி அன்ரனி குஷரூஸ்** அவர்களையும் வாழ்த்துகிறோம்.

**கலா பூஷணம்** விருது பெற்ற எமது வட்டத்தின் போஷகர் **திரு.க.ஐயம்பிள்ளை** அவர்களையும், **திருமதி.தமயந்தி சுந்தரலிங்கம் (தமிழ்க்கவி)** அவர்களையும். வடக்கு மாகாண முதலமைச்சர் விருது பெற்ற எமது வட்டத்தின் உறுப்பினர் **திரு.இரத்தினசிங்கம் சிவசோதி,** (வவுனியா) அவர்களையும், **திரு.மரியநாயகம் ஞானவாசகம்** (வெங்கலச் செட்டிகுளம்) அவர்களையும் வாழ்த்துகிறோம்.

## வருந்துகிறோம்

ஈழத்தின் மூத்த படைப்பாளி **சாகித்ய ரத்னா செங்கை ஆழியான்,** ஈழத்தின் மூத்த நாடகக் கலைஞர் மாமனிதர் **எஸ்.ரி.அரசு,** கொழும்புத் தமிழ்ச் சங்கத் தலைவர் **கலாநிதி மு.கதிர்காமநாதன், கலாபூஷணம் திருமதி.தேவி மனோகரி நாகேஸ்வரன், கலாபூஷணம் தேவதாசன், கலைஞர் அந்தோனிப்பிள்ளை** ஆகியோரின் மறைவு குறித்து வருந்துகிறோம். ( ஆ-ர் )

# 2015இல் வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் நடாத்திய முழு நிலா நிகழ்வுகள்

**நிகழ்வு 177 - (03.02.2015)**

வித்தியாரத்னா ந.பார்த்திபன் அவர்கள் தலைமையில் இயக்குநர் சிகரம் கே.பாலச்சந்தர் அவர்கள் நினைவாக கருத்தாடல் நிகழ்வு நடைபெற்றது. அறிமுக உரையினை : திரு.நா.தியாகராஜா அவர்கள் வழங்க, இயக்குநர் சிகரம் பற்றிய சிறப்புரையினை வித்தியாரத்னா சி.வரதராஜன் அவர்களும், இன்தமிழ் இனியன் எஸ்.எஸ். வாசன் அவர்களும் வழங்கினர். தொடர்ந்து கருத்தாடல் இடம்பெற்றது. வரவேற்புரை : திரு.மாணிக்கம் ஜெகன். நன்றியுரை : திரு.தர்மலிங்கம் பிரதாபன் அவர்கள்.

**நிகழ்வு 178 - (05.03.2015)**

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் 17வது ஆண்டு நிறைவு விழா வவுனியா இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபத்தில் வெகுசிறப்பாக நடைபெற்றது. தமிழறிஞர் கலாநிதி தமிழ்மணி அகளங்கன் அவர்கள் தலைமை தாங்கினார். பிரதம விருந்தினராக சிறப்பித்தவர் திரு.க.அருள்வேல் (யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக முதல்வர்) அவர்கள். இவ் விழாவானது வழமை போல் மூன்று நிகழ்வுகளாக இடம் பெற்றது. நூல் வெளியீடு, சான்றோர் கௌரவிப்பு, கலை நிகழ்ச்சிகள் என்பவையே அவை. மாருதம் சஞ்சிகை இதழ் 15 வெளியிட்டு வைக்கப்பட்டதுடன் திருமதி.நெலோமி அன்ரனிகுரூஸ் எழுதிய 'கூடிக் குதிப்போம்" சிறுவர் நாடக நூலும் வெளியிட்டு வைக்கப்பட்டது. கவி அளிக்கை, நடனம், நாடகம், வில்லிசை போன்றனவும் இடம்பெற்றன. இவ்விழாவில் ஓய்வு நிலை பிரதி அதிபர் (வ/இ.ம.ம.வி) செல்வி. மேரி அன்ரோனியா ஸ்ரனிஸ்லாஸ் அவர்களுக்கு 'கலை இலக்கியச் செல்வர்" விருதும், ஓய்வு நிலை ஆசிரியை (வ/த.ம.ம.வி) பண்டிதை செல்வி. யோக லட்சுமி சோமசுந்தரம் அவர்களுக்கு 'இயற்றமிழ்ச் செல்வர்" விருதும். ஆசிரிய ஆலோசகர் (நடனம் - வவுனியா தெற்கு வலயம்) திருமதி.சூரியயாழினி வீரசிங்கம் அவர்களுக்கு 'ஆடற்கலைச் செல்வர்" விருதும் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. கௌரவிப்பு உரையினை கலாநிதி.கந்தையா ஸ்ரீகணேசன் அவர்கள் நிகழ்த்தினார். வரவேற்புரை வித்யாரத்னா ந.பார்த்திபன் அவர்கள், நன்றியுரை கந்தையா ஸ்ரீகந்தவேள் அவர்கள்.

**நிகழ்வு 179 - (03.05.2015)**

கலாநிதி தமிழ்மணி அகளங்கன் அவர்கள் தலைமையில் எழுத்தாளர் ஜெயக்காந்தன் அவர்களின் நினைவுக் கருத்தாடல் நிகழ்வு நடைபெற்றது. ஜெயக்காந்தன் ஓர் அறிமுகம் எனும் தலைப்பில் இன்தமிழ் இனியன் எஸ்.எஸ்.வாசன் அவர்களும், ஜெயக்காந்தனின் திரைப்படங்கள் எனும் தலைப்பில் திரு.நா.தியாகராஜா அவர்களும், ஜெயக்காந்தனின் நாவல்கள் எனும் தலைப்பில் திரு.சு.ஜெயச்சந்திரன் அவர்களும் உரையாற்றினர். அதனைத்தொடர்ந்து அமரர்கள் சுப்பிரமணியம் சிவபாலன், கமலினி செல்வராஜன், ஜெயக்காந்தன், நாகூர்.E.M.ஹனிபா ஆகியோருக்கு அஞ்சலி செலுத்தப்பட்டது. வரவேற்புரை : திரு.மாணிக்கம் ஜெகன், நன்றி உரை : செல்வி.து.நந்தீஸ்வரி அவர்கள்

**நிகழ்வு 180 - (02.06.2015)**

வவுனியா ஆங்கிலச் சங்கமும் வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டமும் இணைந்த நடாத்திய அமரர் சுப்பிரமணியம் சிவபாலன் அவர்களின் அஞ்சலிக்கூட்டம் கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

**நிகழ்வு 181 - (31.07.2015)**

கலாநிதி தமிழ்மணி அகளங்கன் அவர்கள் தலைமையில் மெல்லிசை மன்னர் எம்.எஸ்.விஸ்வநாதன் அவர்களின் நினைவுக் கருத்தாடல் நிகழ்வு நடைபெற்றது. அறிமுகவுரையினை திரு. நா.தியாகராஜா அவர்கள் வழங்கினார். சிறப்புரையினை இன்தமிழ் இனியன் எஸ்.எஸ்.வாசன் அவர்கள் வழங்கினார். நிகழ்வில் மெல்லிசை மன்னரின் திரைஇசைப் பாடல்கள் இசைவிருந்தினை ஈழத்து சௌந்தர ராயன் கே.ஆர்.சிவசோதி அவர்கள் வழங்கினார். வரவேற்புரை : செல்வி.து.நந்தீஸ்வரி அவர்கள், நன்றி உரை : திரு.மாணிக்கம் ஜெகன் அவர்கள்

**நிகழ்வு 182 - (29.08.2015)**

கலாநிதி தமிழ்மணி அகளங்கன் அவர்கள் தலைமையில் புரட்சிக் கவிஞர் பாவேந்தர் பாரதிதாசன் எனும் தலைப்பில் கருத்தாடல் நிகழ்வு நடைபெற்றது. தமிழ் சினிமாவும் பாரதிதாசனும் எனும் தலைப்பில் திரு. நா.தியாகராஜா அவர்கள் உரையாற்றினார். பாரதிதாசன் சிறப்புரையினை இலக்கியச்சுடர் ஐ.கதிர்காமசேகரன் அவர்கள் வழங்கினார். வரவேற்புரை : செல்வி. கஜரதி பாண்டித்துரை அவர்கள், நன்றி உரை : திரு.மாணிக்கம் ஜெகன் அவர்கள்

**நிகழ்வு 183 - (27.09.2015)**

கலாநிதி தமிழ்மணி அகளங்கன் அவர்கள் தலைமையில் நடிகர் திலகம் சிவாஜிகணேசன் எனும் தலைப்பில் கருத்தாடல் நிகழ்வு நடைபெற்றது. அறிமுக உரையினை திரு.நா.தியாகராஜா அவர்கள் வழங்க, சிறப்புரையினை திரு.க.ஐயம்பிள்ளை அவர்கள் வழங்கினார், வரவேற்புரை : செல்வி. கஜரதி பாண்டித்துரை அவர்கள், நன்றி உரை : திரு.மாணிக்கம் ஜெகன் அவர்கள்

**நிகழ்வு 184 - (27.10.2015)**

கலாநிதி தமிழ்மணி அகளங்கன் அவர்கள் தலைமையில் கர்நாடக சங்கீதமும் தமிழ்த்திரை இசையும் எனும் தலைப்பில் நிகழ்வு நடைபெற்றது. கர்நாடக இசை தொடர்பில் சிறப்புச் சொற்பொழிவினை சிதம்பரம் இசை மைந்தன் நயினை ப.சிவமைந்தன் (தமிழ்நாடு அண்ணாமலை பல்கலைக்கழகம் இந்தியா) ஆற்றினார். வரவேற்புரை : செல்வி. கஜரதி பாண்டித்துரை அவர்கள், நன்றி உரை : செல்வி.லிர்ஷிகா பகீரதன் அவர்கள்

**நிகழ்வு 185 - (25.11.2015)**

கலாநிதி தமிழ்மணி அகளங்கன் அவர்கள் தலைமையில் படைப்பும் படைப்பாளியும் எனும் தலைப்பில் நிகழ்வு நடைபெற்றது. படைப்பும் படைப்பாளியும் எனும் தொனிப்பொருளில் வித்யாரத்னா ந.பார்த்திபன் அவர்கள் சிறப்புரையாற்றினார். வரவேற்புரை : செல்வி. நந்தீஸ்வரி துரைராஜா அவர்கள், நன்றி உரை : செல்வி. கஜரதி பாண்டித்துரை அவர்கள்

**நிகழ்வு 186 - (24.12.2015)**

கலாநிதி தமிழ்மணி அகளங்கன் அவர்கள் தலைமையில் கவிஞர் நந்தாவின் 'நிலவே நீ சொல்" கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு நடைபெற்றது. பிரதமவிருந்தினராக வவுனியா பிரதேச செயலாளர் திரு.கா.உதயராஜா அவர்கள் கலந்து சிறப்பித்தார். நூல் வெளியீட்டு உரையும் அறிமுகவுரையும் கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் அவர்கள். நூல் நயவுரை சமரபாகு சீனா உதயகுமார் அவர்கள், மற்றும் இன்தமிழ் இனியன் எஸ்.எஸ்.வாசன் அவர்கள். விமர்சன உரை வித்யாரத்னா சி.வரதராஜன் அவர்கள், வரவேற்புரை கலைச்சுடர் த.பிரதாபன் அவர்கள். ஏற்புரையும் நன்றியும் நந்தா அவர்கள் (நூலாசிரியர்).

**நிகழ்வு 187 - (23.01.2016)**

கலாநிதி தமிழ்மணி அகளங்கன் அவர்கள் தலைமையில்

விஸ்வ சங்க சிபிர் 2015, வட இந்திய திருத்தல யாத்திரை எனும் தொனிப்பொருளில் நிகழ்வு நடைபெற்றது. தலைவர் அவர்களது. இந்திய திருத்தல யாத்திரை தொடர்பான பகிர்தலும், கலாபூஷணம் க.ஐயம் பிள்ளை அவர்களின் சிறப்புரையும் இடம் பெற்றது.

**நிகழ்வு 188 - (22.03.2016)**

கலாநிதி தமிழ்மணி அகளங்கன் அவர்களின் தலைமையில்இ லங்கையின் மூத்த எழுத்தாளர் சாகித்ய ரத்னா செங்கை ஆழியான், மூத்த கலைஞர் மாமனிதர் எஸ்.ரி.அரசு, கொழும்புத் தமிழ்ச்சங்கத் தலைவர் கலாநிதி மு.கதிர்காமநாதன் ஆகியோருக்கான அஞ்சலி நிகழ்வு இடம்பெற்றது. அஞ்சலிச் சிறப்புரைகள் டாக்டர்.ஓ.கே.குணநாதன், வித்தியா ரத்னா ந.பார்த்திபன், வரவேற்புரை திரு.த.பிரதாபன், நன்றியுரை கஜரதி பாண்டித்துரை

(நிகழ்வுகள் யாவும் வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தில் நடைபெற்றன. நன்றி சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம்)

- த.பிரதாபன்





வட்டத்தின் 17 ஆண்டு நிறைவு விழாவில் வவுனியா திருமறைக்கலாமன்றத்தின் பச்சைமேகம் நாடகக் காட்சியும், மன்னார் முருங்கன் முத்தமிழ்க் கலாமன்றத்தின் கூத்துவழி நடன நிகழ்வும்

# பாரதிதாசனும் சினிமாவும்

**நா.தியாகராசா B.A**

அகில இந்திய சினிமா திரைப்பட வளர்ச்சியில் தமிழகம் முக்கியமான பங்களிப்பை வழங்கி வருகின்றது. தென்னகத்துக்கே உரித்தான கர்நாடக இசை, ஆரம்ப காலத்திலிருந்தே திரையிலே தனித்தன்மையுடன் பரிணமித்துவந்தது. அந்த இசையை அடிப்படையாகக் கொண்டு, மெல்லிசையானது மலர்ச்சி பெற்று திரையிலே நிரந்தரமாக நிலை பெற்றுள்ளது.

கர்நாடக இசை, மெல்லிசை இரண்டும் திரையிலே கோலோச்சுவதற்கு, சினிமாவுக்கு பாடல்கள் எழுதிய பல பிரபல்யமான கவிஞர்களின் கற்பனா சக்தியும், இசையறிவும், தமிழ் மொழிப் பாவனையில் அவர்களுக்கிருந்த ஆளுமையும், எப்போதும் பாராட்டுக்குரியனவே.

'பாவேந்தர் பாரதிதாசன்' அவர்கள் சினிமாவுக்கும் பாடல்கள் எழுதியவர் என்பதனால் அவருக்கும் அந்த பாராட்டு உண்டு. அவரது கவிதைகள் உலகப்பிரசித்தமானவை. அவரது கவிதைகள் அவர் இருந்த காலத்திலும், அவர் இறந்த பின்னரும், சினிமாவில் பயன்படுத்தப்பட்டுள்ளன. இருந்தாலும், அவரை ஒரு சினிமாக் கவிஞராக மட்டும் அடையாளப்படுதி விட முடியாது. அவரது கவித்துவம் பல்பரிமாணங்களைக் கொண்டது. அவர் சினிமாவிலும் ஆர்வம் காட்டினார் என்பதை ஏற்றுக் கொள்ளலாம்.

**பிறப்பு.**

'எங்கள் வாழ்வும், எங்கள் வளமும் மங்காத தமிழ்' என்று சங்கு முழக்கம் செய்த, புரட்சிக்கவி-பாவேந்தர் பாரதிதாசன் அவர்கள் தென் இந்தியாவின் பாண்டிச்சேரி மாநிலத்தில் 29-04-1891 ஆம் ஆண்டு புதன்கிழமை இரவு 10.15 மணிக்குப் பிறந்தார். தந்தையார் கனகசபை, தாய் இலக்குமி. சுப்புராயன், சிவகாமசுந்தரி ஆகிய மூத்த சகோதரன் சகோதரியோடும், இராசாம்பாள் என்ற இளைய சகோதரியோடும், குடும்பத்தில் மூன்றாவது பிள்ளையாக பாரதிதாசன் பிறந்தார். பெற்றோர் இவருக்கு சுப்புரத்தினம் என்று பெயரிட்டழைத்தனர்.

**கல்வி**

சுப்புரத்தினம் தனது 4 ஆம் வயதில் திருப்புளிச்சாமி ஐயாவிடம் ஆரம்பக் கல்வியைத் தொடங்கினார். புதுச்சேரியில் பிரான்ஸ் அரசாங்க நிர்வாகம் இருந்ததனால், கட்டாயத்தின் பேரில் வெறுப்புடன் பிரெஞ்சு மொழியிலும் கல்வியைத் தொடங்கினார். தமது 6 ஆம் வயதிலேயே பாடல்களைப் பாடுவதிலும், நடிப்பதிலும் ஆர்வம் காட்டத் தொடங்கினார். 13 ஆம் வயதில் பாடல்களைத் தானே எழுதிப் பாடத் தொடங்கிவிட்டார். 1908ல் மகாவித்துவான் பு.அ. பெரியசாமி அவர்களிடமும், அதன் பின்னர்

பெரும் புலவர் பங்காரு பத்தரிடமும் தமிழ் இலக்கியம், இலக்கணம், சித்தாந்தம், வேதாந்தம் என்பவற்றைக் கற்றுத் தேறினார். 1908ல் புலவர் தேர்வில் சித்தி பெற்றார். 1909 ல் தனது 18 வது வயதில் காரைக்காலில் 'நிரவி' என்ற ஊரில் அரசாங்கப் பாடாலையில் ஆசிரியராக நியமிக்கப்பட்டு கடமையாற்றத் தொடங்கினார்.

பாக்கள், பாவினங்கள், சிந்து வகைகள், தனித்தமிழ் வண்ணங்கள், வசனகவிதைகள், மரபுக்கவிதைகள், புதுக் கவிதைகள் என்ற பல்வேறு வடிவங்களையும் கவிதைகள் எழுதுவதில் பாவேந்தர் மிக லாவகமாக கையாண்டுள்ளார். 'ஹைகூ' என்ற மூன்று வரி கவிதைகளையும் கூட அவர் எழுதியுள்ளார்.

'இசையமுது'என்றபெயரில்இசைப்பாடல்கள்பலஎழுதியுள்ளார். மரபுவழிக் கல்வியும், புலமை நலமும், இசை ஞானமும் நிறையப் பெற்ற பாரதிதாசனின் பாடல்கள் யாவும் அழியாச் சித்திரங்கள்தான். இவரிடம் இசைப் புலமையும், கவித்துவமும் ஒன்றுக்கொன்று சமமாக இருந்தன. அதனால் இசைக்குறிப்போடு அவர் எழுதிய பாடல்களெல்லாம் செவி நுகர் கனிகளாக இருக்கின்றன.

மேடைக் கச்சேரிகளில் பாடப்பட்ட சமூகச் சீர்திருத்த கருத்துக்கள் கொண்ட-- சுதந்திரதாகம் கொண்ட --தமிழ் மொழிப்பற்றுக் கொண்ட பாடல்களோடு திரைப்படங்களிலே இடம் பெற்ற பாடல்களும் மிகவும் பிரபல்யமாகின. அப்பாடல்களுக்கு வழங்கப்பட்ட சினிமா திரைஇசை, இசைப் பிரியர்களின் மனங்களை குளிரவைத்துள்ளது.

பாரதிதாசன் சினிமா படங்களுக்காகவே எழுதிக் கொடுத்த பாடல்களும் உண்டு. அவரது கவிதைத் தொகுப்பிலிருந்து அவர் இருந்த போது அவரது அனுமதியுடன் சினிமாவுக்காக எடுத்த பாடல்களும் உண்டு. அவர் இறந்த பின்னர் அவரது கவிதைத் தொகுப்பிலிருந்து சினிமாவுக்கு எடுக்கொண்ட பாடல்களும் உண்டு. அவர் வாழ்ந்த போது அவரோடு முரண்பட்ட திரை உலகத்தினர் அவரது இறப்பின் பின்னர் அவரது பாடல்களைத் தேடிப் பெற்று சினிமாவில் சேர்த்துக் கொண்டு அவருக்கு கௌரவம் கொடுத்ததோடு, தாங்களும் பெருமையடைந்து கொண்டனர் எனலாம்.

1931ல் வெளியான தமிழும் தெலுங்கும் கலந்த 'காளிதாஸ்' படத்துடன் தமிழ் நாட்டில் தமிழ் சினிமா ஆரம்பமானதாக அறியக்கிடக்கிறது. ஆரம்பத்தில் பெருந்தொகையான புராணப்படங்கள் வெளியாகின. சினிமா என்ற ஊடகம் மூலமாக, பழங்கால புராண இதிகாசக் கதைகளை அதாவது மக்களுக்குத் தெரிந்த கதைகளையே திரைப்படமாக்கி மக்களுக்கு காட்டுவதிலேயே அப்போதைய தயாரிப்பாளர்கள் ஆர்வம் காட்டினர். சினிமாவுக்கென்று கதை எழுதிக் கொள்ள யாரும் முன்வரவில்லை. அதோடு கற்பனையிலே சினிமாவுக்கு

கதைகள் புனையப்படலாம் என்றும் எவரும் சிந்திக்கவுமில்லை எனலாம். 1928 லேயே ஈ.வெ.ரா. பெரியாரின் திராவிட இயக்கத்தில் சேர்ந்து கொண்ட பாரதிதாசனுக்கு புராணப் படங்களில் பங்குபற்றிக் கொள்வதற்கு அவரது பகுத்தறிவுக் கொள்கை இடம் கொடுக்கவில்லை. சமூகச்சீர்திருத்தத்தை எதிர்பார்த்த பாரதிதாசன் பழமைவாத புராண இதிகாசக்கதைகளை வெறுத்தார்.

**முதல் திரைப்பிரவேசம் – ஸ்ரீ ராமானுஜர்**

1937 ல் பாரதியாரின் சீடரான வ.ராமசாமி (வ.ரா) என்பவர் மணிக் கொடி எழுத்தாளர்களும், பத்திரிகையாளர்களும் சேர்ந்து தயாரித்த "ஸ்ரீ ராமானுஜர்" என்ற திரைப்படத்துக்குப் பாடல் எழுதித் தரும்படி மிகவும் வற்புறுத்திக் கேட்டதன் பிரகாரம், முதன் முதல் சினிமாவுக்குப் பாவேந்தர் பாடல்கள் எழுதினார். ஏற்கனவே மக்களிடம் பிரபல்யமாயிருந்த தியாகராஜர் கீர்த்தனைகளின் மெட்டுக்களில் இப்படத்துக்குப் பத்து பாடல்களை எழுதினார்.

**பாலாமணி அல்லது பக்காத்திருடன்**

இதற்குள் 'பாலாமணி' அல்லது பக்காத்திருடன் என்ற படத்துக்கு பாவேந்தர் கதை, வசனம், பாடல்கள் எழுதினார். இப்படம் 1937ல் வெளியாகியது. கதை, வசனம், பாடல்கள் இந்த மூன்றையும் முதன் முதல் இப்படத்துக்கே எழுதினார். பதினேழு பாடல்கள் எழுதினார். T.K சண்முகத்தின் வேண்டுகோளின் பேரில் பாவேந்தர் இப்படத்துக்குப் பாடல்கள் எழுதினாராம். T.K முத்துச்சாமி படத்துக்கு இசையமைத்தார் "ராமானுஜர்" படம் தாமதமாகி 1938ல் வெளியாகியது. இவ்விரு திரைப்பட பாடல்களுக்கும் இசையே முக்கியப்படுத்தப்பட்டது. கவிஞரின் உணரச்சிபூர்வமான கற்பனைக் கவி வரிகள் இரண்டாம் பட்சமாயின.

பண்டிதர்களிடம் சிக்கியிருந்த தமிழை பாரதியார் விடுவித்தார்- பாமரருக்கும் தழிழைப் புரியவைத்தார். பாமரத்தனங்களில் சிக்கியிருந்த சினிமாவை பழமை வாதத்திலிருந்து மீட்டு யதார்த்த வாதத்துக்கு- சமூகச் சீர்திருத்தத்துக்கு திருப்பிவிட பாரதிதாசன் சிந்தித்தார்.

1938ல் "தமிழ் நாட்டில் சினிமா" என்ற தலைப்பில் கவிதை எழுதி தமிழ் சினிமாக்களைக் கடுமையாக விமரிசனம் செய்தார்.

**"என் தமிழர் படமெடுக்க ஆயத்தம் செய்தார்...**
**எடுத்தார்கள் ஒன்றிரண்டு பத்து நூறாக, ஒன்றேனும்**
**தமிழர் நடை உடை பாவனைகள்**
**உள்ளதுவாய் அமைக்கவில்லை உயிர் உள்ளதில்லை".**

இந்தக்கவிதை சினிமாத்துறைக்கு கொடுத்த சாட்டை அடியாக இருந்தது. சினிமாவில் செய்யப்படும் தமிழ் மொழிக்கொலை தமிழ்க் கலாசாரப் பண்பாட்டுக் கொலை என்பவற்றை மிக காரசாரமாகக் கண்டித்தார். இது தவிர "படத் தொழிற் பயன்கள்" என்ற தலைப்பில் கேள்வி பதில் போல

பின்வருமாறு கவிதை எழுதியுள்ளார்.

**"நூறாயிரக்கணக்காய் செலவிட்டு**
**நூற்றுக்கணக்காய் திரைப்படம் ஆக்கினர்**
**மாறான எண்ணத்தை மட்டக்கதைகளை**
**மக்களுக் கீந்தனர் அண்ணே- அது**
**தக்கது வோபுகல் அண்ணே"**

இப்படி கூறினாலும் இந்த படக்கலையினால்; தெலுங்கு, மலையாளம், கன்னடம், ஆகிய எல்லா மொழிகளும் தமிழிலிருந்து பிறந்தவை என்று நிரூபிக்கலாம் என்றும் சொன்னார்.

**காளமேகம்**

1940ல் நாதஸ்வரக்கலைஞர், திருவாவடுதுறை T.N. இராசரத்தினம்பிள்ளை அவர்கள் கவி காளமேகமாக நடித்த 'காளமேகம்' திரைப்படத்துக்கு கதை வசனம் பாடல்களை பாவேந்தர் எழுதினார். இதற்காகப் பாவேந்தர் 3000/= ரூபாய் சம்பளமாகப் பெற்றுக் கொண்டதாகவும் அறியக்கிடக்கிறது. இதிலே இந்தி மெட்டுக்களைப் பயன்படுத்தாமல் சுத்தமான கர்நாடக இசையை T.N இராசரத்தினம்பிள்ளை இசைத்துக் காட்ட அந்த இசைகளுக்கேற்றபடி பாரதிதாசன் படத்துக்கான பாடல்களை எழுதினார். இதிலே

**"ஆடிடும் மயில் மிசை ஏறிடும் முருகா**
**ஆதரவாகிட நீ வாராயோ"**

என்ற 'பியாக்' ராகப் பக்திப்பாடல் மிகவும் பிரபல்யமானது. இப்படத்தில் பாவேந்தரின் 20 பாடல்கள் இடம் பெற்றுள்ளதோடு, காளமேகப் புலவர் பாடிய 8 பாடல்களும் கூட இடம் பெற்றுள்ளன. மேலும் அமெரிக்கர்களான எல்லீஸ் R. டங்கன், வில்லியம் ஜே. மாய்லன் இப்படத்துக்கான நெறியாள்கையைச் செய்திருந்தனர். R.N. சின்னையா இசையமைத்தார். சேலம் மோகினி பிக்சர்ஸ் இப்படத்தை ஆரம்பித்து பின்னர் மதுரை தண்டாயுதபாணி பிலிம்ஸாரோடு சேர்ந்து கூட்டுத் தயாரிப்பாக வெளியிட்டனர்.

1944ம் ஆண்டில் பாரதியாரின் வரலாற்றைத் திரைப்படமாக்குவதற்காக பாவேந்தர் சென்னைக்கு வந்தார். பாகஸ்தர்களுக்குள் தகராறு ஏற்பட்டதனால் அந்த முயற்சியைக் கைவிட்டு மீண்டும் புதுச்சேரிக்குச் சென்று விட்டார்.

**சுபத்திரா, சுலோசனா, ஆயிரம் தலை வாங்கிய அபூர்வ சிந்தாமணி.**

1947 – 1953 வரை மொடேர்ண் தியேட்டர்ஸ் நிறுவனத்தினர் தமது படங்களுக்கு கதை, வசனம் எழுதுவதற்கு பாரதிதாசன் அவர்களை ஒப்பந்தம் செய்து கொண்டனர். 'சுபத்திரா' 'சுலோசனா' ஆகிய புராணப் படங்களுக்கு கதை, வசனம், பாடல்கள் எழுதுவதற்கு முதலில் அவர்

மறுப்புத் தெரிவித்தார். பின்னர் அவற்றிலே இராவணன், இந்திரஜித் போன்ற திராவிட வீரர்கள் பற்றி எழுதுவதற்கும் சந்தர்ப்பம் இருந்ததால் ஒப்புக் கொண்டு எழுதினார்.

சுலோச்னா திரைப்படம் 1944 ம் ஆண்டில் எடுக்கப்பட்டது. இதற்கு கதை, வசனம் பாடல்கள் எழுதினார். சுபத்திரா திரைப்படம் 1946 ம் ஆண்டில் எடுக்கப்பட்டது. இதற்கு வசனம் எழுதினார். 'ஆயிரம் தலை வாங்கிய அபூர்வ சிந்தாமணி' திரைப்படம் 1947 ம் ஆண்டில் வெளியானது. இதற்கு கதை, வசனம், பாடல்கள் எழுதினார்.

**பொன்முடி**

பாவேந்தரின் 'எதிர்பாராத முத்தம்' என்ற கவிதைக் காவியம் "பொன்முடி" என்ற பெயரில் 1949ல் திரைப்படமாகியது. இதற்கான கதை, வசனங்களை பாவேந்தர் எழுதினார். பாடல்கள் எழுதவில்லை. T.R. சுந்தரம் தயாரித்தார். அமெரிக்கரான எல்லீஸ் ஆர்.டங்கன் படத்தை நெறியாள்கை செய்திருந்தார்.

**ஓர் இரவு.**

1951 ல் AV மெய்யப்பச் செட்டியார் 'பெற்றோர் ஆவல்' என்ற தலைப்பில் பாவேந்தர் எழுதிய

**"துன்பம் நேர்கையில் யாழெடுத்து நீ இன்பம் சேர்க்கமாட்டாயா?**
**எமக்கு கின்பம் சேர்க்க மாட்டாயா?**
**அன்பிலா நெஞ்சில் தமிழில் பாடி நீ அல்லல் நீக்க மாட்டாயா"?**

என்ற தனிப் பாடலை தனது 'ஓர் இரவு' என்ற திரைப்படத்தில் சேர்த்துக் கொண்டார். A. நாகேஸ்வரராவும், லலிதாவும் காட்சியில் நடித்திருந்தனர். M.S. ராஜேஸ்வரியும், வர்மாவும் மிக இனிமையாகப் பாடலைப் பாடியிருந்தனர். அறிஞர் அண்ணாத்துரை கதை வசனம் எழுதியிருந்தார்.

பெற்றோர் தங்கள் மகளிடம், தமது எதிர்பார்ப்பை வாற்சல்ய அன்போடு கேட்பதாக அமைந்த இப்பாடலை, காதலர் பாடும் பாட்டாக இசையமைப்பாளர் R .சுதர்சனம் மாற்றிக் கொண்டார். அதனால் பாடலில் உள்ள கடைசி சரணங்கள் திரைப்படத்தில் இடம் பெறவில்லை. இப்படி மாற்றிக் கொண்டதற்காக பாவேந்தர் கவலைப்பட்டதாகவும் அறியக்கிடக்கிறது.

ஏற்கனவே இப்பாடலுக்கு 'தேஸ்' ராகத்தில் வர்ணமெட்டு அமைத்து, இசை அரசு தண்டபாணி தேசிகர் அவர்கள் மேடைகளில் பாடிக் கொண்டிருந்தார். மெட்டுப் போடுவற்கு 2 வருடங்கள் முயற்சி எடுத்ததாக தேசிகர் சொல்லியிருக்கிறார். AVM நிறுவனத்தார் K.R. ராமசாமி மூலம் ரூபா 1000/= கொடுத்து இப்பாடலை பயன்படுத்துவதற்கான அனுமதியை பாவேந்தரிடமும், தேசிகரிடமும் பெற்றுக் கொண்டார்கள் என்றும் அறியக்கிடக்கிறது.

**வளையாபதி**

1952ல் T.R. சுந்தரத்தின் நெறியாள்கையில் மொடேண் தியேடர்ஸ்ஸார் ஐம்பெரும் காப்பியங்களில் ஒன்றான 'வளையாபதி' கதையைத் திரைப்படமாகத் தயாரித்தனர். இப் படத்துக்கு வசனமும், பாடல்களும் பாவேந்தர் எழுதினார். இவரது வசனங்களை உதவி இயக்குனரான ரகுநாத் நீக்கியதும் திருத்தியதும், பாவேந்தருக்கு கோபத்தை உண்டாக்கியது. 4 படங்களுக்காக ரூபா 40,000/= சம்பளத்தோடு செய்து கொண்ட ஒப்பந்தங்களையும் நிராகரித்து விட்டு மொடேண் தியேடர்ஸ்சை விட்டு அவர் வெயியேறிவிட்டார்.

வளையாபதிக்கு வசனம் எழுதியதற்காக ரூபா 3000/= வாங்கிக் கொண்டு பாவேந்தர் புதுச்சேரிக்கே போய்விட்டாராம். அதன் பின்னர் அவர் திரைத் துறையை நாடவில்லை. வளையாபதியில் கவிஞரின் இரண்டு பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

**"குலுங்கிடும் பூவிலெல்லாம் தேனருவி கண்டதனால் - வண்டு**
**காதலினால் நாதா தாவிடுதே தாவிடுதே இன்பம் மேவிடுதே"**

இந்தப் பாடலை T.M. சவுந்தரராஜனும், K. யமுனாராணியும், பாடியிருந்தனர் .G.ராமநாதன் இசையமைத்திருந்தார். இந்தப்பாடலிலே "கமழ்ந்திடும் பூவிலெல்லாம்" என்று பாவேந்தர் எழுதியதை இசையமைப்பாளர் G.ராமநாதன் அவர்கள் "குலுங்கிடும் பூவிலெல்லாம்" என்று மாற்றி விட்டார். அதை பாவேந்தர் கடுமையாக ஆட்சேபித்தார். மொடேண் தியேட்டேஸ்சாருடன் பாரதிதாசன் முரண்பட்டதற்கு இதுவும் ஒரு காரணமாகிவிட்டது.

**"குளிர் தாமரை மலர்ப் பொய்கை கண்டேன்**
**எளிதோ கிடைப்பது அரிதோ ஏழை இன்ப வாழ்க்கை"**

இந்தப்பாடலையும் T.M சவுந்தரராஜனும், K. யமுனாராணியும் பாடியிருந்தனர். S.தட்சினாமூர்த்தி அவர்கள் மிக வித்தியாசமாக இசையமைத்திருந்தார்.

**பராசக்தி**

1952 ல் M.S. பாலசுந்தரத்தின் மூலக்கதைக்கு கலைஞர் மு. கருணாநிதியின் திரைக் கதை, வசனத்தில் நாஸ்னல் பிக்சர்ஸ் தயாரித்த "பராசக்தி" திரைப்படம் வெளியானது. இது நடிகர் திலகம் சிவாஜி கணேசனுக்கு முதல் படம். இதிலே பாரதிதாசனின்

**"வாழ்க வாழ்கவே வளமார் எங்கள் திராவிடநாடு**
**வாழ்க வாழ்க வாழ்கவே"**

என்ற பாடல் நடன காட்சியில் இடம் பெற்றிருக்கிறது. குசலகுமாரி நடனமாடியுள்ளார். R. சுதர்சனத்தின் இசையில் M.L. வசந்தகுமாரி ராகமாலிகையில் இப்பாடலைப் பாடியிருக்கிறார். கலைஞர்

கருணாநிதியின் வேண்டுகோளுக்கிணங்கி, பாவேந்தர் இப்பாடலை பராசக்தி படத்தில் பயன்படுத்த அனுமதியளித்தார். பாடலுக்குப் பணம் பெற்றுக் கொள்ளவில்லை. மேலும் இப்படத்தில் கவிஞரின் பின்வரும் கவிதை வரிகள் சிவாஜி கணேசன் பேசும் வசனங்களாக இடம் பெற்றிருக்கின்றன.

**"ஓடப்பராயிருக்கும் ஏழையப்பர்**
**உடையப்பராகிவிட்டால்- ஓர் நொடிக்குள்**
**ஓடப்பர் உயரப்பர் எல்லாம் மாறி**
**ஒப்பப்பர் ஆய்விடுவார் உணரப்பா நீ."**

**பணம்**

1952 ல் கலைஞர் மு.கருணாநிதியின் திரைக் கதை வசனத்தில், N.S. கிருஸ்ணனின் நெறியாள்கையில், சிவாஜி, பத்மினி, நடித்த 'பணம்' திரைப்படம் வெளியாகியது இதிலே பாரதிதாசனின்

**"பசியென்று வந்தால் ஒரு பிடி சோறு புசி என்று தந்து பாரப்பா"**
**பசையற்ற உன் நெஞ்சில் இன்பம் உண்டாகும்"**

என்ற பாடல் விஸ்வநாதன் ராமமூர்த்தியின் இசையில் ஒலிக்கிறது. பாரதிதாசனின் 'இசையமுது' தொகுப்பில் சிறுவர் பகுதியில் 'இன்பம்' என்ற தலைப்பில் இப்பாடல் இடம் பெற்றிருக்கின்றது. இப்பாடலில் இறுதியில் வரவேண்டிய சரணங்கள் சில அப்போதைய கடுமையான தணிக்கை காரணமாகத் திரை இசையில் இடம் பெறவில்லை.

**கல்யாணி**

1952 ல் மஸ்தானின் நெறியாள்கையில், S.தட்சினாமூர்த்தியின் இசையமைப்பில் மொடேண் தியேட்டர்ஸ் தயாரித்த "கல்யாணி" என்ற திரைப்படம் தமிழ், தெலுங்கு, மொழிகளில் வெளியானது. இதிலே பாரதி தாசனின்

**"அதோ பாரடி அவரே என் கணவர்**
**புதுமாட்டு வண்டி ஓட்டிப் போகிறார் என்னை வாட்டி"**

என்ற பாடல் இடம் பெற்றிருக்கிறது.

**அந்தமான் கைதி**

1952 ல் கு.சா. கிருஸ்ணமூர்த்தியின் கதை, வசனம், பாடல்களுடன் கோவிந்தராஜுலு நாயுடுவின் இசையமைப்பில், வி.கிருஸ்ணனின் இயக்கத்தில் M.G. ராமச்சந்திரன், M.S திரௌபதி, நடிப்பில் "அந்தமான் கைதி" திரைப்படம் வெளியானது. இதிலே

**'அந்த வாழ்வுதான் எந்த நாள் வரும்?**
**இந்த மாநிலம் முழுதாண்டிருந்தார்.**
**இணையின்றி வாழ்ந்தார் தமிழ் நாட்டு வேந்தர்"**

என்ற பாரதிதாசனின் பாடல் இடம் பெற்றுள்ளது.

**என் தங்கை**

1952 ல் C.H நாராயணமூர்த்தி, MKR நம்பியார் ஆகியோரின் இயக்கத்தில், C.N.பாண்டுரங்கனின் இசையமைப்பில், "என் தங்கை" திரைப்படம் வெளியானது. இதில் M.G ராமச்சந்திரன், S.R. ஜானகி, E.V சறோஜா, முதலியோர் நடித்திருந்தனர். இதிலே பாரதிதாசனின் 2 பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

**"காதல் வாழ்விலே மகிழ்ந்தோம்**
**கவலை தவிர்ந்தோம்- நாம்**
**மாதர் என்னும் மலரும்- ஆண்-**
**மக்கள் என்னும் வண்டுங்குலவும்"**

என்ற பாடலை T.A. மோதியும், P.லீலாவும் பாடியுள்ளனர்.

**"வாழ்வதிலும் நலம் சூழ்வதிலும் - புவி**
**மக்களெல்லாம் ஒப்புடையார்**
**ஏழ்மையில் மக்களைத் தள்ளுவதோ-இதை**
**இன்பமெனச் சிலர் கொள்ளுவதே?.**

இந்த இரண்டு பாடல்களும் சினிமாவுக்காக எழுதப்பட்டுள்ளன.

**பூங்கோதை**

1953ல் L.V. பிரசாத்தின் இயக்கத்தில், ஆதிநாராயணராவின் இசையமைப்பில், சக்தி T.K.கிருஷ்ணசாமியன் வசனத்தில் சிவாஜி கணேசன், அஞ்சலிதேவி, ஆகியோரின் நடிப்பில் தமிழ், தெலுங்கு, மொழிகளில் நசனல் பிக்சஸ்சாரின் "பூங்கோதை" திரைப்படம் வெளியானது. இதிலே தமிழ் படத்தின் title பாடலாக பாரதிதாசனின்

**"தாயகமே வாழ்க தாயகமே வாழ்க**
**தமிழ் கேரளம் தெலுங்கு சீர்துளு மருவிய**
**தாயகமே வாழ்க தாயகமே வாழ்க"**

என்ற பாடல் இடம் பெற்றுள்ளது

**திரும்பிப்பார்**

1953ல் கலைஞர் மு. கருணாநிதியின் கதை வசனத்தில், T.R. சுந்தரத்தின் இயக்கத்தில், G.ராமநாதனின் இசையமைப்பில், சிவாஜி கணேசன், P.V. நரசிம்மபாரதி, பண்டரிபாய் முதலியோரின் நடிப்பில் "திரும்பிப்பார்" திரைப்படம் வெளியானது. இதிலே பாரதிதாசனின் 'இசையமுது' தொகுப்பிலே இருந்து எடுக்கப்பட்ட பின் வரும் பாடல் இடம் பெற்றிருக்கிறது.

**"பாண்டியன் என் சொல்லைத் தாண்டிப் போனான்டி**
**ஈண்டு மயலில்நான் தூண்டிலில் மீனாய்**
**மாண்டிட விடுத்தே வேண்டிட வேண்டிட"**

இப்பாடல் மரபுக் கவிதை இலக்கணத்துக்கு அமைவாக

எழுதப்பட்டதோடு, கர்நாடக பாணியில் ராகமாலிகை வர்ண மெட்டில் பாடப்பட்டுள்ளது.

**இரத்தக் கண்ணீர்.**

1954ல் திருவாரூர் தங்கராசுவின் கதை வசனத்தில், கிருஸ்ணன் பஞ்சு இயக்கத்தில், C.S. ஜெயராமனின் இசையமைப்பில், நடிகவேள் M.R, ராதா, M.N.ராஜம், முதலியோரின் நடிப்பில் நசனல் பிக்சர்ஸ் "இரத்தக் கண்ணீர்" திரைப்படம் வெளியானது. இதிலே பாரதிதாசனின் 'இசையமுது' தொகுப்பிலிருந்து எடுக்கப்பட்ட பின்வரும் "ஆலைத் தொழிலாளி" பாட்டு இடம்பெற்றிருக்கிறது.

**"ஆலையின் சங்கே நீ ஊதாயோ- மணி**
**ஐந்தான பின்னும் பஞ்சாலையின் சங்கே நீ ஊதாயோ"**

கர்நாடக பாணியில் ராகமாலிகை வர்ண மெட்டில் அமைக்கப் பட்ட இந்தப் பாடலை M.L,வசந்தகுமாரி பாடியுள்ளார்.

**என் மகள்**

1954 ல் விருதை ந. ராமசாமியின் வசனத்தில், சி.என் பாண்டுரங்கனின் இசையமைப்பில், K.V.R.ஆச்சார்யா, M.K.R. நம்பியார் ஆகியோரின் இயக்கத்தில் ரஞ்சன், S.வரலட்சுமி முதலியோரின் நடிப்பில் அசோகா பிக்சர்ஸ் வெளியீடாக "என் மகள்" திரைப்படம் வெளியானது. இப்படத்திலே பாரதிதாசன் எழுதிய பின்வரும் பாடல் இடம் பெற்றுள்ளது.

**"எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்**
**மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு".**

இப்பாடல் சண்முகப்பிரியா, காபி, மோகனம் போன்ற ராகங்களில் ராகமாலிகையாக அமைந்ததோடு, தாள வேறுபாடும் மிகத் துல்லியமாக ரசிக்கக் கூடியதாக அமைந்திருப்பது மிக அபூர்வமானதாகும். இந்தப்பாடல் மீண்டும் 1965 ல் M.S. விஸ்வநாதனின் மிக உன்னதமாக இசையமைப்பில், சீர்காழி கோவிந்தராஜன், சுசீலா குழுவினரால் பாடப்பட்டு, 'கலங்கரை விளக்கம்" என்ற படத்திலும் இடம் பெற்றுள்ளது. இருந்தும் இப்பாடலில் வரும் பாரதிதாசனின்

**"சிங்களம் சேர் தென்னாட்டு மக்கள்**
**தீராதி தீரர் என்று ஊது சங்கே"**

என்ற வரிகள் நீக்கப்பட்டுள்ளன. ஆனால் 1954 வெளியான என் மகள் படத்தில் இவ் வரிகள் இடம்பெற்றுள்ளன.

**கல்யாணம் பண்ணியும் பிரமச்சாரி**

1954 ல் ப. நீலகண்டனின் இயக்கத்தில், T.G. லிங்கப்பாவின் இசையில், P.R. பந்துலுவின் தயாரிப்பில், சிவாஜி கணேசன், பத்மினி, நடிப்பில் 'கல்யாணம் பண்ணியும் பிரமச்சாரி' திரைப்படம் வெளியானது.

இதிலே பாரதிதாசனின்

**"வெண்ணிலாவும் வானும் போலே**
**வீரனும் கூர் வாளும் போலே"**
**வண்ணப் பூவும் மணமும் போலே**
**மகர யாழும் இசையும் போலே"**

என்ற பாடலை ராதா ஜெயலட்சுமி பாடியுள்ளார். படத்திலே பத்மினி நடனம் ஆட, ராகினி பாடுவதாக காட்சி அமைந்திருக்கிறது. தண்டபாணி தேசிகர் இசையமைத்து மேடைகளில் பாடிய இந்தப் பாடலை, அதே மெட்டையே பயன்படுத்தி, அவரது அனுமதியோடும், பாரதிதாசனின் அனுமதியோடும் திரை இசையாக்கியதாக T.G லிங்கப்பா கூறியுள்ளார்.

**கோமதியின் காதலன்**

1955 ல் சிரிப்பு நடிகர் T.R. ராமச்சந்தின் தயாரித்த, "கோமதியின் காதலன்" திரைப்படம் வெளியானது. T.R. ராமச்சந்திரன், சாவித்திரி, நடித்திருந்தனர். இப்படத்துக்குப் பல பிரபல கவிஞர்கள் பாடல்கள் எழுதியிருந்தனர். இதிலே 'புரட்சிக்கவி' என்ற தலைப்பில் பாரதிதாசன் எழுதிய குறுங் காப்பியத்தின் விருத்தங்களில் ஒரு விருத்தம் பயன்படுத்தப்பட்டுள்ளது.

**"நீலவாண ஆடைக்குள் உடல் மறைத்து**
**நிலாவென்று காட்டுகின்றாய் ஒளி முகத்தை**
**கோலம் முழுவதும் காட்டிவிட்டால் காதற்**
**கொள்ளையிலே இவ்வுலகம் சாமோ"**

A.M ராஜா பாடியுள்ள "புதுமை நிலா" என்ற பாடலுக்குத் தொகையறாவாக இவ் விருத்தத்தைச் சேர்த்து G.ராமநாதன் இசையமைத்துள்ளார்.

**நானே ராஜா**

1955 ல் கவிஞர் கண்ணதாசனின் திரைக் கதை வசனத்தில், வீணை T.R. ராம்நாத் என்பவரது இசையமைப்பில், இ.அப்பாராவ், P.V.நாராயணன் ஆகியோரின் நெறியாள்கையில் சிவாஜி கணேசன், M.N.ராஜம், ஆகியோரின் நடிப்பில், R.R. சந்திரன் தயாரித்து வெளியிட்ட ராஜா ராணி கதைதான் "நானே ராஜா" திரைப்படம். இதிலே பாரதிதாசனின் இசையமுது தொகுதியின் "காதல்" பகுதியில் 'ஆடவந்தாள்' என்ற தலைப்பின் கீழ் ஆண் பாடுவதாக எழுதப்பட்ட பின்வரும் பாடல் படத்திலே இரு பெண்கள் பாடுவதாக அமைந்துள்ளது. காம்போதி, வசந்தா ஆகிய ராகங்களில் P.லீலாவின் குரலில் இப் பாடல் மிகவும் இனிமையாக ஒலிக்கிறது.

"ஆடற் கலைக்கழகு தேடப் பிறந்தவள்
ஆடாத பொற்பாவை ஆடவந்தாள்
என்னோடாட வந்தாள் மகிழ்ந் தாடவந்தாள்.."

**ரங்கூன் ராதா**

1956ல் அறிஞர் அண்ணாவின் கதை, கலைஞர் மு.கருணாநிதியின் வசனம், T.R. பாப்பாவின் இசை, A.காசிலிங்கத்தின் நெறியாள்கை, சிவாஜி கணேசன், P.பானுமதி, ஆகியோரின் நடிப்பு என்பவற்றோடு மேகலா பிக்சஸ்சார் தயாரித்து வெளியிட்ட திரைப்படம் "ரங்கூன் ராதா." தண்டபாணி தேசிகர் மெட்டமைத்து மேடைகளிலே பாடி வந்த பாரதிதாசனின்

"தலைவாரிப் பூச்சூட்டி உன்னை —பாட
சாலைக்கு போ என்று சொன்னாள் உன் அன்னை
சிலை போல ஏனங்கு நின்றாய்-நீ
சிந்தாத கண்ணீரை ஏன் சிந்துகின்றாய்."

என்ற பாடல் ரங்கூன் ராதா படத்துக்காக நடிகை பானுமதி பாடி ஒலிப்பதிவு செய்யப்பட்டது. பெண்கல்வியை வலியுறுத்தும் இப்பாடல் மிகவும் பிரபல்யமானது. ஆனால் இப்பாடலுக்காக பாரதிதாசன் அதிக தொகை பணம் கேட்டதனால் திரைப்படத்தில் இப்பாடல் இடம்பெறவில்லை.

**குலதெய்வம்**

1956 ல் பிரபாவதிதேவி சரஸ்வதி என்பவர் எழுதிய வங்காளக் கதை, முரசொலி மாறனின் தமிழ் வசனத்தில், R.சுதர்சனத்தின் இசையமைப்பில், கிருஷ்ணன் பஞ்சுவின் நெறியாள்கையில், AVM நிறுவனத்தாரின் வெளியீடாக "குலதெய்வம்" என்ற படம் வெளியானது. விதவைத் திருமணத்தை வலியுறுத்தும் இப்படம் பின்னர் 'பாபி' என்ற பெயரில் இந்தி யிலும் எடுக்கப்பட்டது. 'கைம்மைப்பழி' என்ற தலைப்பில் பாரதிதாசன் எழுதிய கவிதை ஒன்று சினிமா இசைக்கேற்றபடி தொகையறா, பல்லவி, சரணங்கள் என்று முன்பின்னாக மாற்றப்பட்டு C.S. ஜெயராமனின் குரலில் அசரீரிப் பாடலாக திரையில் ஒலிக்கிறது. C.S. ஜெயராமனின் குரலில் திரையிலே பல அசரீரிப் பாடல்கள் அந்தக் காலத்திலே மிகப் பிரமாதமாக ஒலித்தன. அதிலே பின்வரும் இந்தப் பாடலும் பிரபல்யமடைந்திருந்தது.

"வெட்கமில்லை வெட்கமில்லை- இதில்
யாருக்கும் வெட்கமில்லை-
கோரிக்கையற்றுக் கிடக்குதண்ணே —இங்கு
வேரிற் பழுத்த பலா-மிகக்
கொடிய தென்றெண்ணிடப் பட்டதண்ணே
குளிர் வடிகின்ற வட்ட நிலா."

**பெற்றமனம்**

1960 ல் டாக்டர் மு.வரதராசன் எழுதிய 'தாய்மையின் பெருமையை' எடுத்துச் சொல்லும் கதைக்கு திருவாரூர் K.தங்கராசு திரைக்கதை வசனம் எழுத, சிவாஜி கணேசன், M.N. ராஜம், ஆகியோரின் நடிப்பில்: A.பீம்சிங்கின் இயக்கத்தில், S.ராஜேஸ்வரராவின் இசையமைப்பில் வெளியான திரைப்படம் "பெற்றமனம்." இதலே பாரதிதாசனின் 3 பாடல்கள் இடம் பெற்றுள்ளன.

**"ஒரே ஒரு பைசா தருவது பெரிசா**
**போடுங்கள் சும்மா புண்ணியம் அம்மா"**

இந்தப் பாடலை சூலமங்கலம் ராஜலட்சுமி பாடியுள்ளார்.

**"பாடிப் பாடிப் பாடி வாடி வானம்பாடி**
**பழமா உதடா இது"**

இந்தப் பாடலை J.P.சந்திரபாபு பாடி நடித்துள்ளார்.

**"மனதிற்குகந்த மயிலே வான்விட்டு வந்த நிலாவே—ஆ"**

இந்த பாடலையும் J.P.சந்திரபாபு பாடி நடித்துள்ளார்

இந்த 3 பாடல்களையும் தவிர பாவேந்தரின் "புதியதோர் உலகம் செய்வோம் கெட்ட போரிடும் உலகத்தை வேரோடு சாய்ப்போம்" என்ற பாடலின் தொடக்க வரிகள் இப் படத்தின் இறுதியில் சீர்காழி கோவிந்தராசனின் குரலில் ஒலிக்கின்றது. பிற் காலத்தில் இவ்வரிகள் முழுப்பாடலாக 'சந்திரோதயம்', 'பல்லாண்டு வாழ்க" ஆகிய படங்களிலும் இடம் பெற்றிருக்கின்றன.

**கலங்கரை விளக்கம்**

1965 ல் மா.லட்சுமணனின் மூலக்கதைக்கு, G.பாலசுப்பிரமணியம் திரைக்கதை எழுத சொர்ணம் வசனம் எழுத, M.S. விஸ்வநாதனின் இசையமைப்போடு, K.சங்கரின் நெறியாள்கையில் MG. ராமச்சந்திரன் P.சரோஜாதேவி ஆகியோரின் நடிப்பில் சரவணா பிலிம்ஸ் சார்பில் G.N. வேலுமணி தயாரித்து வெளியிட்ட திரைப்படம் "கலங்கரை விளக்கம்" இப்படத்தில் 'சங்கநாதம்' என்ற தலைப்பில் பாரதிதாசன் எழுதிய பின்வரும் பாடல் இடம் பெற்றுள்ளது.

**"சங்கே முழங்கு சங்கே முழங்கு சங்கே முழங்கு!**
**எங்கள் வாழ்வும் எங்கள் வளமும்**
**மங்காத தமிழ் என்று சங்கே முழங்கு**
**எங்கள் பகைவர் எங்கோ மறைந்தார்**
**இங்குள்ள தமிழர்கள் ஒன்றாதல் கண்டே"**
**பொங்கு தமிழர்க்கு இன்னல் விளைத்தால்**
**சங்காரம் நிசம் என்று சங்கே முழங்கு"**

பாரதிதாசனின் இதயத்தில் பொங்கிய தமிழ் உணர்ச்சிப்

பிரவாகத்தை இசையிலே படம்பிடித்த விந்தை இப்பாடலில் நிகழ்ந்திருக்கிறது. பாரதி தாசன் இருந்த போது மதிப்புக் கொடுக்காத திரை உலகத்தினர், அவர் இறந்த பின்னர் அவருக்கு இறுதி அஞ்சலி செலுத்துவது போல் அவரது சில பாடல்களை தேர்ந்தெடுத்து பயன்படுத்தியுள்ளனர். அந்த வகையில் இந்தப்பாடல் இசையமைப்பினாலும், காட்சியமைப்பினாலும், மிக அதிகமான ரசிகர்களின் மனதைக் கவர்ந்திருக்கிறது. இந்தப் பாடலுக்கான மேடைக் காட்சியோடு, டாக்டர் சீர்காழி கோவிந்தராஜன் சுசீலா குழுவினரின் குரலிசையில், சங்கின்

நாதம், செண்டை மேளத்தின் முழக்கம், என்பவற்றோடு மோகன ராகத்தில் கம்பீரமாகவும், மகோன்னதமாகவும் ஒலிக்கும் இப்பாடலை பாரதிதாசன் கேட்டிருந்தால் மிக மிக சந்தோசப்பட்டிருப்பார். இந்தப் பாடலிலே பாரதி தாசன் எழுதிய “சிங்களம் சேர் தென்னாட்டு மக்கள் தீராதி தீரர் என்று ஊது சங்கே” என்ற வரிகள் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. இக்காட்சியிலே சறோஜாதேவியும் ஆண் பெண் குழுவினரும் நடனமாடியிருந்தனர்.

ஏற்கனவே இந்தப்பாடல் 1954ல் வெளியான ‘என்மகன்’ என்ற படத்திலும் இடம் பெற்றிருந்தது. அந்தப்பாடலிலே மேற் குறிப்பிட்ட இரண்டு வரிகளும் சேர்க்கப்பட்டிருந்தன.

**பஞ்சவர்ணக்கிளி**

1965ல் வலம்புரி சோமநாதனின் கதை வசனத்தில், விஸ்வநாதன் ராமமூர்த்தியின் இசையில், K.சங்கரின் இயக்கத்தில், முத்துராமன், ஜெய்சங்கர், K.R. விஜயா ஆகியோரின் நடிப்பில் வெளியானது “பஞ்சவர்ணக்கிளி” திரைப்படம். இதிலே K.R. விஜயா வானொலி நிலையத்தில் பாடும் பாடலாக பாரதிதாசனின் பின்வரும் பாடல் இடம் பெற்றிருக்கிறது.

**“ தமிழுக்கும் அமுதென்று பேர்- அந்தத்**
**தமிழ் இன்பத் தமிழ் எங்கள் உயிருக்கு நேர்**
**தமிழுக்கு நிலவென்று பேர் -இன்பத்**
**தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்”**

திரையிலே கதாநாயகியின் இப்பாடலை கேட்டு, கதாநாயகன் மயங்க வேண்டுமென்று பாடப்பட்ட இப்பாடல், சினிமா ரசிகர் அத்தனை பேரையும் கிறங்க வைத்துள்ளது. அவ்வளவு நேர்த்தியாக சுத்தமான தமிழில் P.சுசீலா இப்பாடலைப் பாடியுள்ளார்.

**சந்திரோதயம்.**

1966ல் MGR, ஜெயலலிதா, முதலியோரின் நடிப்பில், M.S. விஸ்வநாதனின் இசையில், K.சங்கரின் இயக்கத்தில் G.N.

வேலுமணியின் சரவணா பிலிம்ஸ் தயாரிப்பாக "சந்திரோதயம்" திரைப்படம் வெளியானது. இதிலே பாரதிதாசனின்

**புதியதோர் உலகம் செய்வோம் -கெட்ட**
**போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்"**

என்ற பாடலை சீர்காழி கோவிந்தராஜன் மிகச் சிறப்பாகப் பாடியுள்ளார். "புதிய உலகு செய்வோம்" என்ற தலைப்பிலுள்ள இவரது கவிதையின் முதல் இரண்டு வரிகள் இப்பாடலின் பல்லவியாகவும், "பத்திரிகை" என்ற தலைப்பிலுள்ள இவரது கவிதையின் இரண்டாம் விருத்தம் சரணங்களாகவும், "தமிழர்களின் எழுது கோல்" என்ற இவரது கவிதையின் கடைசி செய்யுள் இப்பாடலின் கடைசியில் வரும் தொகையறாவாகவும் அமைக்கப்பட்டுள்ளன. இக்காட்சியிலே 'தினக்கவர்ச்சி என்ற பத்திரிகை காரியாலயத்தில், பத்திரிகை அச்சிடும் காட்சிகளோடு MGR நடித்திருந்தார்.

மேலும் இப்பாடலின் முதலிரண்டு வரிகள் ஏற்கனவே 1960 ல் வெளியான "பெற்றமனம் படத்தில் சீர்காழி கோவிந்தராஜனின் குரலில் இதே மெட்டிலேயே ஒலித்திருக்கின்றது. பிற்காலத்தில் "பல்லாண்டு வாழ்க" படத்தில் T.M. சவுந்தரராஜன் வாணி ஜெயராம் குழுவினர் குரல்களிலும் இப்பாடல் ஒலிக்கிறது.

**மணிமகுடம்**

1966 ல் கலைஞர் கருணாநிதியின் கதை வசனத்தில், R.சுதர்சனத்தின் இசையில், S.S. ராஜேந்திரன், விஜயகுமாரி முதலியோரின் நடிப்பில் S.S. ராஜேந்திரனின் நெறியாள்கையில் S.S.R பிக்சர்ஸ் சார்பாக T.V. நாராயணசாமி தயாரித்து வெளியிட்ட "மணிமகுடம்" திரைப்படம் வெளியானது. இது ஒரு அரச கதை. முடியாட்சியை மக்களாட்சியாக்க வேண்டுமென்ற போராட்டத்தைச் சித்தரித்தது.

**"சிரம் அறுத்தல் வேந்தனுக்குப் பொழுதுபோக்கு சிறிய கதை**
**அதனால் நமக்கெல்லாம் உயிரின் வதை**
**.........................**
**வலியோர் சிலர் எளியோர் தமை வதையே புகுவதா**

**"கொலை வாளினை எடடா- மிகு**
**கொடியோர் செயல் அறவே**
**குகை வாழ் ஒரு புலியே –உயர்**
**குணமேவிய மனிதா"**

இப்பாடலிலே பாரதிதாசனின் இரண்டு பாடல்கள் ஒன்றாக்கப்பட்டுள்ளன. தொகையறா இரண்டு வரியும் 'புரட்சிக்கவி'

என்ற அவரது குறுங் காப்பியத்திலிருந்தும், மிகுதி வரிகள் அவரது 'கொலை வாளினை எடடா' என்ற கவிதையிலிருந்தும், எடுக்கப்பட்டு சேர்க்கப்பட்டுள்ளன. S.S. ராஜேந்திரன் குதிரையில் சவாரி செய்து கொண்டு பாடும் எழுச்சிப்பாடலாக இது அமைந்திருக்கறது. T.M சவுந்தரராஜன் மெல்லிசையில் இதனைப் பாடியுள்ளார். இப்பாடல் அண்மையில் வெளியாகிய "சிவப்பதிகாரம்" என்ற திரைப்படத்திலும் இடம் பெற்றிருக்கிறது.

**நம்ம வீட்டுத் தெய்வம்.**

1970 ல் வியட்னாம்வீடு சுந்தரத்தின் வசனத்தில், G.N. வேலுமணியின் இயக்கத்தில், முத்துராமன், K.R. விஜயா, முதலியோரின் நடிப்பில் சரவணா பிலம்ஸ் தயாரிப்பாக "நம்ம வீட்டுத் தெய்வம்" திரைப்படம் வெளியானது. இதிலே குன்னக்குடி வைத்தியநாதனின் இசையில், T.M.சவுந்தரராஜன், குழுவினரோடு மிகவும் கம்பீரமாகப் பாடிய

**"எங்கெங்கு காணிலும் சக்தியடா!**
**ஏழுகடல் அவள் வண்ணமடா! –அங்குத்**
**தங்கும் வெளியினிற் கோடி அண்டம்--அந்தத்**
**தாயின் கைப் பந்தென ஓடுதடா!**

மிகவும் பிரபல்யமான சக்திப் பாடலாகும். நாகேஸ், K.R. விஜயா மற்றும் குழுவினர் கலந்து கொண்ட இப்பாடலுக்கான காட்சியமைப்பும் பிரமாதமானது. இப்பாடலைத்தான் பாரதிதாசன் தனது 17 வது வயதிலே (1908ல்) பாரதியாருக்கு முதன் முதலாகப் பாடிக்காட்டி அவரது பாராட்டைப் பெற்றுக் கொண்டாராம். பின்னர் 1934ம் ஆண்டில் இப்பாடலுக்கு இறுதி நான்கு வரிகளையும் சேர்த்து மணிக் கொடி இதழுக்கு எழுதிக் கொடுக்க 07-01-1934 ல் அது முழுப்பாடலாக மணிக்கொடியில் பிரசுரமானது.

**நான் ஏன் பிறந்தேன்**

1972ல் வியட்நாம் வீடு சுந்தரத்தின் வசனத்தில், சங்கர் கணேஸ் இரட்டையர் இசையமைப்பில், M.கிருஸ்ணனின் இயக்கத்தில், M.G.R, K.R .விஜயா, முதலியோரின் நடிப்பில் 'நான் ஏன் பிறந்தேன்' திரைப்படம் வெளியானது. இப்படத்திலே 'நீங்களே சொல்லுங்கள்' என்ற தலைப்பிலே பாரதிதாசன் எழுதிய பின்வரும் கவிதை இடம்பெற்றுள்ளது.

**"சித்திரச் சோலைகளே –உமை நன்கு**
**திருத்த இப் பாரினிலே—முன்னர்**
**எத்தனை தோழர்கள் ரத்தம் சொரிந்தனரோ**
**உங்கள் வேரினிலே"**

இந்தப்பாடலிலே 10 கண்ணிகள் உண்டு அதிலே 4 கண்ணிகள் மட்டும் (16 வரிகள்) சினிமா இசைக்குள் வந்திருக்கின்றன.

**பல்லாண்டு வாழ்க!**

1975 ல் MGR, லதா, முதலியோரின் நடிப்பில் K.V.மகாதேவனின் இசையில் K.சங்கரின் இயக்கத்தில் மணியன் வித்துவான் லட்சுமணன் ஆகியோர் சார்பில் உதயம் புரொடக்சன் தயாரிப்பில் "பல்லாண்டு வாழ்க!" திரைப்படம் வெளிவந்தது. இதிலே பாரதிதாசன் "புதிய உலகு செய்வோம்" என்ற தலைப்பில் எழுதிய கவிதை முழுமையாக இடம் பெற்றிருக்கின்றது. இப்பாடலை T.M. சவுந்தரராஜனும், வாணிஜெயராமும், குழுவினரும் எளிமையான மெல்லிசை மெட்டில் இனிமையாகப் பாடியுள்ளனர். ஏற்கனவே 1966 ல் வெளியான 'சந்திரோதயம்' என்ற படத்தில் சீரகாழி கோவிந்தராஜன் பாடிய

**புதியதோர் உலகம் செய்வோம் -கெட்ட**
**போரிடும் உலகத்தை வேரொடு சாய்ப்போம்"**

என்ற அதே பல்லவியோடு இந்தப் பாடல் தொடர்கிறது.

**"பொதுவுடமைக் கொள்கை திசையெட்டும் சேர்ப்போம்**
**புனிதமோடதை எங்கள் உயிரென்று காப்போம்"..**

**கண்ணன் ஒரு கைக் குழந்தை**

1978 ல் சிவகுமார், சுமித்திரா, முலியோரின் நடிப்பில் இளையராஜாவின் இசையில் "கண்ணன் ஒரு கைக் குழந்தை" திரைப்படம் வெளியானது. இதிலே பாரதிதாசனின் 'அழகின் சிரிப்பு' கவிதையிலிருந்து பின்வரும் பாடல் சேர்க்கப்பட்டுள்ளது.

**காலையிளம் பரிதியிலே அவளைக் கண்டேன்**
**கடற்பரப்பில் ஒளிப்புனலில் கண்டேன்- அந்தச்**
**சோலையிலே மலர்களிலே தளிர்கள் தம்மில்**
**தொட்டயிடம் எல்லாம் கண்ணில் தட்டுப்பட்டாள் !**

இதனை S.P. பாலசுப்பிரமணியம் அவர்கள், பூபாள ராகத்தில் இனிமையாகப் பாடியுள்ளார்.

**நிஜங்கள்**

1982 ல் K.S. சேது மாதவன் இயக்கத்தில், M.P சீனிவாசனின் இசையில் 'நிஜங்கள்' திரைப்படம் வெளியானது. இப்படத்தில் 'பெஹாக" ராகத்தில் வாணிஜெயராம் அவர்களால் பின்வரும் பாடல் மிக அற்புதமாகப் பாடப்பட்டுள்ளது.

**"அம்மா உன்றன் கைவளையாய் ஆகமாட்டேனா**
**அலுங்கி குலுங்கி நடக்கையிலே பாடமாட்டேனா**
**அம்மா அம்மா அம்மா.."**

இப்பாடல் பாரதிதாசனின் 'ஒருதாயின் உள்ளம் மகிழ்கிறது' என்ற கவிதைத் தொகுப்பில் இருந்த எடுக்கப்பட்டது. தாயைப் பார்த்து மகன் பாடும் பாடலாக பாரதிதாசன் கற்பனை செய்திருந்தார். ஆனால்.

இப்படத்தில் தாயைப்பார்த்து மகள் பாடும் பாடலாக மிக உருக்கமான கட்டத்தில் இது பாடப்படுகிறது.

**சிவப்பதிகாரம்**

விசால் மம்தா நடித்த திரைப்படம். இதிலே பாரதிதாசனின் இரண்டு பாடல்கள் ஒன்றாக்கப்பட்டுள்ளன.

**"வலியோர் சிலர் எளியோர் தமை வதையே புரிகுவதா**
**"கொலை வாளினை எடடா- மிகு**
**கொடியோர் செயல் அறவே**
**குகை வாழ் ஒரு புலியே —உயர்**
**குணமேவிய மனிதா"**

இதிலே தொகையறா இரண்டு வரிகளும் 'புரட்சிக்கவி' என்ற அவரது குறுங் காப்பியத்திலிருந்து எடுக்கப்பட்டன. மிகுதி வரிகள் அவரது 'கொலை வாளினை எடடா' என்ற கவிதையிலிருந்து எடுத்து சேர்க்கப்பட்டுள்ளன. வித்தயாசாகரால் இசையமைக்கப்பட்டது. ஏற்கனவே இப்பாடல் 'மணிமகுடம்' என்ற திரைப்படத்திலும் வந்துள்ளது.

**பெண்சிங்கம்**

கலைஞர் மு.கருணாநிதி எழுதிய, 'சுருளி மலை' என்ற நாவல் "பெண்சிங்கம்" என்ற பெயரில் திரைப்படமாக்கப்பட்டது. திரைக் கதை வசனத்தையும் கலைஞரே எழுத ராதாரவி, விவேக், ரம்பா, மீராஜஸ்மின் முதலியோர் நடித்துள்ளனர். ஜெயமுருகன் படத்தைத் தயாரித்துள்ளார். இத்திரைப்படத்திலும் பாரதிதாசனின் பாடல் ஒன்று இடம்பெறுவதாக அறியக்கிடக்கிறது.

**உடும்பன்**

இத்திரைப்படத்தில் S.பாலனின் இசையில் பாரதிதாசனின் பாடல் ஒன்று இடம் பெறுவதாக அறியக்கிடக்கிறது

**புரட்சிக்காரன்**

2000ம் ஆண்டில் வேலு பிரபாகரன் இயக்கத்தில், வித்தியாசாகர் இசையில், ஜெயதேவி பிலிம்ஸ் தயாரிப்பாக புரட்சிக்காரன் திரைப்படம் வெளியானது. இப்படத்திலே பாரதிதாசனின் கவிதைத் தொகுதியில் இருந்து எடுக்கப்பட்ட, பின்வரும் பாடல் வித்தியாசாகர் இசையில் பாடகி நித்தியஸ்ரீ மகாதேவனின் குரலில் ஒலிக்கிறது.

**"தூங்கும் புலியைப் பறை கொண்டெழுப்பினோம்**
**தூய தமிழரைத் தமிழ் கொண்டெழுப்பினோம்**
**தீங்குறு பகைவரை இவண் இன்று நீக்குவோம்**
**செந்தமிழ் உணர்ச்சி வேல் கொண்டு தாக்குவோம்"**

பாவேந்தரின் பாடல்களுக்கு பின்வருவோர் இசையமைத்துள்ளனர். T.K.முத்துச்சாமி, R.N. சின்னையா,

R.சுதர்சனம், G.ராமனாதன், S.தட்சிணாமூர்த்தி, விஸ்வநாதன் ராமமுர்த்தி, கோவிந்தராஜலு நாயுடு, T.G.லிங்கப்பா, T.R. பாப்பா, C.S. ஜெயராமன், T.R.ராம்நாத், K.V.மகாதேவன், S.ராஜேஸ்வரராவ், குன்னக்குடி வைத்தியநாதன், சங்கர் கணேஸ், M.P. சீனிவாசன், இளையராஜா, வித்தியாசாகர், S.பாலன்.

பாவேந்தரின் பாடல்களை சினிமாவுக்காக பின்வருவோர் இனிய இசையோடு பக்குவமாகப் பாடியுள்ளனர்.M.S. ராஜேஸ்வரி, வர்மா, A.M. ராஜா, P.லீலா, P.பானுமதி, C.S. ஜெயராமன் P.சுசீலா, T.M. சவுந்தரராஜன், K.ஜமுனாராணி, M.L.வசந்தகுமாரி, ராதா ஜெயலட்சுமி, சூலமங்கலம் ராஜலட்சுமி, J.P. சந்திரபாபு, டாக்டர் சீர்காழி மோவிந்தராஜன, S.P. பாலசுப்பிரமணியம்', வாணிஜெயராம், நித்தியஶ்ரீ.

**பாரதிதாசனும் சினிமாவும்**

பாவேந்தர் தமது 48 வது வயதில் சினிமாத்துறைக்குள் காலடி எடுத்து வைத்தார். பிரபலமான கவிஞராக, அரசியல் வாதியாக, சீர்திருத்த வாதியாக, சமூக சிந்தனை உள்ளவாரக, பொதுவுடமை வாதியாக, சுயமரியாதையைப் பேணுபவராக, சுதந்திரப் போராட்ட வீரராக, தமிழைத் தனது உயிராகக், கொண்டவராக, தமிழரின் கலை, கலாச்சார பண்பாட்டு விழுமியங்களைப் பாதுகாக்கும் காவலனாக, தீண்டாமை, சாதிப் பாகுபாடு, பெண்ணடிமை என்பவற்றை எதிர்ப்போனாக- நல்லாசிரியனாக இருந்து கொண்டு: தமிழ் சினிமாத்துறையில் அவரால் நிலைத்து நிற்க முடியவில்லை.

தென்னகத் தழிழ் சினிமாத்துறை கலை என்ற பெயரால், தமிழரின் பாரம்பரியமாக வந்த கலை கலாசாரம், பண்பாடு, நாகரிகம், விழுமியங்கள் என்பவற்றை உதாசீனப்படுத்தியது. படுமோசமான தமிழ் மொழிக்கொலை திரைப்படங்களில் நடந்தன. உண்மையான தமிழரின் கலாசாரங்களைப் பிரதிபலித்த படங்கள் வர்த்தகரீதியில் படு தோல்வியைச் சந்தித்தன. சினிமா ரசிகர்களின் கலை உணர்வு சார்ந்த ரசனையை, திரைப்பட நெறியாளர்களும் தயாரிப்பாளர்களும், தவறான வழிக்குத் திருப்பிவிட்டனர். இவற்றையெல்லாம் சுயமரியாதைச் சிந்தனையும், வித்துவச்செருக்கும், சமூகச்சீர்திருத்தம் என்ற குறிக்கோளும், சுதந்திரதாகமும் கொண்டவரும், தமிழ் மொழியில் அபாரமான பற்றுறுதியும் கொண்டவருமான, பாரதிதாசனால் சகித்துக் கொள்ள முடியவில்லை.

தன்னுடைய கதை, வசனம், பாடல் வரிகளில் மற்றவர்கள் திருத்தங்கள் செய்வதையும், தன்னால் சொல்லப்பட்ட கருத்துக்களை இருட்டடிப்பச் செய்வதையும் மிகக் கண்டிப்பாக ஆட்சேபனை செய்தார். 1952 ல் வளையாபதி படத்துக்கு பாடல்கள் வசனங்கள் எழுதியபோது

இந்த முரண்பாடு வலுவடைந்திருந்தது. சினிமாத்துறையிலிருந்து கிடைக்கவிருந்த பொருந்தொகையான பண வருமானங்களையும் துச்சமென வெறுத்து சினிமாத்துறையை மிகக் கடுமையாக விமரிசனம் செய்துவிட்டு அதிலிருந்து வெளியேறினார். வர்த்தக நோக்கிலான கேளிக்கைகள், வீணான பொழுதுபோக்குக்கள், பொருத்தமற்றபால்நிலை வேறுபாடுகள், பழமைவாத மூடக் கொள்கைகள், வக்கிரஉணர்வுள்ள காட்சிகள், ஆண் ஆதிக்க முரண்பாடுகள், பொருத்தமில்லாத சமூக கற்பிதங்கள், என்பவற்றையே பன்னாடை போல் சினிமாத்துறை தூக்கி வைத்திருந்தது – வைத்திருக்கிறது.

பாமரமக்கள்சமூகச்சீர்திருத்தத்தை கௌரவமானகலாசாரத்தை உள்வாங்கிக் கொள்ள சினிமாத்துறை இடங்கொடுக்கவில்லை. மேலும் தனிநபர் ஆராதனை, நாட்டாமை, சர்வாதிகாரப் போக்கு, கலைஞர்களை அவமானப்படுத்தல், கழுத்தறுப்புக்கள், என்பன சினிமாத்துறையுள் அன்றும் இன்றும் உள்ளன. இனிமேலும் இருக்கும். வடஇந்திய நாகரிகத்தையும், மேற்கு நாட்டு கலாசாரத்தையும் திரைப்படங்களில் வலிந்து புகுத்தி, தமிழ் சமுதாயத்தை கலாசார வறுமைக்குள் தள்ளுவதையே தமிழ் சினிமாக்காரர் செய்து காட்டினர்- இன்றும் செய்து கொண்டிருக்கின்றனர்.

இதையெல்லாம் தனிமனிதனாக எதிர்க்கமுடியாமல்தான் பாரதிதாசன் முற்றுமுழுதாகச் சினிமாவிலிருந்து விலகினார். சினிமாவில் தனக்கோர் தனி இடத்தைத் தக்க வைத்துக் கொள்ளவே பாவேந்தர் விரும்பியிருந்தாரெனலாம். தனது 'பாண்டியன்பரிசு' கவிதை நாடகத்தை திரைப்படமாக்கவே சென்னையில் குடியேறினார். அது நிறைவேறவில்லை. பின்னர் பாரதியாரின் வரலாற்றைத் திரைப்படமாக்க முயன்றார். அதற்கான நிதி திரட்டுவது சம்பந்தமான கூட்டத்தில் கலந்துகொள்வதே அவரது கடைசி முயற்சியாகவுமிருந்தது. தமிழ் சினிமாத்துறையினர் பாரதிதாசன் என்ற முத்தமிழ் அறிஞனை, சிந்தனாவாதியை, பெரும் புலவனை, சிர்திருத்தவாதியை சரியாகப் பயன்படுத்திக் கொள்ளத் தவறிவிட்டனர் என்றே கூறவேண்டும்.

சுரதா, (சுப்பு ரத்தின தாசன்) வாணிதாசன், சாலை இளந்திரையன், குருவிக்கரம்பை சண்முகம், பொன்னடியான் ஆகியோர் பாவேந்தரின் சீடர்களாகி மரபுக்கவிதைகள் எழுதினார்கள். அதோடு சினிமாவுக்கும் பாடல்கள் எழுதி பிரபல்யமானார்கள்.

பாவேந்தர இவ்வுலகில் 72 ஆண்டுகள் 11 மாதம் 22 நாட்கள் நிறைவான வாழ்க்கை வாழ்ந்துள்ளார். நிறைவான குடும்பம் இவருக்கு அமைந்திருந்தது. இவரது காலத்திலேயே இந்தியாவுக்குச் சுதந்திரமும் கிடைத்தது. இந்திய சுதந்திரத்தையே உயிர் மூச்சாகக் கொண்டிருந்த

மகாகவி சுப்பிரமணிய பாரதியாருக்குக் கிடைக்காத அரிய வாய்ப்பு இவருக்கு கிடைத்ததெனலாம். இவர் பிறந்தது, வளர்ந்தது, வாழ்ந்தது, உயர்ந்தது எல்லாமே புதுச்சேரியில்தான். 70 ஆண்டுகள் கோவையில் வாழ்ந்த பாரதிதாசன் கடைசி 2 ஆண்டுகளே சென்னையில் வாழ்ந்தார். இறப்பதற்காகத்தான் சென்னைக்கு வந்தாரோ! அடிமைப்பட்ட இந்தியாவில் 56 ஆண்டுகள் 3 மாதங்கள் 16 நாட்கள் வாழ்ந்தார். சுதந்திர இந்தியாவில் 16 ஆண்டுகள் 8 மாதங்கள் 6 நாட்கள் வாழ்ந்தார். பல்பரிமாணங்கள் பன்முகச்சிந்தனைகள் கொண்ட மனிதராக தமிழுக்குத் தன்னை அர்ப்பணித்து, ஒரு சீர்திருத்தம் பெற்ற, சுயசிந்தனையுள்ள, பகுத்தறிவு பூர்வமான, தமிழ் இனத்தின் சிறப்பான எதிர்காலத்துக்காக தன்னை முற்றுமுழுதாக ஈடுபடுத்தி, வாழ்ந்தவர் பாவேந்தர் பாரதிதாசன். பாரதியாரைப் போலவே பாட்டாலேயே இவ்வையகத்தைப் பாலித்திட்டவர் பாரதிதாசன். பாவேந்தர் புகழ் பாரெல்லாம மென்மேலும் பரவட்டும்.

**நா.தியாகராசா** B.A.
இல.108, திருநாவற்குளம், வவுனியா.

**வெங்கடேஸ்வரா**
**பல்பொருள் வாணிப நிலையம்**

**இல.[illegible], பஜார்வீதி,**
**வவுனியா.**
**தொ.பே.இல : 024 2222248**

# வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் 17 ஆண்டு நிறைவு விழா.

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் 17 ஆண்டு நிறைவு விழா (நிகழ்வு-178) வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபத்தில் 05-03-2015 அன்று கலாநிதி தமிழ்மணி அகளங்கன் அவர்களின் தலைமையில் நடை பெற்றது.

இந் நிகழ்வின் பிரதம விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக வவுனியா வளாக முதல்வர் திரு.க.க.அருள்வேல் அவர்களும்,,விஷேட விருந்தினராக வடக்கு மாகாணசபை உறுப்பினரும்,வவுனியா நகரசபையின் முன்னாள் தலைவருமாகிய திரு.ஜி.ரி.லிங்கநாதன் அவர்களும், சிறப்பு விருந்தினர்களாக வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.சரஸ்வதி மோகநாதன், வவுனியா பிரதேச செயலாளர் திரு.கா.உ தயராஜா, வவுனியா நகரசபைச் செயலாளர் திரு.க.சத்தியசீலன், வவுனியா மாவட்ட கலாசார உத்தியோகத்தர் திரு.இ.நித்தியானந்தன், ஆகியோரும்,கௌரவ விருந்தினர்களாக வ.சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத் தலைவர் மக்கள் சேவை மாமணி நா.சேனாதிராசா, வ.பல.நோ.கூ.சங்கத்தலைவர் சைவ சிரோமணி சி.சுப்பிரமணியம், வ.இந்து மாமன்றச் செயலாளர் சிவநெறிப் புரவலர் சீ.ஏ.இராமஸ்வாமி, யாழ் இலக்கிய வட்டச் செயலாளர் நயினை. கி.கிருபானந்தா, மன்னார் மாவட்ட சைவ கலை இலக்கிய மன்றத் தலைவர். பிரம்மஸ்ரீ.மஹா.தர்மகுமார சர்மா ஆகியோர் கலந்துகொண்டனர்.

**சஞ்சிகை, நூல் வெளியீடுகள்.**

வட்டத்தின் மாருதம் இதழ் 15,ஐ விஷேட விருந்தினராகக் கலந்துகொண்ட வடக்கு மாகாண சபை உறுப்பினர் திரு.ஜி.ரி. லிங்கநாதன் அவர்கள் வெளியிட்டுவைக்க, முதற் பிரதியை அருட்கலைவாருதி, கலாபூஷணம், ஸ்தபதி சு.சண்முக வடிவேல் அவர்கள் பெற்றுக்கொண்டார். அறிமுக உரையை வ.புதுக்குளம் ம.வித்தியாலய ஆசிரியர் திரு.ஆ.லோகேஸ்வரன் அவர்கள் ஆற்றினார். வ.தே.கல்.கல்லூரி. விரிவுரையாளர் திருமதி.நேலோமி அன்ரனி குருஸ் அவர்களின் கூடிக்குதிப்போம் (சிறுவர் நாடகம்.) நூலை வவுனியா நகரசபையின் செயலாளர்.திரு.க.சத்திய சீலன் அவர்கள் வெளியிட்டு

வைக்க சமூகச் சுடர் வீ.மாணிக்கம் முதற் பிரதியைப் பெற்றுக்கொண்டார் வ.தே.கல்.கல்லூரி விரிவுரையாளர் திரு.பொ.சத்தியநாதன் அவர்கள் அறிமுக உரையை ஆற்றினார்.

சிறப்பு மேலதிக நிகழ்வாக, ஞானம் சஞ்சிகையின் 175 ஆவது இதழாக வெளிவந்திருக்கும் ஈழத்துப் புலம்பெயர் இலக்கியச் சிறப்பித்தழை வவுனியா பிரதேச செயலாளர் திரு.கா.உதயராஜா அவர்கள் வெளியிட்டுவைக்க, சிறப்புப் பிரதியை எழுத்தாளர் திருமதி. மைதிலி தயாபரன் அவர்கள் பெற்றுக் கொண்டார். அறிமுக உரையை ஞானம் சஞ்சிகையின் நிர்வாக ஆசிரியர் திரு.ஞா.பாலச்சந்திரன் அவர்கள் ஆற்றினார். இந் நிகழ்வில் ஞானம் சஞ்சிகையின் பிரதம ஆசிரியர் டாக்டர் தி.ஞானசேகரன் அவர்களும் அவரது துணைவியாரும் கலந்து சிறப்பித்தனர்.

## உரை அரங்கு

உரை அரங்கு நிகழ்வில் கல்வியும் சமூகமும் என்ற பொருளில் வ.பாவற்குளம் கணேஸ்வரா வித்தியாலய ஆசிரியர் வித்தியாரத்னா சி.வரதராஜன் அவர்களும் ,சமயமும் சமூகமும் என்ற பொருளில் மாவட்ட சமூகசேவை உத்தியோகத்தர் இன்தமிழ் இனியன்.எஸ்.எஸ். வாசன் அவர்களும், கலையும் சமூகமும் என்ற பொருளில் வ.இ.தி.த.ம.வித்தியாலய ஆசிரியர் இலக்கியச் சுடர் ஐ.கதிர்காமசேகரன் அவர்களும் உரையாற்றினார்.

## கௌரவிப்பு நிகழ்வு.

சான்றோர் விருது வழங்கும் வைபவத்தில், பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்படவிருந்த சாதனையாளர்கள் மங்கல வாத்திய சகிதம் அழைத்துவரப்பட்டனர். வ.இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலய ஓய்வுநிலை பிரதி அதிபர் செல்வி.மேரி அன்ரோ னியா ஸ்ரனிஸ்லாஸ் அவர்களுக்கு, கலை இலக்கியச் செல்வர் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.வ.த.ம.ம.வித்தியாலய ஓய்வுநிலை ஆசிரியர் பண்டிதை செல்வி யோகலட்சுமி சோமசுந்தரம் அவர்களுக்கு இயற்றமிழ்ச் செல்வர் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்பட்டது.வவுனியா தெற்கு வலய நடன பாட ஆசிரிய ஆலோசகர் திருமதி.சூரிய யாழினி வீரசிங்கம் அவர்களுக்கு ஆடற் கலைச் செல்வர் பட்டம் வழங்கிக் கௌரவிக்கப்

பட்டது.கௌரவிப்பு உரையை யாழ்.பல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளரும், மொழிபெயர்ப்புக் கற்கைகள் இணைப்பாளரும், வட்டத்தின் செயலாளருமாகிய கலாநிதி கந்தையா ஸ்ரீ கணேசன் அவர்கள் நிகழ்த்தினார்.வவுனியா மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் திருமதி.சரஸ்வதி மோகநாதன் அவர்கள் பொன்னாடை போர்த்தி, மாலை சூட்டிக் கௌரவித்தார். யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக முதல்வரும் பிரதம விருந்தினருமாகிய திரு.க.க.அருள் வேல் அவர்கள் பட்டம் வழங்கிக் கௌரவித்தார்..


## கலை நிகழ்ச்சிகள்

நிருத்திய வாணி திருமதி சூரிய யாழினி வீரசிங்கம் அவர்களின் நிருத்திய நிகேதன நுண் கலை க்கல்லூரி மாணவிகளின் வரவேற்பு நடனம்,வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரி பிரதி அதிபர் திருமதி. சத்தியபாமதி தனபால் அவர்களின் ஆக்கம் நெறியாள்கையில் அக் கல்லூரி மாணவிகளின் தீயவை செய்து தீமையைத் தேடாதே.வில்லுப் பாட்டு.வவுனியா திருமறைக் கலாமன்றத்தின் பச்சை மேகம் நாடகம், மன்னார் முருங்கன் முத்தமிழ்க் கலாமன்றத்தின் கூத்துவழி நடனம், மற்றும் கவிஞர்கள் மாணிக்கம் ஜெகன், த.பிரதாபன், து.நந்தீஸ்வரி. நா.தியாகராசா, மைதிலி தயாபரன், த.சந்திரமோகன்.சி.நாகராஜா. ஆகியோரின் கவி அளிக்கை ஆகிய நிகழ்வுகள் இடம்பெற்றன.

தமிழ் வணக்கப் பாடலை செல்வன்.ஜெயசிங்கம் ஷதுசன், செல்வன் சிவாகரன் விதுர்சன் ஆகியோர் பாடினர். வரவேற்புரை வ.தே. கல்.கல்லூரி விரிவுரையாளரும் வட்டத்தின் துணைத் தலைவருமாகிய வித்தியா ரத்னா ந.பார்த்திபன் அவர்கள். நன்றியுரை பாவற்குளம் கலைமகள் வித்தியாலய அதிபர் நாடக சிரோமணி கந்தையா ஸ்ரீ கந்தவேள் அவர்கள்.

**நந்தா. பத்திராதியர்**
வவுனியா க.இ.ந..வட்டம்.

# வவுனியா மாவட்ட மாணவர் மத்தியில் ஆங்கிலப் புலமையை ஏற்படுத்திய சிவபாலன் ஆசிரியர்



**கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன்**
சிரேஷ்ட ஆங்கில மொழி கற்பித்தல் விரிவுரையாளரும்,
மொழிபெயர்ப்புக் கற்கைகள் இணைப்பாளரும்.
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்.

பிரித்தானிய ஆட்சியின் விளைவாக இலங்கையருக்கு மட்டுமல்லாது காலனித்துவ நாடுகளாய் இருந்து சுதந்திரம் பெற்ற ஆசிய ஆபிரிக்க நாட்டவருக்கு உலகக் கண்ணாடியாக திகழ்வது ஆங்கில மொழியாகும். சர்வதேச தொடர்பாடலுக்கும் உலகளாவிய கற்கைநெறிகளுக்கும் ஆங்கில அறிவு இன்றியமையாது.

1947இல் ஆங்கில ஆட்சி அற்றுப் போன பின் சுதேச மொழிகளின் ஆட்சிபீடம் ஏறிய 1958களில் அரசியல் நிலைமைகளால் ஆங்கில மொழி கற்பித்தல் தரம் குன்றிப் போனது. 1960களில் ஆங்கில மொழி வழிக் கல்வி தாய் மொழி வழிக் கல்வியாக மாற மாணவர் மத்தியில் இரண்டாம் மொழியாக ஆங்கில பாடம் படிப்பிக்கப்பட்டு வந்தது. ஆனால் ஆங்கிலம் படித்தவர்கள் தொகை போராலும், புலப்பெயர்வாலும், காலம் ஆகிய நிலைமைகளாலும் குறைய தரமாக ஆங்கிலம் கற்பிப்போர் தொகையும் குறைந்து கொண்டு வந்தது.

இதனைக் கருத்தில் கொண்டு 2002 இல் மேதகு திருமதி சந்திரிகா பண்டாரநாயக்க அவர்கள் ஆங்கில மொழிவழிக்கல்வியை மீள அறிமுகப்படுத்தினார். அதனை சரியான முறையில் அமுல்படுத்தி வவுனியா இறம்பைக்குளம் மகளிர் வித்தியாலயத்தில் ஒரு புதிய பரம்பரையை உருவாக்க காரணமானவர் மறைந்த ஆசிரியர் சுப்பிரமணியம் சிவபாலன் அவர்கள்.

காரைநகரைப் பூர்வீகமாகக் கொண்ட சுப்பிரமணியம் சிவபாக்கியம் தம்பதியினருக்கு மூன்றாவது மகனாக 1948 இல் பிறந்த சிவபாலன் அவர்கள் சிறுவனாக வவுனியா மாமடு கிராமத்தில் தமது கல்வி வாழ்க்கையை ஆரம்பித்தார். தமிழோடு சிங்களமும் அவர் வசம் ஆகிடவே யாழ்ப்பாணம் வைத்தீஸ்வரா மற்றும் யாழ் இந்துக் கல்லூரியில் ஆங்கிலக் கல்வியையும் பெற்று பேராதனைப் பல்கலைக்கழக விஞ்ஞானப்பட்டதாரி ஆனார். தொடர்ந்து கல்வியிலான பட்டமேற்படிப்பு மற்றும் பேராதனை களனிய, திறந்த பல்கலைக்கழக ஆங்கில டிப்ளோமா,

எம்.ஏ பயிற்சி நெறிகளிலும் தமது புலமையை வளர்த்துக்கொண்டார்.

அதன் காரணமாக ஒரு தரமான ஆங்கிலம் தெரிந்த ஆசிரியராக மிளிர்ந்தார். மன்னார் வங்காலை மகாவித்தியாலயம், முல்லைத்தீவு வித்தியானந்தாக்கல்லூரி, வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலயம் (அதிபராகவும் பணியாற்றினார்) ஆகியவற்றில் தூய கணிதம், பிரயோக கணிதம், பௌதீகம், இரசாயனவியல் என்பவற்றை உயர்தர வகுப்பு மாணவர்க்கு கற்பித்தார். ஆங்கில மொழி வகுப்புக்கள் ஆரம்பித்த போது ஒரு மிகப் பொருத்தமான கல்விமானாக திரு சிவபாலன் தனது பணியைத் தொடர்ந்தார்.

2002முதல் 2007வரை ஐந்து வருடங்களாக வவுனியா இறம்பைக்குளம் மகளிர் மகா வித்தியாலயத்தில் ஆங்கில மொழிமூல இணைப்பாளர் ஆகப் பணியாற்றி ஒரு சிறந்த ஆங்கில தொடர்பாடலை மேற்கொள்ளும் திறன் கொண்ட மாணவர் பரம்பரையை உருவாக்கிய பெருமையைக் கொண்டவர்.

தரமான ஆசிரியர்களைத் தேடிக் கண்டுபிடித்து இளந்தலைமுறை ஆசிரிய குழாத்துக்கு வழிகாட்டி ஒரு புதிய தலைமுறையை உருவாக்கப் பாடுபட்டார். கல்வி அமைச்சுடனான நேரடி தொடர்பு, நூல்களைத் தானே கொழும்பு சென்று தமது வண்டியில் ஏற்றி பாடசாலை மாணவர்க்கு பயன்படுத்தும் உடனடிச் செயற்பாடு, ஆங்கிலப்பேச்சுத் தொடர், நாடகப் பட்டறை, சஞ்சிகை வெளியீடு என இன்னோரன்ன செயற்பாடுகள் என திரு சிவபாலனின் பணி மாணவர்களிடம் ஒரு பெரும் உற்சாகத்தை ஏற்படுத்தியிருந்தது.

பேச்சுத்தொடர் மூலம் சமூகத்தில் ஆங்கிலம் தெரிந்த பெரியார்களுடன் மாணவர் உரையாடும் சந்தர்ப்பம் வாய்த்தது, கிரகிக்கும் திறன் வளர்ந்தது. நாடகப்பட்டறைகளை நடாத்த பல்கலைக்கழக விரிவுரையாளர் கலாநிதி க.ஸ்ரீகணேசனின் ஒத்துழைப்பை நாடிபெற்று மாணவர் பேச்சுத்திறனை வளர்த்தெடுத்தார். மேலும் ஆளுமைப் பண்புகளை வளர்க்க டுநயசநெச'ள ஹுைநளவ எனும் மாணவர் சஞ்சிகை இதழை உருவாக்கி ஆறு இதழ்களாக வெளியிட்டு சாதனை படைத்தார். மாணவர் எழுத்துத் திறனை வளர்த்தெடுத்தார். நூல்களை உருவாக்கி வாசிப்புத்திறனை அதிகரித்தார்.

இவ்வாறு வளர்ந்த தலைமுறை இன்று பல்கலைக்கழகங்களிலும், வங்கிகள், நிதி நிறுவனங்கள், அரச அலுவலகங்கள் என எல்லா மட்டங்களிலும் முன்னிலை வகிக்கிறது.

மாவட்ட மட்டத்திலும் ஆங்கில அறிவை மேம்படுத்த பல்வேறு கருத்தரங்குகளை வவுனியா ஆங்கில சங்கத்தினூடாக மேற்கொண்டார். அயல் வலயமான வவுனியா வடக்கு பிரதேசத்திலும் ஆங்கில மொழிக் கருத்தரங்குகள் பட்டறைகளை ஏற்படுத்தினார். 'சாந்தி நிகேதன்' கல்வி நிலையத்தினூடாக ஆங்கில தொடர்பாடலை மேற்கொள்ளும் திறன் கொண்ட மாணவர் பரம்பரையை உருவாக்கிய பெருமையைக் கொண்டவர்.

யாழ்ப்பாண பல்கலைக்கழக வவுனியா வளாகத்தில் ஆங்கில டிப்ளோமா கற்கை நெறியை வளர்க்க தொடர்ந்து பாடுபட்ட அன்னார் இறுதிக்காலங்களில் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மொழிபெயர்ப்புத் துறை மாணவர்களுக்கும் வருகைதரு விரிவுரையாளராக கடமையாற்றி வந்த வேளையில் 2015 ஏப்ரல் 10ம் திகதி தமது கல்வியுலகை விட்டு புகழுடம்பு எய்தினார். இந்த ஒரு வருட நினைவு நாளில் அன்னாரது சேவைகளை மீண்டும் ஒருமுறை மனங்கொள்வோமாக.



வட்டத்தின் 17 ஆண்டு நிறைவு விழாவில் திருமதி.நெலோமி அன்ரனி குரூஸ் அவர்களின் கூடிக்குதிப்போம் (சிறுவர் நாடகம்) நூலினை வெளியிட்டு வைப்பவர் வவுனியா நகர சபைச் செயலாளர் திரு.க.சத்தியசீலன் அவர்கள். முதற்பிரதி பெறுபவர் சமூகச் சுடர் வீ.மாணிக்கம் அவர்கள்


# JEYA FARM SELECTION

"உரிமையுடன் உங்களுக்காக"

*Home Delivery Service*



**Mr.Jegan**
077 5006796
076 5423243
077 2105900

**சகல விதமான கோழி தெரிவுகளுக்கும்**

ஆஞ்சநேயர் பண்ணை,
வேப்பங்குளம்,
ஓமந்தை

இல.05,
கோழி சந்தை,
வவுனியா.

## மானுடமா! வெல்வதா! எப்படி அது?

மானுடனாய் பிறப்பெடுத்து
மாயவனும் அன்று
வாலியை வதைப்பதற்கு
வஞ்சனை புரிந்தானே
ஏழை ஏகலைவனை
ஏமாற்றத் துரோணரும்
தட்சணையாய் உன் விரலை
தந்துவிடு என்றாரே
எப்படி மானுடம் வெல்வது?

மானுடம் வென்றிட
மாசில்லாது உழைத்த
மகாத்மா காந்தியையே
கோட்சே என்ற
கொடியவன் குறிபார்த்துச்
சுட்டபோது
மானுடம் பார்த்து
மலைத்து நின்றதே
எப்படி மானுடம் வெல்வது?

இனவிடுதலை வேட்கை கொண்டு
ஈரினங்கள் மோதிக்கொள்ள
பலகுழுக்கள் தனித்து நின்று
பகையை வெல்லப் போராடி மடிய
இணைந்திருந்தால் பலம் என்று
எத்தனையோபேர் எடுத்துரைக்க
எங்களுக்கு யார் தலைவன்
என்றவர்கள் கேள்வி கேட்க

நானே தலைவன் என்று
பலர் கரம் தூக்க
முட்டி மோதிக் கொண்டார்கள்
முழுத்தலைவன் யாரென்று...
முடிவு
விடிவற்றுப் போனது விடுதலைப்போர்
எப்படி மானுடம் வெல்வது?

கத்த முடியாது
கழுத்தை நசித்து விட்டு
செத்துவிட்ட வித்தியாவின்
வெத்துடலை ருசிபார்த்த
வித்தகக் காமப் பேய்களை
பெத்து விட்ட மானுடம் - இனி
எப்படி மானுடம் வெல்வது?

காதலிக்கு பரிசளிக்க அம்மா
காசுதரவில்லையென்று
பேதலித்துப் போன மகன்
பெற்ற தாயை வெட்டி
அன்னையின் உடலை
ஆற்றில் போட்டு விட்டு
அப்பாவி போல் அழுது புரண்டானே
எப்படி மானுடம் வெல்வது?

கட்டுடலை பிறர் காண
கதவுகளை அதிகம் வைத்து
திட்டமிட்டு உடையணியும் சிட்டுகளே
கொஞ்சம் கேளீர்
ஆடையைக் குறைத்துவிடல்
அழகென்று நம்ப வேண்டாம்
காமத்தீயிற்கு கற்பூரம் ஆவீர்கள்
உடல் அழகை வெளியே காட்டி
பிறர் மனதில் வெறியை ஊட்டி
பாவத்துக்கு வழியைக் காட்டி
பலியாகிப் போனால் பெண்கள்
எப்படி மானுடம் வெல்வது?

மானுடம் வென்றிட
கள்ளக் கல்வியை
இல்லாதொழித்திட வேண்டும்
மானுடம் வென்றிட
பிள்ளைப் படுகொலைகள்
பாலியல் கொடுமைகள்
இல்லாதொழிந்திட வேண்டும்

போதைக்கு அடிமையாகி
பாதையை மாற்றிவிட்டு
பேதை மானுடன்
பெரும் தவறைப் புரிகின்றான்
மானுடம் வென்றிட
போதை தவறென்று
புரிந்து கொள்ளல் வேண்டும்
மானுடம் வென்றிட வேண்டும் -
அதை
நானிலம் கண்டிட வேண்டும்.

**சி.ஆறுமுகம் (சிவா)**
இல. 32
எல்லப்பர் மருதங்குளம்,
வவுனியா.

# தீக்கோழிகள்

பிரதி ஆக்கம் : **கந்தையா ஸ்ரீகணேசன்**

(James Thurber இன் நாடகத்தினை அடிப்படையாகக் கொண்டு)

மேடையில் தலைவர் மக்கள் பிரதிநிதிகளுடன் ஊர்வலம் வருகின்றார். பான்ட் வாத்தியக் கோஷ்டி முன்னால் செல்கிறது. தலைவரைச் சுற்றி மெய்ப்பாதுகாவலர் நிற்கின்றனர், பத்திரிகையாளர், படப்பிடிப்பாளர் உலவுகின்றனர்.

மக்கள் : வாழ்க தீக்கோழிகளின் தேசம்.

எல்லோரும் : வாழ்க தீக்கோழிகளின் தேசம்.

மக்கள் : தாங்கள் தாம் பெரியவர்கள்.

எல்லோரும் : தாங்கள் தாம் பெரியவர்கள்.

மக்கள் : தாங்கள் தாம் பலமிக்கவர்கள்.

எல்லோரும் : தாங்கள் தாம் பலமிக்கவர்கள்.

குரல் : வாழ்க தீக்கோழிகளின் தேசம்.

(ஊர்வலத்தினர் மேடைஅமைத்து கூட்டம் போடுவர். எல்லோரும் கை தட்டுவர். மக்கள் கூட்டம் மேடையின் மறுபுறத்தில் நிற்கிறது.)

தலைவர் : பெருமக்களே! தாய்க்குலமே, சகோதர சகோதரிகளே! இன்று நாம் பெருமை மிக்கதும் புராதனமானதுமான எமது தீக்கோழி தேசத்தின் தேசிய தினத்தைக் கொண்டாடுகின்றோம். பெருமக்களாகிய உங்கள் அனைவரையும் வருக வருகவென வரவேற்பதில் பெருமகிழ்வு அடைகின்றேன். (மக்கள் கரகோஷம் செய்வர், மாலையிடுவர், திலகமிடுவர்.)

தலைவர் : சீமாட்டிகளே! கனவான்களே! எங்கள் புராதன வரலாற்றை உங்களுக்கு ஞாபகமூட்ட விரும்புகின்றேன். மனிதன் எல்லோரும் பூமியிலே தோன்றுவதற்கு முன்னே தீக்கோழி இனம் இப்பூமியின்முகத்திலேவாழத்தொடங்கிவிட்டார்கள் என்று சரித்திரப் புத்தகங்களிலே எழுதப்பட்டுள்ளது. உரோமர்களுக்கே எங்களைத் தெரிந்திருந்தது.

இல்லை இல்லை எங்களுக்கே உரோமர்களைத் தெரிந்திருந்திருந்தது.

மக்களின் குரல் : கேளுங்கள் கேளுங்கள், அமைதி அமைதி!

தலைவர் : ரோமர்கள் எங்களை சுவிஸ் சுருதியோ என அழைத்தனர். நாம் அவர்களை ரோமர்கள் என்றோம். கிரேக்கர்கள் எங்களை சுருதியோன் என்றார்கள். அதன் கருத்து என்ன தெரியுமா? "உண்மையானவர்கள்" என்பதாகும். அப்படி கருத்துப்படாவிட்டால் அப்படித்தான் கருத்துப்பட வேண்டும். ஏனென்றால் நாங்கள் தான் மிகப்பெரும் பறவைகள் ஆகவே நாம் தான் சிறந்தவர்.

மாதவன் : மன்னிக்க வேண்டும் தலைவரே, நான் ஒரு கேள்வி கேட்கலாமா?

தலைவர் : நன்றாகக் கேட்கலாம் இளைஞனே. நீ யார்? எங்கிருந்து வருகிறாய்?

மாதவன் : என்னை மதியூகி மாதவன் என்பார்கள். நான் வடக்கில் இருந்து வருகின்றேன்.

தலைவர் : சரி, என்ன கேட்க விரும்புகின்றாய் மதியூகி மாதவனே!

மாதவன் : நாங்கள் தாம் பெரியவர்கள் ஆகவே சிறந்தவர்கள் என்கிறீர்கள். ஆனால் காகங்கள் கிளிகள் போல நாம் மரங்களில் கூடு கட்ட முடியாதே!

தலைவர் : காகங்களா? காகங்கள் பயந்தாங்கொள்ளிகள் அதுதான் அவை மரங்களில் கூடுகட்டி ஒளிந்து கொள்கின்றன. நாம் வீரர்கள் பயந்து நடுங்கி கூடுகளில் மரங்களில் ஒளிக்கத்தேவையற்றவர்கள்.

மக்கள் : அமைதி அமைதி! கவனியுங்கள்.

தலைவர் : நாமே பெரும் கூடு கட்டுகின்றோம். ஆகவே மிகச்சிறந்தவர்கள்.

மாதவன் : ரொபின் குருவிகளின் முட்டைகளே வடிவானவை.

தலைவர் : ரொபின் முட்டைகள் ரொபின் குஞ்சுகளைத் தவிர வேறு ஒன்றும் பொரிக்கமாட்டா. அவை சிறுகுஞ்சுகள், பூச்சிகளைத் தின்று வாழும் அற்பப் பறவைகள் பூச்சிதின்னும் போதை கொண்டவை.

மக்கள் : கவனியங்கள் கவனியுங்கள்.

வேறு குரல் : ரொபின் பறவைகள் தொலைந்து போகட்டும்.

தலைவர் : சீமாட்டிகளே, சீமான்களே! நான் முதல் கூறிய படி நாங்களே பெரியவர்கள் சிறந்தவர்கள். இடையில் மதியூகி மாதவன் என்னை இடைமறித்துவிட்டான். மனிதன் தான் விலங்குகளில் பெரிய இனம் என்று சில முட்டாள்கள் சொன்னார்கள். நான் இப்பொழுது சொல்ல விரும்புகிறேன் இன்றும் என்றும் மனிதன் தீக்கோழிகளுக்கு குறைவானவன் தான்.

மக்கள்(1) : கேளுங்கள் கேளுங்கள் (கைதட்டல்)

தலைவர் : நாங்கள் நான்கு விரல்களில் நடக்கிறோம். ஆனால் மனிதனோ பத்து விரல்களில் நடக்கிறான்.

மாதவன் : மனிதன் இருந்தபடி வானில் விமானத்தில் பறப்பான். ஆனால் நாமோ பறக்கவே முடியாதவர்கள்.

தலைவர் : ஆம் மதியூகி மாதவரே. மனிதனால் பறக்க முடியும் என்பதை ஒப்புக் கொள்கிறேன். ஆனால் மனிதனோ உருண்டையான இவ்வுலகில் மிக வேகமாகப் பறக்கிறான். விரைவிலேயே அவன் தன்னை மற்றவருடன் மோதி அழித்துக் கொள்ளப்போகிறான். எந்த மனிதன் எவனை அழித்தான் என்று அறிந்து கொள்ள முடியாத நிலை வரும்.

மக்கள்(2) : கவனியுங்கள் கவனியுங்கள்.

மக்கள்(1) : மனிதன் ஒரு மடையன்.

தலைவர் : நாங்கள் ஆபத்துக் காலங்களில் தலையை மண்ணில் புதைத்து ஒளித்துக்கொள்ளலாம். வேறு யாரும் இவ்வுலகில் அப்படிச் செய்ய முடியாது

மாதவன் : தலையை மண்ணுக்குள் புதைப்பதால் எம்மால் மற்றவர்களைப் பார்க்க முடியாது. அதற்காக மற்றவர் எம்மைப் பார்க்க மாட்டார்கள் என்பதற்கு என்ன உத்தரவாதம்?

மக்கள்(1) : முட்டாள் கேள்வி

மக்கள்(2) : மதியூகிகள், புத்திஜீவிகள் தொலைந்து போங்கள்.

மக்கள்(3) : அவனை வெளியே தள்ளு

மக்கள்(4) : மதியூகி மாதவனே போ வீட்டை!

(இடி முழக்கம் போல் சத்தங்கள் கேட்கின்றன பெரிதாகி வரும்)

தலைவர் : நண்பர்களே, எமது எதிரிகள் இன்று பெருந்தொல்லை தரப் போகிறார்கள போல தெரிகின்றது ஆனாலும் நாம் பயப்படத் தேவையில்லை.

(சத்தங்கள் இன்னும் அருகே கேட்கின்றன)

தலைவர் : எமக்கு எப்படி எம்மைக் காப்பாற்றுவது என்று தெரியும். எல்லாரும் தலைகளை மண்ணுக்குள் புதைக்க ஆயத்தமாக இருங்கள்.

( யானைக் கூட்டங்கள் மிதிக்கும் சத்தம் கேட்கிறது.)

மாதவன் : சொன்னேன் பார்த்தீர்களா. பாருங்கள் ஒரு கூட்டம் யானைகள். இப்போது என்ன செய்வது. மண்ணுக்குள் தலையைப் புதைப்பதென்பது பிரயோசனம் அற்றது. நான் இந்தப் பாறைக்குள் மறைவேன்.

(அமைதி) (யானைகள் மிதித்து எல்லாத் தீக்கோழிகளும் இறந்து விடுகின்றன).

மாதவன்

(வெளியே வந்து) : கடவுளே, என்ன காட்சி இது. எங்கே அவர்கள்? எங்கே என் நண்பர்கள், எல்லாரும் இறந்து விட்டார்களா? எலும்புகளும் இறக்கைகளும் மட்டுமா மிச்சம். என்னே அழிவு.... ஒவ்வொருவராக அழைத்துப் பார்ப்போம். உயிரோடு இருப்பவர்கள் குரல் தாருங்கள்: கந்தசாமி – ராசகிளி – செல்லையா – செல்லம்மா – ராசையா – மாதவன் - ஆம் உள்ளேன் எங்கே என் உறவுகள்? எங்கே என் நண்பர்கள்? கடவுளே..







குட்டிமுயலும் வேட்டை நாயும் என்ற சிறுவர் நாடக நூலிற்காக திரு.கந்தையா ஸ்ரீகந்தவேள் அவர்கள் தேசிய சாகித்திய மண்டல விருது பெறுகின்றார்

உ

சிவமயம்

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் பத்திராதிபரும் சிறந்த கவிஞருமாகிய செல்வி துரைராசா நந்தீஸ்வரி அவர்களுக்கும், செல்வன் சிதம்பரநாதன் மாயவன் அவர்களுக்கும், வவுனியா கோயில்குளம் சிவன் கோயில் அகிலாண்டேஸ்வரி சமேத அகிலாண்டேஸ்வரர் காஞ்சி சிவமடம் திருமண மண்டபத்தில் மன்மத வருடம் பங்குனிமாதம் இருபதாம் நாள் (02-04-2016) நடைபெற்ற திருமண நிகழ்வின்போது வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் வாழ்த்தி வழங்கிய

திருமண வாழ்த்துப்பா

வவுனியா கலைஇலக்கிய நண்பர்கள் வட்ட
வரிசையிலே நற்தூணாம் பத்திராதிபராய்
கவனத்திற் குரியதொரு கவிஞை ஆக
கட்டுரைகள் சிறுகதைகள் படைப்போராக
அவனியிலே சிறந்ததமிழ் அமுதம் உண்டு
அருட்டியநல் உணர்ச்சியினால் பட்டம்பெற்று
தவமெனவே கல்வியினைக் கற்று நல்ல
தமிழினிலே முதுமாணி கற்கும்நந்தா!

துரைராசா ஸ்ரீரஞ்சனி தம்ப திகள்
துதித்ததனால் பெற்றபெரும் பேறாய்வந்து
கரைகாணாக் கல்வியினைக் கற்று நல்ல
கச்சிதமாய் பலர்புகழ வவுனியாவின்
பிரதேச செயலகத்து அபிவிருத்தி உத்தியோகத்தர்
பதவியினை வகித்துவரும் நந்தா!நீங்கள்
திருவளரும் சிதம்பரநாதன் தங்கலக்ஷ்மி தம்பதிகள்
திருமகனாம் மாயவனை மணந்தீர்இன்று.

வேறு


தமிழும்நற் கலையும் போல்
தண்ணிலவும் குளிரும் போல்
அமிழ்தும்நற் சுவையும் போல்
அருந்ததியும் வசிட்டரும் போல்

கமழும்நல் வாச னையும்
கற்பகப்பூ இதழும் போல்
உமையாளும் சிவனும் போல்
ஒருமனதாய் வாழ்ந் திடுக!

வேறு

பேறுகள் பலவும் பெற்றுப்
பெருமைகள் யாவும் பெற்றுச்
சாறுகொள் கரும்பாய்த் தேனாய்ச்
சர்வமும் இனிக்க வாழ்வில்
நூறெனும் ஆயுள் பெற்று
நுவலரும் பிள்ளை(கள்) பெற்று
ஆறெனப் பலரை வாழ்வித்து
அரியநல் வாழ்வு வாழ்க!

வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம்
02-04-2016



# சிருஷ்டி

ஒரு நீக்ரோவின் உபதேசம்

விண்வெளியில் இறங்கிய இறைவன்
வெளியே எங்கும் சுற்று நோக்கி
கூறினார் இங்ஙனம்
"தன்னந்தனியே நான், எனக்கு
உருவாக்குவேன் ஓர் உலகை"

இறைவனின் பார்வை பதியும்வரை
கவ்வி இருந்தது எங்கும் காரிருள்,
இரவுகள் நூறிலும் கொடிய இருள்
சதுப்பு நிலத்துத் தாவரத்தினூடே

புன்னகைத்தார் இறைவன்
ஒளி உண்டாயிற்று
சுருண்டது இருள் ஒரு புறம்,
விரிந்தது ஒளி மறுபுறம்,
ஆண்டவன் பகர்ந்தார் "நல்லது நல்லது!"

வெளியே வந்த இறைவன்
ஒளியை மெல்ல எடுத்து
உருட்டி உருட்டிக் கைகளால்
உருவாக்கினார் சூரியனை;
வானுலகை வசீகரிக்க இந்த பாஸ்கரன்.
எஞ்சிய ஒளியை
எட்டி எடுத்துத் திரட்டி
இருளில் இருத்த அது
இரவில் ஒளிரும் நிலவானது;
மின்னும் நட்சத்திரமானது.
ஒளிக்கும் இருளுக்கும் இடையே உலகம் உருவாயிற்று;
ஆண்டவன் பகர்ந்தார் "நல்லது நல்லது!"

சுயமாகக் கீழிறங்கிய இறைவனின்
வலக்கையில் ஆதவனும்
இடக்கையில் சந்திரனும்;
சிரசில் ஒளிர்ந்தன தாரகைகள்
தாளின் கீழ் பூமியும்

ஆண்டவன் அடியெடுத்து வைத்ததும்
அவர் மிதித்த இடங்கள்
பள்ளத்தாக்குகள் ஆயின;
மலைகள் எனப் பலப்பல தோன்றின.
தரிசாகக்கிடந்த வெப்பமிகு பூமியைத்
தரித்து நின்று நோக்கினார்.
உலகின் எல்லையில் உமிழ்ந்தார்.
ஏழு கடல்களும் தோன்றின.
கண்ணைச் சிமிட்டுகையில் மின்னிற்று;
கையைத் தட்டுகையில் இடி இடித்தது.
புவியின் மேலிருந்து நீர் இறங்கிற்று.

பச்சைப்புற்கள் துளிர்த்தன,
சிறிய சிவப்புமலர்கள் மலர்ந்தன,
வானை நோக்கி விரலை நீட்டியது பைன் மரம்,
ஆல மரங்கள் கரங்கள் நீட்டின,
வாவிகள் நிலத்தை அணைத்தன,
ஆறுகள் பாய்ந்தன கடலை நோக்கி;
இறைவன் மீண்டும் புன்னகைத்தார்,
வானவில் தோன்றிற்று,
அவரின் தோளில் ஓர் அரைப்பரிதியாய்.

உயர்த்திய கரங்களை அசைத்தார் இறைவன்,
கடலை மேவியும் நிலத்தை மேவியும்,
'பெருகுக' இறைவன் பகர்ந்தார்.
அவர் கையை இறக்கும் முன்பே
மீன்களும் பறவைகளும் தோன்றின,
நீந்தின நீர் நிலைகளில்.
காட்டிலும் அடவியிலும் உறுமின,
இறக்கைகளால் காற்றைக் கிழித்தன.
இறைவன் பகர்ந்தார் "நல்லது நல்லது!"

சுற்றி நடந்தார் கடவுள்,
சுற்றிப் பார்த்தார் கடவுள்
தன் சிருஷ்டி அனைத்தையும்.
தன் ஞாயிறைக் கண்டார்,

தண் நிலவைக்கண்டார்,
சின்னஞ்சிறு நட்சத்திரங்களும் தென்பட்டன;
எல்லாவற்றுடனும் கூடிய
தன் உலகைப் பார்த்தார்,
இறைவன் கூறினார் "நான் இன்னும் தனிமையில் தான்".

மலையின் ஓரத்தே அமர்ந்த இறைவன்
சிந்திக்கத் தொடங்கினார்;
ஆழ்ந்து அகன்ற ஆற்றின் அருகே
தன் தலையைக் கையில் ஏந்தியபடி
சிந்தித்தார் சிந்தித்தார்,
இப்போது எண்ணினார் 'ஒரு மனிதனை உருவாக்குவேன்'

ஆற்றுப் படுக்கையிலிருந்து
மண்ணைக் கோலி எடுத்து
முழந்தாளிட்டு அமர்ந்தார்
ஆற்றங்கரை ஓரத்தில்;
எல்லாம் வல்ல இறைவன் அவன்
ஒளிரும் சூரியனை வானில் பொருத்தி,
இரவின் தொலை மூலையில் தாரகைகளை வீசி
உள்ளங்கையில் பூமியை உருட்டிய
சர்வ வல்லமை படைத்த இறைவன்
தாய் குனிந்து தன் சேயை முத்தமிடுவது போல்
புழுதி மீதமர்ந்து
தன்னைப்போல் உருவம் படைத்தார்.
உருவப் பொம்மைகட்குள்
உயிர் மூச்சை ஊதினார் அவ் இறைவன்.
மனிதன் உயிர்த்தான்.
அங்ஙனமே ஆயிற்று. ஆமென்.

ஆங்கிலத்தில்:

**THE CREATION-** A Negro Sermon by James Weldon Johnson

தமிழில் - **காயத்ரீ சிறிகந்தவேல்**

# வவுனியா மாவட்டத்தில் 2015 இல் நடைபெற்ற முக்கியமான சில கலை இலக்கிய நிகழ்வுகள்

03-01 2015, வவுனியா மாவட்ட அந்தணர் ஒன்றியம் வாழ்நாள் சாதனையாளர், கலாபூஷணம் விருது-2014, பெற்றவர்களுக்கான பாராட்டுவிழா வினை அந்தணர் ஒன்றிய குருகுல கட்டடத்தில் வவுனியா அந்தணர் ஒன்றியத்தின் தலைவர் சிவஸ்ரீ முத்து ஜெயந்திநாதக் குருக்கள் (ச.நீ) தலைமையில் நடாத்தியது. சிவஸ்ரீ கிருஷ்ணசாமிக்குருக்கள் சதாசிவக் குருக்கள், (ஆலோசகர் வவுனியா அந்தணர் ஒன்றியம் ) மற்றும் கலாபூஷணங்கள் சிவஸ்ரீ கனகசபாபதி ஐயர் கந்தசாமிக்குருக்கள் (போசகர்,வவுனியா அந்தணர் ஒன்றியம்) பிரம்மஸ்ரீ பஞ்சாட்சரச்சர்மா சிவானந்தசர்மா (கோப்பாய் சிவம், யாழ்ப்பாணம்) பிரம்மஸ்ரீ முத்துச்சுவாமிக்குருக்கள் பத்மனாபசர்மா (திருகோணமலை) ஸ்ரீமதி ஞானலட்சுமி ஞானசேகரஐயர் (கொழும்பு) செல்வி யோகலட்சுமி சோமசுந்தரம் (வவுனியா) திருமதி புவனநாயகி ஐயம்பிள்ளை (வவுனியா) திரு. முத்துராசா குமாரசிங்கம் (வவுனியா) திரு. ஆழ்வார்ப்பிள்ளை பத்மநாதன் (வவுனியா), திரு.நடேசு சுப்பிரமணியம், வவுனியா), திரு இராமசாமி சுப்பிரமணியம். (வவுனியா) ஆகியோர் கௌரவிக்கப்பட்டனர்.

20-01-2015 , மைதிலி தயாபரனின் விஞ்சிடுமோ விஞ்ஞானம் கவிதை நூல் தமிழறிஞர் கலாநிதி தமிழ்மணி அகளங்கன் (தலைவர், வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம்) அவர்களின் தலைமையில் இறம்பைக்குளம் மகளிர் மகாவித்தியாலயத்தில் நடை பெற்றது. பிரதம விருந்தினர். அருட்சகோதரி திரேசா சில்வா ( அதிபர் இற. மக.ம.வி.)

07-02- 2015 திரு முருகேசு கௌரிகாந்தன் அவர்களைப் பதிப்பாசிரியராகக் கொண்ட பேராசிரியர் டாக்டர் ஆ.வேலுப்பிள்ளை அவர்களின் சைவசமயம் அன்றும் இன்றும் நூல்வெளியீடு மற்றும் தமிழ் முற்றம் மாத இதழ் அறிமுகம் நிகழ்வு வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரியின் பிரதான மண்டபத்தில் அக் கல்லூரிப் பீடாதிபதி திரு.குமாரசாமி சிதம்பரநாதன் அவர்களின் தலைமையில் நடை பெற்றது. பிரதம விருந்தினராக பேராதனைப் பல்கலைக்கழக இந்துநாகரிக, தமிழ்த்துறை ஒய்வுநிலைப் பேராசிரியர் இரா.வை. கனகரத்தினம்அவர்கள்

கலந்துகொண்டார்.

21- 01- 2015 வவுனியா தமிழ் மத்திய மகா வித்தியாலய அதிபர் திரு.ம.ச.பத்மநாதன் அவர்களின் மணிவிழா கல்லூரிக் கலை அரங்கில் பிரதி அதிபர் திரு மரியநாயகம் அவர்களின் தலைமையில் ,நடைபெற்றது. யாழ் பாராளுமன்ற உறுப்பினரும் தமிழரசுக்கட்சியின் தலைவருமான மாவை. சோ.சேனாதிராசா அவர்கள் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டார்.

28-02-2015 யாழ் தர்மினி பத்மநாதனின் விபச்சாரி 80 ரூபாய் சிறுகதைத் தொகுப்பு வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபத்தில் கலாநிதி தமிழ்மணி அகளங்கன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

07-03-2015 வவுனியா குருமன்காடு காளியம்மன் தேவஸ்தான அறங்காவலர் சபையும் வவுனியா சேக்கிழார் மன்றமும் இணைந்து நடாத்திய திருவளுவர் விழா - 2015 குருமன்காடு ஸ்ரீ காளியம்மன் தேவஸ்தான பாடசாலை மண்டபத்தில், ஸ்ரீ காளியம்மன் தேவஸ்தான தலைவர் திரு.இ.கிருபா மூர்த்தி அவர்களின் தலைமையில் நடை பெற்றது. பிரதம விருந்தினர்.திரு கா.உதயராசா அவர்கள்.(பிரதேச செயலாளர், வவுனியா )

07-04-2015 வவுனியா பிரதேச செயலகமும், பிரதேச கலாசாரப் பேரவையும் இணைந்து நடாத்திய கலை இலக்கியப் பெருவிழா 2015 வவுனியா நகரசபை கலாசார மண்டபத்தில் நடைபெற்றது. காலையமர்வுக்குத் தலைமை கலாநிதி தமிழ்மணி அகளங்கன் அவர்கள். பிரதம விருந்தினர்கள். வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான கௌரவ ந.சிவசக்தி ஆனந்தன். கௌரவ.செல்வம் அடைக்கல நாதன், கௌரவ விநோதராதலிங்கம் ஆகியோர். மாலை நிகழ்வுக்குத் தலைமை. வவுனியா பிரதேச செயலாளர் திரு.கா.உதயராசா.அவர்கள். பிரதம விருந்தினர் வவுனியா அரசாங்க அதிபர் திரு.எம்.கே.பந்துல ஹரிச்சந்திர அவர்கள். இந்நிகழ்வில் வவுனியம் பிரதேச மலர் வெளியிட்டு வைக்கப்பட்டது.

12-04-2015 தமிழ் மாமன்றம் நடாத்திய தமிழ் மாருதம் 2015 முத்தமிழ்ச் சங்கமம் நிகழ்வு நகரசபைக் கலாசார மண்டபத்தில் திரு.இரா. இராஜேஸ்வரன்( தலைவர், தமிழ் மா மன்றம்.) அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

26-04-2015, வ/நிருத்திய நிகேதன நுண்கலைக்கல்லூரி 2014 ம் ஆண்டு தேசிய நடனவிழாப் போட்டியில் வெற்றியீட்டிய மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வை வ/கந்தசாமி கோவில் மண்டபத்தில் கலாநிதி தமிழ்மணி அகளங்கன் அவர்கள் தலைமையில் நடாத்தியது. பிரதம விருந்தினர். வ/பிரதேச செயலாளர் திரு.கா.உதய ராஜா.அவர்கள்.

30-04-2015, வெங்கலச் செட்டிகுளம் பிரதேச செயலகம் (பிரதேச கலாசாரப் பேரவை ) பிரதேச கலை இலக்கியப் பெருவிழா 2014ஐ வீரபுரம் மணிவாசகர் மகாவித்தியாலயத்தில் வெங்கலச் செட்டிகுளம் பிரதேச செயலாளர் திரு.என். கமலதாசன் அவர்களின் தலைமையில் நடாத்தியது. பிரதமவிருந்தினர் வடக்கு மாகாண ஆளுநரின் செயலாளர் திரு.இ.இளங்கோவன் அவர்கள்.

10-05-2015 திருமதி பார்வதி நல்லதம்பி அவர்களின் அனுபவத்தின் ஆதங்கம் கவிதை நூல் வெளியீட்டு நிகழ்வு வ/சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபத்தில் வவுனியா தமிழ் சங்க ஸ்தாபகர் தமிழருவி த. சிவகுமாரன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. பிரதம விருந்தினர் உடுவை. சி.தில்லை நடராசா அவர்கள். (உறுப்பினர், பொதுச் சேவை ஆணைக்குழு, முன்னை நாள் அரசாங்க அதிபர், வவுனியா)

24-05-2015 வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டத்தின் ஆதரவில் வேதநாயகம் தபேந்திரன் அவர்களின் யாழ்ப்பாண நினைவுகள் பாகம் 1-நூல் அறிமுக நிகழ்வு வ/சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபத்தில் கலாநிதி தமிழ்மணி அகளங்கன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. பிரதம விருந்தினர் வைத்திய கலாநிதி ப.சத்தியலிங்கம் அவர்கள் (சுகாதார சுதேச வைத்திய அமைச்சர் வடமாகாணம் )

20-06-2015 வன்னியூர்க் கவிராயரின் சிலை திறப்பு விழாவும், நூல் வெளியீடும். இடம். பொது நோக்கு மண்டபம், இலுப்பைகுளம். நேரியகுள ம். வெங்கலச்செட்டிகுளம். தலைமை.திரு.அ.அன்ரனி குருஸ் அவர்கள். பிரதம விருந்தினர் வடமாகாண முதலமைச்சர் கௌரவ க.வி. விக்னேஸ்வரன் அவர்கள்.

11-07-2015 நோர்வே சலங்கை நர்த்தனாலய மாணவி செல்வி மௌரின் எட்வேட் யோகராஜா அவர்களின் பரத நாட்டிய

அரங்கேற்ற நிகழ்வு நகரசபை கலாசார மண்டபத்தில் கலாபூஷணம்,கலாநிதி தமிழ்மணி அகளங்கன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. பிரதமவிருந்தினர், வடமாகாண சுகாதார, சுதேசவைத்திய அமைச்சர் வைத்திய கலாநிதி பத்மநாதன் சத்தியலிங்கம் அவர்கள். இம்மாணவியின் ஆரம்பக்குரு வ/நிருத்திய நிகேதன நுண்கலைக்கல்லூரி ஸ்தாபகர் திருமதி சூரியயாழினி வீரசிங்கம், அரங்கேற்றக் குரு கலையியல் நிறைஞ்ஞர் திருமதி மேரி மாகிறேற் சூசை.

17-07-2015 வடமாகாண பண்பாட்டலுவல்கள் திணைக்களமும், வவுனியா பிரதேச செயலகமும் இணைந்து நடாத்திய ஆடிப்பிறப்பு கொண்டாட்டம் -2015 நிகழ்வு வ/சுத்தானந்த இந்து இளைஞர்சங்க கலாசார மண்டபத்தில் பிரதேச செயலாளர் திரு.கா.உதயராசா அவர்களின் தலைமையில் நடை பெற்றது.

02-08-2015 வ/நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரியும் லண்டன் ஜெயாஞ்சலி நிறுவனமும் இணைந்து நடாத்திய சர்வதேச நாட்டியப் பெருவிழா நகரசபை கலாசார மண்டபத்தில் கலாநிதி தமிழ்மணி அகளங்கன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. பிரதம அதிதிகளாக கலைஞர் வேல் ஆனந்தன் அவர்கள்(ஓய்வுநிலை பிரதிப் பணிப்பாளர்-கல்வி பண்பாட்டு அலுவல்கள் அமைச்சு வடக்கு கிழக்கு மாகாணசபை) ஸ்ரீமதி ராதிகா சுரஜித் அவர்கள் (சென்னை த் ரஜே நிறுவன இயக்குனர், தகதிமிதா நிகழ்ச்சி இயக்குனர் ஜெயா T.V), திரு.சேஜில் பாண்டியன் அவர்கள் (ஊடகவியலாளர். இந்தியா) திரு.ஐயாத்துரை கஜமுகன் அவர்கள் (சக்தி T.V நிகழ்ச்சிப் பணிப்பாளர் )

08/08/2015 பிரான்ஸ் சிலம்பொலி நாட்டியப்பள்ளி ஆசிரியை திருமதி சேஷா கற்பகம் அவர்களின் மாணவி செல்விஅர்ஷிதா அம்பரீஷன் அவர்களின் பரத நாட்டிய அரங்கேற்ற நிகழ்வு நகரசபை கலாசார மண்டபத்தில் வ/சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத் தலைவர், மக்கள் சேவை மாமணி நா.சேனாதிராசா அவர்களின் தலைமையில் நடைபெற்றது.

25/08/2015 தேசிய வீரன் பண்டார வன்னியன் ஞாபகார்த்த விழா 2015 வ/நகரசபை மண்டபத்தில் கலாநிதி தமிழ்மணி அகளங்கன் அவர்களின் தலைமையில் நடை பெற்றது. பிரதம விருந்தினர். திரு.மு.சிற்றம்பலம் அவர்கள் (ஜனாதிபதி

சட்டத்தரணி )

04/10/2015 திருமதி மைதிலி தயாபரன் அவர்களின் வீடுகளில் மின்சக்தி விரயமாதலைக் குறைப்போம், (கட்டுரை) அநாதை எனப் படுவோன் (நாவல்), சீதைக்கோர் இராமன் (கவிதைத் தொகுப்பு ) தவறுகள் தொடர்கின்றன (சிறுகதைத் தொகுப்பு) ஆகிய நூல்களின் வெளியீட்டு நிகழ்வு வ/சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபத்தில் பிரதம பொறியியலாளர் திரு. செல்வராஜா பிரபாகரன் ( பிரதேச மின் பொறியியலாளர் இ.மி.ச..வவுனியா) அவர்களின் தலைமையில் நடைபெற்றது. பிரதம விருந்தினர் திரு. காளிராஜா உதயராஜா (பிரதேச செயலாளர் வவுனியா.)

11-10-2015 பூ.பிரதீபனின் செவ்வானம் (கவிதை நூல்) அறிமுக விழா வ/சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபத்தில் கலாநிதி தமிழ்மணி அகளங்கன் அவர்களின் தலைமையில் நடை பெற்றது. பிரதம விருந்தினர் கலாநிதி கந்தையா ஸ்ரீ கணேசன்(சிரேஸ்ட ஆங்கில மொழி விரிவுரையாளரும், மொழி பெயர்ப்புக் கற்கைகள் பிரிவு இணைப்பாளரும்-யாழ் பல்கலைக் கழகம்.) அவர்கள். ஏற்பாடு வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம்.

11/10/2015 வவுனியா சைவப்பிரகாச மகளிர் கல்லூரியிலிருந்து ஓய்வுபெறும் கல்லூரி முதல்வர் செல்வி உமா இராசையா அவர்களின் மணிவிழா நகரசபை கலாசார மண்டபத்தில் திரு.செல்லத்துரை ஸ்ரீ நிவாசன் (தலைவர் மணிவிழாக் குழு, செயலாளர் பாடசாலை அபிவிருத்திக் குழு) அவர்களின் தலைமையில் நடைபெற்றது. பிரதம விருந்தினர் கௌரவ தம்பிராசா குருகுலராசா (அமைச்சர் கல்வி, பண்பாட்டு அலுவல்கள், விளையாட்டுத்துறை, மற்றும் இளைஞர் விவகாரம் - வடமாகாணம் )

07-11-2015 வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் கந்த சஷ்டியை முன்னிட்டு நடாத்திய சிதம்பரம் இசைமைந்தன் சிவமைந்தன் அவர்களின் திருப்புகழ் இன்னிசைக் கச்சேரி. நடைபெற்றது. தலைமை மக்கள் சேவை மாமணி நா.சேனாதிராசா ச.நீ ( தலைவர் வ/சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம் ) பிரதம விருந்தினர்.சிவநெறிப் புரவலர், சமூக சஞ்சீவி சி.ஏ .இராமஸ்வாமி (போஷகர், இந்துமாமன்றம்.வவுனியா.) இந்நிகழ்வில் சுத்தானந்த இந்து இளைஞர் சங்கத்தோடு இணைந்து சைவசமய,சமூகப்

பணி ஆற்றிய எழுபத்தைந்து வயதுக்கு மேற்பட்ட சான்றோர் கௌரவிக்கப் பட்டனர். திரு.வே.சதாசிவம் அவர்கள்.(வயது 105.), இறைபணிச் செம்மல், கலாபூஷணம் வை.செ.தேவராசா,(தலைவர் இந்துமாமன்றம் வவுனியா , தலைவர் மணிவாசகர் சபை.) அவர்கள். சைவசிரோமணி க.ஐயம்பிள்ளை ((தலைவர் சேக்கிழார் மன்றம் வவுனியா) அவர்கள். கலா பூஷணம் திருமதி புவனநாயகி ஐயம்பிள்ளை(செயலாளர் மணிவாசகர் சபை.) அவர்கள் திரு.க.நவரத்தினம் ( பொதுச்சபை உறுப்பினர் வ/சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம்.) அவர்கள்

25-11-2015 மருத்துவர் எஸ்.சிவதாஸ்அவர்கள் எழுதிய சிறுவர்களுடன் நூல் வெளியீட்டு விழா நகரசபை கலாசார மண்டபத்தில் திருமதி கோகிலா மகேந்திரன் அவர்களின் தலைமையில் நடைபெற்றது. பிரதம விருந்தினர். பேராசிரியர் தயா சோமசுந்தரம் அவர்கள்.

20-12- 2015 பசுந்திரா சசி அவர்களின் பாவு தளிர் தூவு வானம் சிறுகதைத் தொகுப்பு வெளியீடு திரு ஐ.இந்திர ராசா ( கௌரவ வட மாகாணசபை உறுப்பினர்) அவர்களின் தலைமையில் செட்டிகுளம் மகா வித்தியாலயத்தில் நடைபெற்றது.பிரதம அதிதி சாகித்திய ரத்னா எழுத்தாளர் தெளிவத்தை ஜோசேப் அவர்கள்.

- வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம், வவுனியா நகர வரியிறுப்பாளர்கள் சங்கம், தமிழ் விருட்சம் ஆகியவை இணைந்து வவுனியா நகரில் அமைந்துள்ள சான்றோர்களின் திருவுருவச் சிலைகளுக்கு உரிய காலங்களில் மாலை சூட்டி கௌரவப் படுத்திய நிகழ்வுகள் நடைபெற்றன. ஏற்பாட்டாளர் திரு.செ.சந்திரகுமார் (கண்ணன்) அவர்களுக்கு நன்றி
- திருநாவற்குளம் பாரதி மொழிச்சங்கத்தின் பௌர்ணமிக் கலை நிகழ்ச்சிகளும், திருக்குறள் மனனப் போட்டிகளும், பரிசு வழங்கலும் இடம்பெற்றன.
- வவுனியா தமிழ்ச் சங்கம், தமிழ் மாமன்றம் ஆகியவற்றின் நிகழ்வுகளும் வேறுசில நிகழ்வுகளும் இடம்பெற்றன.

**நந்தா**
பத்திராதிபர்
வ/க.இ.ந.வட்டம்

## போர்தின்ற ஆடை ...

ஆடை ஒன்று

அநாதையாய் கிடக்கிறது

புலரும் பொழுதுகளிலும்

போருக்கு புறப்படுகையிலும்

புத்துயிர்கொடுத்த போராடை

அந்தோ... புழுதியில் ... பார்

அநாதரவாய் ..... அமைதியாய் ...

நேற்றைய நினைவுகளில் ...

அலங்கரிக்கப்பட்ட ஆடை

இன்று .. அந்நியமாகி ...

பாறைகளின் நடுவே ...

முட்செடிப் புதர்களுக்குள்ளே ....

புழுதி படிந்து .... அநாதையாய்

கிடக்கிறது.

போர் தின்ற ஆடை

- மாணிக்கம் ஜெகன்



## பதிவுகள் வேண்டும்

காலம் கடந்தது
கலைப் பதிவுகள் தேடி
புலம் பெயர் சமூகம்
புறப்பட்டு வந்தது

எங்கள் அடையாளம்
எங்கள் பதிவுகள்
எங்கும் தேடியும்
எதுவும் இல்லை

என்ன செய்வது
எங்கள் விதியை
அவர்களும் மாற்றிட
நம்மவரும் மாற்றினரோ.

அன்று
எவையும் எமக்குள்ளே
இருக்க வேண்டுமென்று
உரத்தன குரல்கள்
உயர்த்தின கைகள்
கமெரா முதல்
வீடியோ முதல்
அனுமதி இல்லை ....

எங்கள் எங்களது என
எதிலும் கவனம்
என்னதான் நடந்தாலும்
எல்லாம் எமக்குள்ளே
இருக்க வேண்டுமென ... (எங்கே)

இப்போ
தலையில் கை வைத்து
விழிபிதுங்கி அழுதோம்
வழித்தடங்கள் இன்றி
வார்த்தைகள் பிழையானதால்
வந்தவர்க்கு காட்ட
எதை எங்கே எடுப்பது

எத்தனை பதிவுகள் பகிர மறந்தீர்
எத்தனை பதிவுகள் காத்திட மறந்தீர்
எங்கு தேடியும் எதுவும் கிடையா
என்ற விதிதனை விட்டீர் - இப்போ
எத்தனை தவறு செய்தீர் என்பது
புரிகிறதா உந்தனுக்கு .....

பதிவுகள் முக்கியம் என்பதை
பகிர்ந்திட பதிவு செய்தேன்
பலரும் உணர்ந்திட்டால்
பலனேதும் உண்டு - இல்லை
பலம் நமக்கு இல்லை.

எங்கள் புத்தகம்
எங்கள் நாவல்
எங்கள் நாடகம்
எங்கள் சித்திரம்
எங்கள் சிற்பம் என
பல பதிவுகள் இட்டுவரும்
மாருதம் போன்ற
பதிவுகள் வேண்டும் - அதை
பாதுகாத்திடல் வேண்டும்
பரம்பரை பரம்பரை என
பதித்திடல் வேண்டும்
புரிந்திட்டால் இன்றே - நீரும்
காலப் பதிவு தனை செய்திடல்
சாலச் சிறந்தது...

எம் கலைகள் பேணியே
எம்மவர் பெருமை சேர்ப்போம்
நாம் தமிழர் என தலை நிமிர்ந்து
நிற்போம் வாரீர்! வாரீர்!! வாரீர்!!

**பாலேந்திரன்.பா**


மலர்களில் நான் மல்லிகையாக இருக்கிறேன்.
– கீதையில் கிருஷ்ணன்
மல்லிகை என் மன்னன்
மயங்கும் பொன்னான
மலரல்லவோ
வன்னி மதுரை மல்லிகை
உதிரிப்பூக்களாகவும், மாலைகளாகவும்
பெற்றுகொள்ள
தம்பா மாதிரிப் பண்ணை
தொ.பே: 077 7153 963,
024 5670262

மாருதம் சிறப்புற
வாழ்த்துக்கள்



பா.பாலா

METO TRADERS

*Dealers in*
*Electrical Goods & Plumbing Items*

*35A, Bus Stand Shopping Complex,*
*Vavuniya.*
*Phone : 024 – 2222572*

# செந்தில் நாதன் நற்பணி மன்றம்

1ம் குறுக்குத்தெரு,
வவுனியா.

# N.S.RATNAM & BROS

***Dealers in***
***all kinds of electronic items and spares***

**HONDA**

***No.6, 1st Cross Street,***
***Vavuniya.***
***Tel / Fax : 024 - 2221237***

Vaani

VAANI COMPUTER PRINTING CENTRE

*Digital Printing, Banner, Sticker, Multi Colour Offset Printing, Computer Designing, T shirt Printing, School Batch, School Tie, Medals, Binding, Laminating, Wholesale Dealers in All Kind Papers, Wedding Cards, Cake Boxes*

**No.85, Kanthasamy Kovil Road, Vavuniya.**
**Tele : 024 2223658, Mobile: 77 6316365**
**E-mail: vaaniprinting@gmail.com FB : vaani printers**

Akash
024 2224965

**111, Bus Stand Complex, Vavuiya.**
**024 222 4965, 077 4820023, akashgraphocs.lk@gmail.com**

ஆரம்பம் : மாசி முழுநிலா 1997

# வவுனியா கலை இலக்கிய நண்பர்கள் வட்டம் நடாத்தும்
# 19 ஆண்டு நிறைவு விழா - நிகழ்வு 189

**காலம் : 28.05.2016 சனிக்கிழமை காலை 9.30 மணி**
**இடம் : வவுனியா சுத்தானந்த இந்து இளைஞர் சங்க கலாசார மண்டபம்**

தலைமை
**கலாநிதி.தமிழ்மணி அகளங்கன் அவர்கள்**
(தலைவர், வ.க.இ.ந.வட்டம்)

பிரதம விருந்தினர்
**கலாநிதி.த.மங்களேஸ்வரன் அவர்கள்**
(யாழ். பல்கலைக்கழக வவுனியா வளாக முதல்வர்)



சிறப்பு விருந்தினர்கள்
**திரு.கா.உதயராஜா அவர்கள்**
(பிரதேச செயலாளர் வவுனியா)
**சைவப்புலவர்.இ.நித்தியானந்தன் M.A அவர்கள்**
(மாவட்ட கலாசார உத்தியோகத்தர், வவுனியா)

விசேட விருந்தினர்கள்
**திருமதி.அன்ரன்.எஸ்.சோமராஜா அவர்கள்**
(வலயக்கல்விப் பணிப்பாளர் வவுனியா தெற்கு)
**திரு.வ.ஸ்ரீஸ்கந்தராஜா அவர்கள்**
(வலயக் கல்விப் பணிப்பாளர் வவுனியா வடக்கு)

கௌரவ விருந்தினர்கள்

**மக்கள் சேவை மாமணி நா.சேனாதிராசா ச.நீ அவர்கள்**

(தலைவர், சுத்தானந்த இந்து இளைஞர் சங்கம், வவுனியா)

**சைவசிரோமணி.சி.சுப்பிரமணியம் அவர்கள்**

(தலைவர், பல.நோ.கூ.சங்கம், வவுனியா)

**சிவநெறிப்புரவலர் சி.ஏ.இராமஸ்வாமி அவர்கள்**

(போசகர், இந்து மாமன்றம் வவுனியா)

**வர்த்தக சிரோமணி.T.K.இராஜலிங்கம் அவர்கள்**

(தலைவர், வர்த்தக சங்கம் வவுனியா.)

**டாக்டர்.ஓ.கே.குணநாதன் அவர்கள்**

(மேலாளர், எழுத்தாளர் ஊக்குவிப்பு மையம்)

**நயினை கி.கிருபானந்தா அவர்கள்**

(செயலாளர், யாழ் இலக்கிய வட்டம்)

**பிரம்மஸ்ரீ.மஹா.தர்மகுமார சர்மா அவர்கள்**

(தலைவர், மன்னார்த் தமிழ்ச் சங்கம்)

## நிகழ்ச்சி நிரல்

| | |
|---|---|
| மங்கல விளக்கேற்றல் | |
| தமிழ் வணக்கப் பாடல் | : செல்வி.கிருஷ்ரிகா ஞானவேல் அவர்கள் |
| வரவேற்பு நடனம் | : நிருத்தியவாணி திருமதி.சூரியயாழினி வீரசிங்கம் அவர்களின் நிருத்திய நிகேதன நுண்கலைக் கல்லூரி மாணவிகள் |
| வரவேற்புரை | : வித்தியாரத்தினா.ந.பார்த்திபன் அவர்கள் (மூத்த விரிவுரையாளர், வவுனியா தேசிய கல்வியியற் கல்லூரி) உபதலைவர், வ.க.இ.ந.வட்டம் |
| தலைமை உரை | : தலைவர் |

## மாருதம் சஞ்சிகை இதழ் 16 வெளியீடு

முதற்பிரதி பெறுபவர்

அருட்கலைவாரிதி, கலாபூஷணம்,

**ஸ்தபதி, சு.சண்முகவடிவேல் அவர்கள்**

அறிமுகவுரை

**இன்தமிழ் இனியன் எஸ்.எஸ்.வாசன் அவர்கள்**

(மாவட்ட சமூக சேவை உத்தியோகத்தர்)

உபதலைவர், வ.க.இ.ந.வட்டம்

சிறப்புரை

பொருள் : **தமிழர் தம் குணமும் மானமும்**

**இலக்கியச் சுடர்.ஐ.கதிர்காமசேகரன் அவர்கள்**

(ஆசிரியர், வ/இ.தி.த.ம.வி)

கௌரவிப்பு நிகழ்வு

**சான்றோர் கௌரவம் பெறுவோர்**

வைத்தியத் துறையில் வவுனியாவில் அளப்பெரும் சேவையாற்றிவரும்

**வைத்தியத் தம்பதிகள்**

**டாக்டர் சுப்பிரமணியம் சின்னத்துரை அவர்கள்**

**டாக்டர் திருமதி.செந்தில்வள்ளி சின்னத்துரை அவர்கள்**

ஆங்கிலக் கல்வித்துறையில் வவுனியாவில் அளப்பெரும் சேவையாற்றி வரும்

**திருமதி.இமெல்டா ஜெயநாயகி சிவகுரு அவர்கள்**

இறம்பைக்குளம், வவுனியா

கௌரவிப்பு உரை

**கலாநிதி.கந்தையா ஸ்ரீகணேசன் அவர்கள்**

(சிரேஷ்ட ஆங்கில விரிவுரையாளரும், மொழிபெயர்ப்புக் கற்கைகள் இணைப்பாளரும், யாழ். பல்கலைக்கழகம்)

செயலாளர், வவுனியா க.இ.ந.வ

வவுனியா பண்டாரிகுளம் முதலியார் ச.தியாகராஜா அவர்களின் மகன் பொறியியலாளர், **கவிஞர் தி.மகேஸ்வரராஜா** அவர்கள் வழங்கும்

வவுனியா பண்டாரிகுளம் முதலியார் ச.தியாகராஜா நினைவு

**மாணவச் சாதனையாளர் விருது – 2016**

பாடசாலைக்காலத்தில் பாடசாலையின் உள்ளேயும், வெளியேயும் தமிழியல் சார்ந்த துறைகளில் மாணவர்கள் செய்த சாதனைகளின் அடிப்படையில் தேர்ந்தெடுக்கப்பட்ட மாணவர்களுக்கு ரூ10000 பணப்பரிசும், சான்றிதழும், நினைவுச் சின்னமும் வழங்கப்படும். (வவுனியா மாவட்ட பாடசாலையில் தரம் 13 இல் கல்வி கற்போருக்கு மட்டும்)

**சிறப்பு விருந்தினர் உரை**

**விசேட விருந்தினர் உரை**

**பிரதம விருந்தினர் உரை**

# கலைநிகழ்ச்சிகள்

## கவிதா நிகழ்வு

**ஈழத்துக் கவிதைகள், மொழிபெயர்ப்புக் கவிதைகள்**

யாழ்.பல்கலைக் கழக மொழிபெயர்ப்புத்துறை மாணவர்கள்

## கவி அளிக்கை

கவிஞர்கள் :

**குரும்பையூர் த.ஐங்கரன்**

**மாணிக்கம் ஜெகன்**

**த.பிரதாபன்**

**மா.நந்தீஸ்வரி (நந்தா)**

**மைதிலி.தாயாபரன்**

**த.சந்திரமோகன்**

**நா.தியாகராசா**



## இசை நாடகம்

யாழ்.இணுவில் இளந்தொண்டர் சபை வழங்கும்

**ஸ்ரீவள்ளி**

நன்றியுரை

நாடக சிரோமணி **கந்தையா ஸ்ரீகந்தவேள்** அவர்கள்

(அதிபர், பாவற்குளம், கலைமகள் வித்தியாலயம்)

நிகழ்ச்சித் தொகுப்பாளர்

சித்திரக்குரலோன், **சி.நாகராஜா** அவர்கள்

# அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்



விளம்பர உதவி :

**அறிவாலயம்**

(பாடசாலை உபகரணங்கள், புத்தகங்கள், விற்பனை செய்வோர்)

190B, புகையிரத நிலைய வீதி,

வைரவபுளியங்குளம், வவுனியா.



வாணி கணனிப் பதிப்பகம், வவுனியா 024 2223658

# No. 1 Restaurant



*We Serve Indian, Chinese, Western & Eastern Food.*

*Mannar Road,*
*Nelukkulam, Vavuniya.*
*T.P: 024 222 3099, 024 3200225*

மாருதம் சிறப்புற வாழ்த்துகிறோம்.


## ஜீ.எச்.ஏ.டீ.சில்வா அன் கோ

பஜார் வீதி, வவுனியா.


Printed by: Vaani - Vavuniya, Sri Lanka.- 024 2223658